
2012, October 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்




# 6%

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

9 772279 203000

உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கான
பிரத்தியேக திருமணசேவை

THIRUMANAM.LK™
இருமனம் சேர்ந்தால் திருமணம்

இன்றே உங்கள் அங்கத்துவத்தைப் பதிவு செய்து
வாழ்க்கை துணையை தெரிவுசெய்யுங்கள்...

www.thirumanam.lk




வாழ்வின் அழகிய தருணங்களை
மேலும் அழகாக்கிடும்
பத்தே நாட்களில்
வித்தியாசத்தை உணருங்கள்
100% NATURAL
Fadna
X-Tea
பெட்னா X டீ
நாடு முழுவதிலுமுள்ள பாமசிகள் மற்றும் கீல்ஸ், ஆர்ப்பிகோ,
லாப்ஸ் உட்பட அனைத்து சூப்பர் மார்க்கட்டுகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் Dr.சலீம்-077-6562777 www.fadna.com
Rs.285/=

# உள்ளடக்கம்


எமது விருந்தினர்
முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி
பி.பி.வரவேவ 08

வடக்கு கிழக்கில் நிலமும்
தேசிய இனப்பிரச்சினையும் 11
பேராசிரியர் என்.சண்முகரத்தினம்

அரசியல் தீர்வு முயற்சிகளில்
தென்னாபிரிக்காவின் பாத்திரம் 20
பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட

தமிழர் - முஸ்லிம் உறவு
எங்கே போகிறது? 24
என்.சத்தியமூர்த்தி

டில்லி டயறி 27
எம்.பி.வித்தியாதரன்

இலங்கையில் கல்வியின் எதிர்காலம் 32
கலாநிதி குமார் டேவிட்

இந்திய வெளியுறவுக் கொள்கையில்
மாநிலங்களின் செல்வாக்கு 37
சிந்தாமணி மகாபத்ரா

காவிரிக் கலாட்டா 40
முத்தையா காசிநாதன்

சே மறைந்து கடந்துவிட்ட
45 வருடங்கள் 47

ஒரு காதல் கட்டுக்கதை 51
மரியானா பாபர்

கஸ்தூரி கோபாலன் 54

அப்பாவாகப் போவது எப்போது? 56
டாக்டர் எம்.கே.முருகானந்தன்

போருக்கு பிந்திய கவிதைகள் 59
பேராசிரியர் சபா ஜெயராசா

அட்டக்கத்தி- சினிமா விமர்சனம்
மீனா 62

கடைசி பக்கம் 64
கலாநிதி ந.இரவீந்திரன்






08


47


51



*Samakalam focuses on issues that affect the lives of people of*

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2012, ஒக்டோபர் 01-15




32


20


27


40


54


56


64


Sri Lanka, the neighbourhood and the world

## ஆசிரியரிடமிருந்து...

# யார் தடை?

இலங்கையில் இதுகாலவரையில் பதவியில் இருந்திருக்கக்கூடிய அரசாங்கங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திலேயே கூடுதல் எண்ணிக்கையில் அமைச்சர்கள் பதவிவகித்திருக்கிறார்கள். எந்த நேரத்திலென்றாலும் கட்சி தாவினால் ஏதோ ஒரு பதவியும் வரப்பிரசா தமும் கிடைக்குமென்று எதிரணியின் எந்தக் கட்சி யைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினருமே மனங்கொள்ளத்தக்க ஒரு அருவருப்பான அரசியல் கலாசாரத்தை முன்னென்றுமில்லாத வகையில் ஊக்குவித்ததில் இன்றைய அரசாங்கம் செய்திருக்கக்கூடிய பங்களிப்புக்கு சமாந்தரத்தைத் தேடுவது என்பது கஷ்டமான காரியமாகும்.

அண்மையில் தேர்தல் நடைபெற்ற மாகாண சபைகளின் புதிய முதலமைச்சர்களுக்கும் அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்து அலரிமாளிகையில் சில தினங்களுக்கு முன்னர் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மாகாணசபைகளிலும் பலர் அமைச்சர்களாக ஆசைப்படுகிறார்கள் என்பதை மனதிற்கொண்டு, "அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு நான்கு அமைச்சர்களை மாத்திரம் நியமிப்பதற்கே எனக்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய அமைச்ச ரவையிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியலமைப்பு ரீதியாக ஒரு வரம்பு இருந்தால் சந்தோசமாக இருந்திருக்கும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலரும் அமைச்சர்களாக விரும்புகிறார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். அரசியலமைப்பில் அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடு ஒன்று இல்லை என்பதுதான் ஜனாதிபதியின் கவலையென்றால், அதற்கென ஒரு அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூலத்தைக் கொண்டு வருவதில் அவருக்கு என்ன தடையிருக்கிறது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கும்போது ஜனாதிபதி வீணாக ஏன் கவலைகொள்ள வேண்டும்? அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த திருத்தமொன்றைக் கொண்டுவருவதானால் யார் தடுக்கப்போகிறார்கள்?

# வாசகர் கடிதங்கள்

## குமார்டேவிட்டின் கருத்து

சமகாலத்தின் தொடர்வாசகன் என்ற வகையில் 16-30 செப்டெம்பர் இதழில் வெளியான குமார் டேவிட் எழுதிய 'கிழக்குத் தமிழர்களின் பிரதான குரலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற கட்டுரை தொடர்பில் எனது சிறு கருத்தை முன்வைக்கிறேன்.

கிழக்குமாகாண சபைத்தேர்தல் முடிவுகள் தொடர்பில் பல ஊடகங்களும் பக்கம் பக்கமாக எழுதியும் புரியாத பல விடயங்களை குமார் டேவிட் மிக நாசூக்காகவும் தெளிவாகவும் 4 பக்கங்களுக்குள் எழுதி தமிழ், முஸ்லிம் மக்களின் நிலைப்பாடு, அரசியல் கட்சிகளின் நிலை, இனிநடக்கப்போகும் விடயங்கள் தொடர்பில் அருமையாக விளக்கியுள்ளார். ஐ.தே.க.வை பொறுத்தவரை அதன் தலைவராக சஜித், கருஜயசூரிய வந்தால் கூட அது நொண்டிக்குதிரையே என்று அவர் கூறுவது நூறு வீதம் உண்மை. குமார்டேவிட்டுக்கு எனது பாராட்டுகள்.

கே.ஜஷிகேஷ், கல்கிஸை.

## ஆரோக்கியமான அரசியல் கட்டுரைகள்

சமகால அரசியல் மற்றும் சமூக விவகாரங்களைக் கொண்டுவரும் தரமான சஞ்சிகை ஒன்று தமிழில் இல்லை என்ற குறைபாட்டை 'சமகாலம்' போக்கியுள்ளது என்று நிச்சயமாகச் சொல்லலாம். புரொண்ட்லைன், இந்தியா ருடே, ரைம் போன்ற சஞ்சிகைகளைப் பார்த்து எமக்கென இவ்வாறான சஞ்சிகை ஒன்று இல்லையே என ஏங்கியவர்களின் ஆர்வத்தை சமகாலம் பூர்த்தி செய்துள்ளது.

சர்வதேச தரத்திலான கட்டுரைகள் பலவற்றுடன் வெளிவந்துள்ள 6ஆவது இதழின் அட்டைப்படக் கட்டுரையான 'ஹக்கீமின் அரசியல் பேரம்- முஸ்லிம்கள் கொடுத்த விலை என்ன' என்ற கட்டுரை கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் உருவாகிய ஹக்கீமின் முக்கியத்துவம் தொடர்பில் யதார்த்த பூர்வமான ஒரு ஆய்வாக அமைந்துள்ளது.

தானில்லாமல் ஆளும் கட்சி மாகாண சபையில் அரசாங்கத்தை அமைக்கக்கூடாது என்பதில் மட்டுமே ஹக்கீமின் கவனம் இருந்ததே தவிர, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பது என்பது அவரைப் பொறுத்தவரையில் இரண்டாம் பட்சமாகவே இருந்தது என கட்டுரையாளர் குறிப்பிட்டிருப்பது பல உண்மைகளைப் புலப்படுத்துகின்றது. இதில் மற்றொரு விடயத்தையும் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். முதலமைச்சர் பதவியை விட்டுத்தருவதற்கு கூட்டமைப்பு தயாராக இருந்தும் கூட, இரண்டு அமைச்சர் பதவிகளுடன் ஹக்கீம் திருப்திப்பட்டுக் கொண்டது ஏன் என்பதையும் கட்டுரையாளர் விளக்கியிருப்பது சம்பவங்களின் பின்னணியைப் புரிந்து கொள்வதற்கு எமக்கு உதவியிருக்கிறது.

இதனைவிட இந்தியப் பத்திரிகையாளரான முராரி எழுதிய "The Prabakaran SAGA" என்ற நூல் தொடர்பாக பெ.முத்துலிங்கம் எழுதியுள்ள 'பிரபாகரனின் கதை' என்ற தலைப்பிலான கட்டுரையும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. போர் முடிவுக்கு வந்த பின்னர் விடுதலைப் புலிகள் பற்றியும், பிரபாகரன் தொடர்பாகவும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வாறு வெளிவந்துள்ள நூல்களில் முராரியின் இந்த நூல் புதிய, முக்கியமான தகவல்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இந்நூலைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை அதிகரிப்பதாக கட்டுரை அமைந்துள்ளது.

இதுபோன்ற தரமான அரசியல் கட்டுரைகளைத் தரும் சமகாலம், தமிழ் சினிமா தொடர்பிலும் ஆரோக்கியமான விவகாரங்களைத் தரவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

எம்.தவபாலன்,
உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 07
2012, ஒக்டோபர் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்

உதவி ஆசிரியர்கள்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வாக்குமூலம்....

மாகாண சபைகளில் முதலமைச்சருக்கு மேலதிகமாக நான்கு அமைச்சர்களை மாத்திரமே நியமிப்பதற்கே அரசியலமைப்பு அனுமதிக்கிறது. நான்கு பேரை அமைச்சர்களாக நியமிப்பதைத் தவிர வேறு எதையும் என்னால் அதற்கு மேல் செய்யமுடியாது. இதேபோன்று மத்திய அமைச்சரவையை நியமிப்பதிலும் ஏதாவது எண்ணிக்கை மட்டுப்பாடு அரசியலமைப்பு ரீதியாக இருக்குமேயானால் மிகவும் நன்றாக இருக்கும்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் கூட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவோ அல்லது அவரது சகோதரர்களோ பண்டாரநாயக்க நினைவு வைபவங்களுக்கு கடந்த ஏழுவருடங்களாக வந்து கலந்துகொள்ளவில்லை. அவர்கள் பதவிக்கு வருவதற்கு வழிவகுத்தவர்கள் நாங்கள்தான்.



முன்னாள் ஜனாதிபதி
திருமதி குமாரதுங்க

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தினால் அரசியல் தீர்வொன்றைக் காணக்கூடியதாக இருக்கும். யதார்த்த நிலைவரங்களை விளங்கிக் கொண்டவர்கள் எமக்கு உதவியாக இருக்கிறார்கள். தவறாக வழிநடத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலையும் போலியான நிகழ்ச்சி நிரலையும் கொண்டவர்களுமே அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளைச் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள்.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

மனதைப்புண்படுத்துகின்ற பெருவாரியான பிரசுரங்கள் அமெரிக்காவில் வெளிவருகின்றன. என்னைப் போன்றே பெரும்பான்மையான அமெரிக்கர்கள் கிறிஸ்தவர்கள். இருந்தும் எமது தூய நம்பிக்கைகளுக்கு எதிரான நிந்தனைகளைக்கூட நாம் தடை செய்யவில்லை. எமது நாட்டின் ஜனாதிபதி என்ற முறையிலும் எமது இராணுவத்தின் பிரதம தளபதி என்ற வகையிலும் என்னைப்பற்றி தினமும் ஆட்கள் மோசமான விடயங்களைக் கூறப்போகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும், அவர்கள் அவ்வாறு செய்வதற்கு இருக்கின்ற உரிமையை நான் எப்போதும் பேணிப்பாதுகாப்பேன்.



ஐ.நா.பொதுச்
சபையில் பராக் ஒபாமா

எனது தந்தையார் என்னைக் கடுமையாகக் கண்டிப்பார். எனது பிரச்சினைகளில் தன்னால் சம்பந்தப்பட முடியாது என்றும் கூறி விடுவார். எனது விவகாரங்களுக்காக வேறு எவரினதும் உதவியையும் தந்தையார் நாடுவதில்லை. அவர் மிகவும் கண்டிப்பான மனிதர்.



அமைச்சர்
மேர்வின் சில்வாவின்
மகன் மாலக

எனது அமைச்சரவையிலும் தீவிரவாதிகள் எனப்படுவோர் இருக்கின்றனர். அவர்கள் ஒரு கட்டத்தில் என்னைப்பற்றி நன்றாகப் பேசாமல் இருந்தார்கள். ஆனால் பிறகு மகிந்த சிந்தனையை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். மகிந்த சிந்தனையை ஏற்றுக்கொள்பவர்கள் யாராக இருந்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொள்ளலாம். தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக் கூட எம்முடன் வந்து இணையலாம். எம்மிடம் வந்து போவதற்குச் சுதந்திரம் தாராளமாக இருக்கிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

இலங்கைத் தமிழர்கள் 25-30 வருடங்களுக்கும் மேலாக தமிழ்நாட்டில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். இது ஒன்றும் பெருமைப்படக்கூடிய விடயமல்ல. பெரும் எண்ணிக்கையிலான பங்களாதேஷ்காரர்களுக்கும் நேபாளத்தவர்களுக்கும் இந்தியாவில் நாம் பிரஜாவுரிமையை வழங்கியிருக்கின்றோம். இலங்கையில் இருந்துவந்த தமிழர்களுக்கு ஏன் அதேபோன்று இந்தியப் பிரஜாவுரிமையை வழங்க முடியாது?



ஆன்மீகக்குரு ஸ்ரீஸ்ரீ
ரவிசங்கர்

# நோர்வே கலாசார அமைச்சராக பாக். வம்சாவளிப் பெண்மணி

நோர்வேயில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த ஹடியா தஜிக் (வயது 29) என்ற பெண்மணி கலாசார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நோர்வேயின் அரசியல் சரித்திரத்தில் இவர் முதல் முஸ்லிம் அமைச்சராக மாத்திரமல்ல, மிகவும் இளவயதில் அமைச்சரவை உறுப்பினராகியிருப்பவர் என்ற பெருமையையும் பெறுகிறார். நோர்வே தொழிற்கட்சி உறுப்பினரான ஹடியா தஜிக் சட்டத்துறையிலும் இதழியல் துறையிலும் பட்டம் பெற்றவர்.

“பிரதமர் ஜென்ஸ் ஸ்ரொல்ரன்பேர்க் இவரை அமைச்சராக்கியிருப்பது மிகவும் உற்சாகம் தரும் காரியமாகும். ஹடியா இதழியல் கல்லூரியில் எனது மாணவிகளில் ஒருவர். மிகுந்த புத்திக்கூர்மையும் சுறுசுறுப்பாகச் செயற்படும் சுபாவமும் கொண்ட ஹடியாவை கலாசார அமைச்சராக நியமித்ததன் மூலம் நோர்வே உண்மையிலேயே பல்கலாசாரத் தன்மை கொண்ட ஒரு சமுதாயம் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது” என்று நோர்வேயின் பிரபல பத்திரிகையான NY Tidஇன் ஆசிரியர் டாக் ஹெர்போர்ன்ஸருட் தெரிவித்திருக்கிறார்.

நோர்வே மக்கள் தங்கள் வாழ்வில் கலாசாரப் பல்வகைமை (Cultural diversity) முழுமைவாய்ந்த அங்கம் என்பதை ஏற்றுக்கொண்டவர்களாக வாழ வேண்டுமென்று ஹடியா ஏற்கனவே பிரகடனம் செய்திருக்கிறார்.

எவ்வாறெனினும் இவர் தனது செயற்பாடுகளை மிகுந்த நிதானத்துடனேயே முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் பழைமைவாதச் சிந்தனை கொண்ட சக்திகள் வெளிநாட்டவர்களின் துரித வருகையும் அவர்களின் கலாசாரங்களும் நோர்வேயின் கிறிஸ்தவ சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக நினைக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

“ஹடியா ஒரு வெளிநாட்டவர் அல்ல, அவர் நோர்வேயின் மேற்குக்கரையோர சிறிய கிராமமொன்றில் பிறந்தவர். அந்தக் கிராமத்தின் சனத்தொகை சுமார் 600ஆகும். தற்போதைய குழப்பகரமான சூழ்நிலையில் ஹடியா சமாதானத்தைக் கட்டியெழுப்பப்பாடுபடுவார்' என்று அவரின்பேராசிரியர்ஒருவர்குறிப்பிட்டார்.

வெளிநாட்டவர்கள் மீது வெறுப்புக் கொண்ட அந்திரெஸ் பிரீவிக் கடந்த வருடம் ஜுலையில் மேற்கொண்ட படுகொலைகள் நோர்வேயின் பல்கலாசாரத்தன்மைக்கு ஒரு மறுவை ஏற்படுத்தியிருந்த சூழ்நிலையில் கலாசார அமைச்சராக ஹடியாவை நியமித்ததன் மூலம் பிரதமர் ஸ்ரொல்ரன் பேர் உலகிற்கு தெளிவான செய்தியொன்றைக் கூறி யிருக்கிறார் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.



# 2050இல் 100 வயதில் 30 இலட்சம் பேர்



உலகில் வயோதிபர்களின் தொகை அதிகரித்து வருவது குறித்து ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டு இருக்கும் அறிக்கையொன்றில் 2050ஆம் ஆண்டளவில் உலகில் சிறுவர்களைவிடக் கூடுதலான எண்ணிக்கையில் ஓய்வூதியர்கள் இருப்பார்கள் என்று வியப்பைத்தரும் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

21ஆம் நூற்றாண்டில் உலகில் முதுமைப்படுதல்; ஒரு கொண்டாட்டமும் ஒரு சவாலும் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டிருக்கும் அந்த அறிக்கையில் இன்று உலகில் நூறு வயதை அடைந்த மூன்று இலட்சத்து பதினாறாயிரம் பேர் இருப்பதாகவும் இத்தகையவர்களின் தொகை 2050ஆம் ஆண்டளவில் பத்து மடங்காகி சுமார் 30 இலட்சமாக அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வயோதிபர்களினால் சமூகத்திற்கு குறிப்பிடத்தக்கநன்மைகள்கிட்டுகின்றன. ஆனால் வயோதிபர்களின் தொகை அதிகரித்து வருவது என்பது சுகாதார பராமரிப்பு மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் போன்ற விவகாரங்களில் நாடுகளுக்கு பாரதூரமான சவால்களைத் தோற்றுவிக்கும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூன் தெரிவித்திருக்கிறார்.

உலக சனத்தொகை முதுமை அடைதல் என்ற பிரச்சினை உலகளாவிய ரீதியில் அலட்சியம் செய்ய முடியாததாகிவிட்டது. பொதுவான சனத்தொகை அதிகரிப்பு விகிதத்தைக் காட்டிலும் வயோதிபர்களின் அதிகரிப்பு வீதம் கூடுதலானதாகவிருக்கின்றது. இது வாழ்வின் தரம் உயர்ந்திருக்கிறது என்ற வரவேற்கத்தக்க அம்சத்தை உணர்த்துகின்றது என்ற போதிலும் பொருளாதார ரீதியில் பாரிய சவால்களைத் தோற்றுவிக்கக்கூடியது என்றும் செயலாளர் நாயகம் கூறியிருக்கிறார்.


வயோதிபர்களின் எண்ணிக்கை பத்து வருடங்களில் நூறு கோடியைத் தாண்டும் என்றும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# ஆயிரம் அமைச்சர்கள் கூடப் போதாது

கல்வித்துறையில் பெருமளவு பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஓராயிரம் அமைச்சர்களை நியமித்தால் கூட அந்தப் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியாது. மாகாண சபைகளும் கல்விப் பணிகளைச் செய்கின்றன. அதற்கு ஒரு முடிவில்லை. கல்வித்துறை ஒரு பரந்த சமுத்திரம் என்று நீர்ப்பாசனம் மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா கூறியிருக்கிறார்.

சில தினங்களுக்கு முன்னர் பதுளையில் ஊவா மகாவித்தியாலயத்தில் புதிய கட்டிடமொன்றிற்கான அடிக்கல்லை நாட்டி வைத்த அமைச்சர் அந்த மாவட்டத்தில் ஹோகண பகுதியில் ஒரு பாடசாலையில் ஒரு மாணவன் மாத்திரம் படிக்கிறான். அவனுக்கு மூன்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டதுடன், அந்த மாணவனை ஆனந்தா, அல்லது நாளந்தா கல்லூரிகளுக்கு விடுதிக் கட்டணத்தையும் கொடுத்து அனுப்பிவிட்டு பாடசாலையை மூடுவது நல்லது என்று யோசனை கூறினார்.

ஒரு மாணவனுக்குமூன்று ஆசிரியர்கள் என்று இருக்கின்ற நிலைவரங்களை மாற்றி அமைக்கக் கூடியதாக கல்வித் துறையில் பலகொள்கைமாற்றங்களைச் செய்யவேண்டிய நேரம் இது. பாரிய மாற்றங்களை வேண்டி நிற்கிறது கல்வித் துறை. இத்துறையை முற்றுமுழுதாக மாற்றி அமைப்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. பல பாடசாலைகளில் மாணவர்களின் தொகைக்கு எந்த விதத்திலும் பொருத்தமில்லாத விகிதாசாரத்தில் ஆசிரியர்கள் மிகையாகக் காணப்படுகிறார்கள். இன்று ரியூசன் வகுப்புகள் மூலை முடுக்கெல்லாம் நடைபெறுகின்றது. பாடசாலை நேரங்



களில் கூட ரியூசன் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. இந்த அவலங்களையெல்லாம் மாற்ற வேண்டியிருக்கிறது என்றும் அமைச்சர் கூறினார்.

# ஐ.நா.வின் நல்லெண்ண தூதுவராக ஐஸ்வர்யாராய்



இந்தியாவின் பிரபல நடிகையும் முன்னாள் உலக அழகுராணியுமான ஐஸ்வர்யாராய்பச்சான் எயிட்ஸ் நோய்க்கு எதிரான இயக்கத்தை முன்னெடுத்திருக்கும் யூ.என்.எயிட்ஸ் (UNAIDS) நிறுவனத்துக்கான நல்லெண்ணத்தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டு நியூயோர்க்கில் சில தினங்களுக்கு முன்னர் செய்தியாளர் மகாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஐஸ்வர்யா வெறுமனே ஒரு "சுவரொட்டிப் பெண்"ணாக இருந்துவிடாமல், எயிட்ஸ் நோயுடன் சம்பந்தப்பட்ட சமூகத் தடைகளையும் கறைகளையும் தகர்ப்பதற்கு உதவக்கூடிய செயற்பாடுகளில் இறங்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

யூ.என்.எயிட்ஸின்நிறைவேற்றுப்பணிப்பாளரானமிச்சேல் சிடிபே ஐ.நா.வின் நல்லெண்ணத் தூதுவராக ஐஸ்வர்யா நியமிக்கப்பட்டிருப்பதை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். ஐக்கிய நாடுகளுடன் இணைந்து பணியாற்றக் கிடைத்த வாய்ப்பை "கௌரவமாகவும் வரப்பிரசாதமாகவும்" கருதுவதாக மகிழ்ச்சியுடன் கூறினார்.

எயிட்ஸ்நோய் பற்றிய விழிப்புணர்வை பெண்கள் மத்தியில் அதிகரிப்பதற்குச் செய்ய வேண்டிய மேலதிகப் பணிகள் எவை என்பதையும் இதுதொடர்பில் பெண்கள் மத்தியில் எவ்வாறு சேவையாற்றுவது என்பதையும் பற்றி யூ.என்.எயிட்ஸ் நிறுவனத்துடன் தனது சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டிருப்பதாகக் கூறிய ஐஸ்வர்யா, ஏற்கனவே பல செயற்திட்டங்களில் இணைந்து பணியாற்றுமாறு ஐக்கிய நாடுகள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது என்றும் அப்போது பல திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருந்ததால் நேரம் கிடைக்கவில்லை. தற்போது வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

# விருந்தினர் பக்கம்

சட்டம் என்பது அனைவருக்கும் உயர்வான ஸ்தானத்தில் இருக்கிறது. சட்ட ஆட்சி என்று வரலாற்று ரீதியாக வழிவந்த தத்துவமொன்றாகும். ஜனநாயக வளர்ச்சியுடன் ஜனநாயக உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றின் பாதுகாப்புக்காக சட்டத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டது.


மன்னர் ஆட்சி நிலவிய ஒரு கால கட்டத்தில் கடவுள் தான் சட்டம் என்றும், கடவுளின் ஆணையைத்தான் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்றும் கருதினார்கள். எனினும் பின்னர் மன்னர்களுக்கும் மத ஸ்தலங்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் இறுதியில் மன்னர் தான் சட்டங்களை விதிப்பவர் என்ற நடைமுறை உருவானது. மன்னர் என்பவர் அனைவரிலும் உயர்ந்தவரானார்.

இருந்தபோதிலும், 16ஆம், 17ஆம் மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் சட்ட ஆட்சி பிறிதொரு பிரவேசத்தை ஆரம்பித்தது. மன்னரும் கூட சட்டத்துக்கு உட்பட்டவர் என்ற நிலைமை உருவானது. அதாவது, மன்னர் சட்டத்தை விதிப்பார். அந்தச் சட்டத்துக்கு அனைவருமே உட்பட்டவர்களாக கருதப்பட்டனர். ஜனநாயக ஆட்சி முறைகள் உருவாக ஆரம்பித்ததுடன், அனைவரும் சட்டத்துக்கு கீழானவர்கள் என்ற நடைமுறை ஏற்றுக்கொள்ளப்பட ஆரம்பித்தது.

இங்கிலாந்து மகாராணியார் அந்த நாட்டு சட்டத்துக்கு மேலானவராக இருக்கிறார். மகாராணியார் ஆட்சியதிகாரத்தை கொண்டிருக்கவில்லை என்பதால் அவர் சட்டத்துக்கு உட்பட்டவர் இல்லை என்ற தத்துவமே அங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்ய முடியாது. பாராளுமன்றம் பிரதமரின் கீழ் நிர்வகிக்கப்படுவதுடன், பாராளுமன்றத்தின் மூலம் தான் இங்கிலாந்தின் ஆட்சி நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சட்ட உருவாக்கத்தில் பாராளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலான முரண்பாடு 1801ஆம் ஆண்டு இணக்கப்பாட்டுச் சட்டத்தின் (Act of settlement) மூலம் இங்கிலாந்தில் தீர்த்து வைக்கப்பட்டது. அதில் ஒன்று தான் நீதிமன்ற விசாரணையிலுள்ள வழக்குப் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்க முடியாத அதேநேரம், நீதிமன்ற நீதிபதிகள் பற்றி பாராளுமன்றத்தில் விமர்சிக்க முடியாது என்பதாகும். அடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் விமர்சிக்க முடியாது என்பதும் இதில் அடங்கும்.

எனினும், சட்டத்துக்கு மேலாக யாரும் கிடையாது, சட்டத்துக்கு முன்னால் சகலரும் சமமானவர்களே, சட்டம் தான் அனைத்திற்கும் அடிப்படையாக கொள்ளப்படும்என்பதேதற்போது அங்கிருக்கும் நிரந்தர நிலைமையாக இருக்கிறது.



இலங்கையிலுள்ள நிலைமையை எடுத்துக்கொண்டால் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு இருந்தது. 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு தற்போது இருக்கிறது. 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு மூலம் ஜனாதிபதி ஆட்சி பாராளுமன்ற முறைமையே உருவானது. பிரான்ஸின் ஆட்சி முறையும் வெஸ்ட்மினிஸ்டர் ஆட்சிமுறையும் கொண்ட கலப்பாகவே இந்த ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது. அதன்மூலம் தெரிவானஜனாதிபதி எமது அரசியலமைப்பின் பிரகாரம் சட்டத்துக்கு மேலானவராக இருக்கிறார்.

அதாவது, ஜனாதிபதிக்கு எதிராக எந்தவொரு நீதிமன்றத்திலும் எந்த வழக்கும் தாக்கல் செய்யமுடியாது என்ற நிலையே இங்கு இருக்கிறது. எனினும், அமெரிக்கா போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்நாட்டு ஜனாதிபதியும் சட்டத்துக்கு உட்பட்டவராகவே இருக்கிறார். சாதாரண மக்களுக்கான சட்டத்தின் கீழேயே அவரும் உள்வாங்கப்படுகிறார். எனினும் இலங்கையைப் பொறுத்தவரை ஜனாதிபதிக்கு சட்டத்தில் இருந்து சிறப்பு விடுபாட்டு உரிமை கிடைக்கிறது.

ஆகவே, ஜனாதிபதிக்குஎதிராகவழக்குத் தாக்கல் செய்ய முடியாது. விசாரணை செய்ய முடியாது என்ற சிறப்புரிமைகள் அரசியலமைப்பின் மூலமே வழங்கப்பட்டுள்ளன.

எமது அரசியலமைப்பில் அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மக்களின் மேலாண்மை பாராளுமன்றத்தின் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டவாக்கமும் நீதிமன்றமும் மக்களின் மேலாண்மையை பயன்படுத்துகின்றன என்றே அது கூறுகிறது. அதேபோல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரும் இருக்கிறார்.

## நீதித்துறை

உண்மையில் சரியாக அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்க அதிகாரம் மற்றும் நீதிமன்ற அதிகாரம் ஆகிய மூன்றும் ஒன்றை இன்னொன்று மேலோங்கிச் செல்ல அரசியல் ரீதியாக இடமிருக்க முடியாது. எனினும், எழுத்து வடிவில் இருப்பதை செயற்பாட்டில் காணக் கிடைப்பதாக இல்லை. சட்ட ஆட்சி வீழ்ச்சி கண்டுள்ளமையே இதற்குக் காரணம்.

சட்ட ஆட்சிக்கும் அரசியலமைப்புக்கும் அமைய உயர் மட்ட நீதிமன்றங்களுக்கு நீதியரசர்களை நியமிப்பதிலும் பல்வேறு அரச நிறுவனங்களுக்கும் பிரதானிகளை நியமிப்பதற்கும் ஜனாதிபதிக்கு எல்லையற்ற அதிகாரங்கள் காணப்படுகின்றன. இதில் ஜனாதிபதி தமது விருப்பம்போல செயற்படலாம்.

சட்டத்துறை மற்றும் நீதித்துறை

டபிள்யூ ரி.எம்.பி.பி.வரவேவ
ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி

# மீது அரசியல் தலையீடுகள்

தொடர்பான நியமனங்கள் சுயாதீனமாக இல்லை என்றும் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் மேற்படி நிலைமைக்கு சில காலத்தின் பின்னர் மக்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியதன் பின்னரே 17ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது.

17ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டதன் பின்னர், உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கான நீதியரசர்கள், தேர்தல்கள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் மற்றும் சட்ட மா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், பொலிஸ் மா அதிபர் போன்ற நியமனங்கள் 17ஆவது திருத்தத்துக்கு அமைவான அரசியலமைப்பு பேரவையின் சிபார்சுகளின் பேரிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நடைமுறை வந்தது.

எனினும், கடந்த ஜனாதிபதியினது காலத்திலும் சரி, தற்போதைய நிலையிலும் சரி, அரசியலமைப்பு பேரவைக்கான உறுப்பினர்களை நியமித்துக்கொள்வது தொடர்பான முரண்பட்ட நிலைமையின் பேரில் அந்த பேரவை செயற்படாத சந்தர்ப்பங்களிலும் ஜனாதிபதியானவர் தாம் விரும்பியவர்களையே மேற்படி நியமனங்களுக்கு தெரிவு செய்திருந்தார்.

இங்கு அதிகார சமநிலை பேணப்படவில்லை. அதிகாரம் வரையறை செய்து கொள்ளப்படவுமில்லை. ஜாதிக ஹெல உறுமயவின் ஒரேயொரு உறுப்பினரைத் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவுடனேயே 17ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனினும், அதன் பிரகாரமான அரசியலமைப்பு பேரவைக்கான உறுப்பினர் நியமனத்தில் ஏற்பட்ட இழுபறியினால் ஜனாதிபதிக்கு இந்த அதிகாரம் கிடைத்துவிட்டது.

அதன் பின்னர் 17ஆவது அரசியலமைப்பை வலுவிழக்கச் செய்யும் நோக்குடன் 18ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. புதிய திருத்தம் மூலம் உருவாக்கப்பட்டுள்ள பாராளுமன்ற பேரவையின் சிபார்சின் பிரகாரமே சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் உட்பட உயர் பதவிகளுக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நடைமுறையே தற்போது இருக்கிறது. எனினும் ஆட்சியில் இருக்கும் கட்சியின் உறுப்பினர்கள் தான் பாராளுமன்றப் பேரவையில் அதிகமாக இருக்கின்றனர்.

அதிலும், பிரேரிக்கப்பட்ட விடயமொன்று பற்றி 14 நாட்களுக்குள் பதிலளிக்கவில்லை என்றால் அதன் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளுக்கு சென்றுவிடும் என்ற நிலைமையே காணப்படுகிறது. இந்த 18ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தான், ஒருவர் ஜனாதிபதி பதவிக்கு எத்தனை தடவையும் போட்டியிடலாம் என்ற கால நீடிப்பும் கொண்டுவரப்பட்டது.

இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது ஜனாதிபதி என்பவர் சட்டத்துக்கு மேலானவராகவே இருக்கிறார். அவருக்குத் தேவையான வகையில் தான் நீதியரசர்கள், நீதிபதிகள் நியமனங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமனங்களும் அவ்வாறே மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான நியமனங்களின் காரணமாகத் தான் நீதிமன்றத்தின் சுயாதீனம் வீழ்ச்சி கண்டுள்ளது.

அடுத்ததாக நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. நீதித்துறை மீதான அரசியல் தலையீட்டுச் சம்பவங்களும் அண்மையில் நடந்தேறியிருக்கின்றன. இந்த நிலையிலேயே நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் முறைகேடான வகையில் தலையீடு செய்தல் அரசியலமைப்பின் 115ஆவது சரத்தின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றம் என்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஊடகங்களில் அறிவுறுத்தல் விளம்பரம் ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

எனினும், நீதிமன்ற விடயங்களில் தான் தலையீடு செய்வதில்லை என்றும், நீதிமன்ற சுயாதீனத்தை தான் மதிப்பதாகவும் ஜனாதிபதி இதற்கு பதில் வழங்கியிருந்ததுடன், ஆணைக்குழு உறுப்பினர்களைப் பேச அழைப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். எனினும் இவர்கள் அவரிடம் செல்லவில்லை.

இவற்றையெல்லாம் கொண்டு பார்க்கும் போது நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுவதில் சிரமம் இருப்பது தெரிகிறது. இந்த நிலைமை நாட்டுக்கு உகந்ததல்ல. இதற்கு முன்னரும் பல தலையீடுகள் இருந்திருக்கின்றன. மன்னார் சம்பவம் இதற்கொரு உதாரணம். ஆகவே, நீதித்துறை விடயங்களில் அரசியல் தலையீடுகளைத் தவிர்த்து, நீதிமன்ற சுயாதீனத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

இதேநேரம், இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்று அவசியமாக இருக்கிறது. அதற்காகத்தான் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன் பிரகாரம் மாகாண சபைகளும் நிறுவப்பட்டன. ஆனால், வடக்கு மாகாணத்துக்கு இதுவரை தேர்தல் நடக்கவில்லை. யுத்தம் முடிந்த பின்னர் கிழக்கு மாகாண சபைக்கு 2 தேர்தல்கள் நடைபெற்றுவிட்டன. அதேபோல், யுத்தம் இல்லாத நிலையில் வடக்கு மக்களும் அவர்கள் விரும்பும் ஒரு பிரதிநிதியை அம்மாகாண முதலமைச்சராக தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அதில் எந்தக் கட்சியும் போட்டியிடலாம். வடக்கில் தேர்தல் நடக்கும் பட்சத்தில் இந்தப் பிரச்சினைகள் தீரும்.


அதேபோல், நாட்டின் கல்வித்துறையிலும் இன்று பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் நாட்டின் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மூடிக் கிடக்கின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்வித்துறைக்கு ஒதுக்குமாறு கோரியே அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்வி என்பது நாட்டின் எதிர்கால முதலீடு. நாட்டின் எதிர்காலத்துக்கும் இளைய தலைமுறையினரின் முன்னேற்றத்துக்குமான முதலீடு கல்வி தான். ஆகவே இவ்விடயத்தில் திட்டமிட்டு நியாயமாகச் செயற்பட வேண்டும்.

மக்களின் தேவைகளுக்கு ஏற்ப இலவசக் கல்வி வசதிகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் இன்றோ இலவசக் கல்வி என்பது கொஞ்சம் கொஞ்சமாக கனவாகிக் கொண்டு செல்கிறது. இலவசக் கல்வி பாதுகாக்கப்பட வேண்டும்.

கல்வித்துறைக்கு மேலதிகமாக செலவிட முடியாது என்று அரசாங்கம் கூறுமாயின் அதை ஏற்க முடியாது. ஏனெனில், தேவையற்ற பல்வேறு விடயங்களுக்கும் பணம் வீண் விரயம் செய்யப்படுகிறது. ஆகவே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்வித்துறைக்கு 6 சதவீதத்தை ஒதுக்க முடியாவிட்டால் குறைந்தபட்சம் 4 சதவீதத்தையாவது ஒதுக்க வேண்டும்.

அதேபோன்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விடயத்தில் அரசாங்கம் சாதுர்யமாக நடந்து கொள்ளாவிட்டால், அவர்கள் பதவிகளில் இருந்து விலகி நாட்டை விட்டுச் செல்லக்கூடும். மாணவர்களுக்கும் கல்வி மீது நம்பிக்கை இல்லாமல் போய்விடும். இன்றும் கூட க.பொ.த. உயர்தரப்பரீட்சை எழுதிய மாணவர்களின் விடைத்தாள்கள் திருத்தப்படாமல் பரீட்சைகள் திணைக்களத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இதனால் க.பொ.த. உயர்தர மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்க வேண்டி ஏற்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மாணவர்களோ ஆண்டிறுதி பரீட்சை எப்போது நடக்கும் என்ற சந்தேகத்தில் காத்துக் கிடக்கின்றனர். இப்படியே சென்றால் கல்வியறிவு அற்ற சமுதாயமொன்றே உருவாகும்.



அரசியல் விவாதத்தை நோக்கி...

சீவனோபாயத் தேவைக்கும் அப்பால்

# வடக்கு கிழக்கில் நிலவும் தேசிய இனப்பிரச்சினையும்

"கடந்த காலத்தையும் இன்றைய நிலைமைகளையும் விமர்சன ரீதியில் ஆராய்ந்து அரசியல் ரீதியில் முன்னோக்கிச் செல்லும் வழிகளுக்கான தேடலைப்பற்றிய ஒரு திறந்த விவாதத்தின் தேவையை எடுத்துக்கூறுவதே எனது நோக்கம்"



பேராசிரியர் என்.சண்முகரத்தினம்

சமீபகாலங்களில்வடக்கு-கிழக்கில் நில அபகரிப்பு ஒரு முக்கிய பிரச்சினையாக எழுந்துள்ளது. அதற்கு எதிராக மக்களுடன் சில அரசியல் அமைப்புகள் மற்றும் மனித உரிமைக் குழுக்கள் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதையும் காண்கிறோம். போருக்குப்பின் வேறு வழிகளுக்கூடாகப் போர் தொடர்கிறது என வடக்கு, கிழக்கு நிலைமைகளைப் பற்றி அவதானிகள் குறிப்பிடுகிறார்கள். அங்கு நிலஅபகரிப்புக்கு எதிராக எழும் குரல்கள் நிலம் மக்களின் வாழ்வாதாரத்திற்கு அவசியமான உற்பத்திச்சாதனம் மட்டுமல்ல, அதற்கும் அப்பால் அது அவர்களின் கூட்டு அடையாளத்தின் பொருள் ரீதியான அடித்தளமாய் அத்துடன் இணைந்த சலபமாக அளவிடமுடியாத அகரீதியான குறியீட்டு விழுமியங்களின் உறைவிடமாய் விளங்குகிறது எனும் உணர்வையும் எதிரொலிக்கின்றன. அத்துடன் நிலஅபகரிப்பு ஒரு வித மனித பாதுகாப்புப் பிரச்சினையுமாகிவிட்டது. இந்தச் சூழ் நிலையில் மனித பாதுகாப்பே மக்களின் சீவனோபாயச் செயற்பாடுகளின் முன்நிபந்தனையாகிறது. இந்த நிலை பல குடும்பங்களின் வாழ்வாதார மற்றும்நீண்டகாலதனிமனிதவிருத்திக்கு உதவும் சந்தர்ப்பங்களைக் கட்டுப்படுத்துகிறது அல்லது மறுக்கிறது. இதுவும் புலப்பெயர்வுக்கு ஒரு காரணமாகலாம்.

உற்பத்திச்சாதனம் என்ற வகையில் நிலம் குறிப்பிட்ட உடைமை உறவுகளுக்குள்ளாகிறது. நிலத்தின் உடைமை உறவுகள் பொதுவாக வர்க்க ரீதியானவை. அதேவேளை, இந்த உறவுகள் பால்வேறுபாடு, சாதிவேறுபாடு மற்றும் குறிப்பிட்ட சமூகங்களின் மரபுகள், நிலவளங்களின் பயன்பாடு தொடர்பான சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் போன்றவற்றாலும் பாதிக்கப்படுகின்றன. இத்தகைய உடைமை உறவுகள் அதிகார உறவுகளே. நவீன உலகில் உற்பத்திச்சாதனமாக நிலம் துண்டாடப்பட்டோ அல்லது பெரிய அளவிலோ பண்டமயமாக்கப்படுகிறது, அதாவது குறிப்பிட்டகாணிகளின்உடைமைஉரிமைகள் சந்தைப்படுத்தப்படுகின்றன. தனியுடைமையாக்கல் நிலத்தின் பங்கீட்டில் அசமத்துவங்களை உருவாக்குகிறது.

இலங்கையில் நிலமற்றோரைச் சகல இனங்களிலும் காணலாம். யாழ்ப்பாணத்தின் சாதி அமைப்பில் சந்ததி சந்ததியாக நிலஉரிமை மறுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதிகள் உண்டு. கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக உலகரீதியில் நடைமுறையிலிருக்கும் நவதாராளவாதக் கொள்கையின் விளைவாக பெருமளவிலான நிலஅபகரிப்புகளில் தனியார்துறை மற்றும் சீனா, இந்தியா, சில அரபுநாடுகள் போன்றவற்றின் அரசதுறை முதலீட்டு நிறுவனங்கள் மும்முரமாகப் பல ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் ஈடுபட்டுள்ளன. இலங்கையின்வடக்கு-கிழக்கு உட்பட பல பகுதிகளில் பெருமுதலீட்டாளர்களினால் நிலஅபகரிப்புகள் இலங்கை அரசின் பூரண ஒத்துழைப்புடன் இடம் பெறு

கின்றன.

ஆனால் மறுபுறம் குறிப்பிட்ட பிரதேசத்தை வாழிடமாகக் கொண்ட ஒரு மக்களின்சமூக, பொருளாதார, கலாசாரப் பரிணாமப் போக்குகள் அந்தப்புலத்திடம் தமக்கே உரிய விழுமியங்களைப் பதிக்கின்றன. நிலம் வெறும் சடப்பொருளல்ல. அது உற்பத்திச்சாதனமாக, வாழ்புலமாக, சூழலாகப், பன்முகரீதியான பல சமூகத் தன்மைகளைக் கொண்டுள்ளது. இந்த வகையில் அது சமூகரீதியாக உருவாக்கப்படுகிறது. காலத்திற்கூடாக மீள்உருவாக்கப்படுகிறது, மாற்றமடைகிறது. சமூகத்தின் வர்க்க, பால், சாதி முரண்பாடுகளை பிரதிபலிக்கும் அதேவேளை, அதே சமூகத்தின் இன, மத அடையாளங்களையும்நினைவுகளையும்அந்தப்புலம் உள்ளடக்குகிறது. ஒரு பிரதேசத்தின் கலாசார உருவாக்கத்தில் வரலாற்று ரீதியான நினைவுகளுடன் கட்டுக்கதைகளும், நம்பிக்கைகளும் பங்கு வகிக்கின்றன. கலாசார ரீதியான, கருத்தியல்ரீதியான வழிகளுக்கூடாகவே யதார்த்தத்தின் அசமத்துவங்களையும் ஊடறுத்துச் செல்லும் இலம்பனரீதியான (மேலிருந்து கீழாக) ஒருமைப்பாடு கட்டமைக்கப்படுகிறது. இதன் வழியே குறிப்பிட்ட குழுக்களின் புலப்பற்று மற்றும் புலம்மீதான உரிமை கொண்டாடல் போன்றவை பரிணமிக்கின்றன. ஆகவே "நிலம்" என்பது கோட்பாடு ரீதியில் ஒரு சிக்கலான விடயமாகும்.

புலப்பற்றும் உரிமை கொண்டாடலும் சிறுகுழுவைக் கொண்ட உள்ளூர் மட்டத்திலிருந்து தொடர்ச்சியான ஒரு பரந்த பிரதேசம் வரை சில பொதுத்தன்மைகளின் அடிப்படையில் பரவலாம். இந்த பொதுத்தன்மைகள் மொழி, மதம், சாதி, பொதுநலன்கள் சார்ந்தவையாக இருக்கலாம். மறுபுறம் மொழி மத வேறுபாடு இருப்பினும் பொதுநலன்கள் காரணமான சமூகப்பொருளாதார உறவுகளுக்கூடாகப் பரஸ்பரப் புரிந்துணர்வு, அங்கீகாரம், மரியாதை போன்ற விழுமியங்களின் அடிப்படையில் ஒரு பல்லினக் குழுவும் கூட்டாக ஒரு பொதுப்புலத்தை உண்டாக்கும் சாத்தியப்பாடுகள் உண்டென்பதை மறுக்க முடியாது. இத்தகைய குழுக்கள்காலப்போக்கில்தமது பன்முகத் தன்மைகளைப் பிரதிபலிக்கும் பொதுக் கலாசார செயற்பாடுகளில் ஈடுபடுவதும் சாத்தியமே. அங்கு கலப்புத்திருமணங்கள் இடம் பெறுவது மட்டுமல்ல கலப்பு மொழிவழக்குகள் தோன்றுவதும் இயற்கையே. இவையெல்லாம் புலத்தோற்றத்தின் மாற்றப்போக்கின் உள்ளீடு

வடக்கு
கிழக்கில்
நிலமும் தேசிய
இனப்பிரச்சினையும்

களாகின்றன.

இன்னொருபுறம் பல்லின குழுக்கள் வாழும் பிரதேசத்தில் அரசியல் அதிகாரம் ஒரு குறிப்பிட்ட இனக்குழுவிற்குச் சாதகமாகவும் மற்றவற்றிற்குப் பாதகமாகவும் இருக்குமேயானால் அந்தப்புலத்தின் அதிகார உறவுகளில் இனத்துவமும் இணைந்து விடுகிறது. இது குழுக்களுக்கிடையிலான அதிகார அசமத்துவத்தை ஆழமாக்கி முரண்பாடுகளுக்கு வழிவகுக்கிறது. இதனால் இனத்துவ, மதத்துவ அடையாளங்கள் பலமடைந்து போட்டியிடும் நிலை உருவாகிறது. ஒரு குழுவின் இன ரீதியான அடையாளம் அது பிறிதொரு இனக்குழுவினை நேருக்கு நேர் சந்திக்கும்போதேஉருவாக்கம்பெறுகிறது அல்லது ஆழமடைகிறது என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

வாழ்புலங்களின் அரசியல் பொருளாதாரத்தையும் புவியியலையும் குறிப்பிட்ட உள்ளூர் மட்டத்தில் மட்டுமே வைத்துப் பூரணமாகப் புரிந்து கொள்ள முடியாது. எந்தவொரு புலமும் ஆட்சிப்பரப்பின் அங்கமாக இருக்கும் அதேவேளை, நவீன காலத்தின் உலகமயமாக்கலை

> இனத்துவ மேலாதிக்க அரச உருவாக்கமும் நிலப்பிரச்சினையும் வடக்கு, கிழக்கில் நிலம், தேசிய இனப் பிரச்சினையுடன் பின்னிப்பிணைந்த கதை இலங்கையின் காலனித்துவத்துக்கு பின்னரான அரச உருவாக்கத்தின் கதையுடனும் அதற்கு அப்பிரதேசத்து தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்து எழுந்து வந்த எதிர்ப்புகளின் கதையுடனும் தொடர்புடையது

உந்தித் தள்ளும் சக்திகளின் செல்வாக்குக்கு உட்படுகிறது. மூலதனம் லாபம் தரக்கூடியநிலவளங்களைத்தேடிநகர்ந்த வண்ணம் இருக்கிறது. நிலம் மற்றும் இயற்கை வளங்களின் உடைமைகள் கைமாறுவது ஒரு பொதுப்போக்கு. இது நிலத்தோற்றத்தையும் மற்றைய புவியியல் அம்சங்களையும் மாற்றுகிறது. உள்நாட்டுப் போர் மற்றும் பொருளாதார காரணிகளால் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் குழுக்களுக்கும் அவர்கள் விட்டுச் சென்ற உறவினர்களுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் கருத்து ரீதியான தொடர்புகள் உள்ளூரின் அதிகார உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இம்மாற்றங்கள் சொத்துடைமை உறவுகளிலும் நிலவளங்களின் உபயோகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தலாம். இன்றைய உலகமயமாக்கல் யுகத்தில் இத்தகைய உள்ளூர் வெளிநாட்டுத் தொடர்புகள் முன்பைவிட மேலும் வலுவடைகின்றன. ஆகவே புலத்தின் உருவாக்கமும் மீள் உருவாக்கமும் பல மட்டங்களில் இயங்கும் அதிகார மற்றும் சமூக உறவுகளின் தொடர்பாடலின் தாக்கங்களின் பதிவுகளைக் கொண்டுள்ளன. இங்கு அரசின் சார்பாக மேலாட்சி செலுத்தும் கருத்தியலுக்கும் அதை எதிர்த்து நிற்கும் கருத்தியல்களுக்குமிடையிலான முரண்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேலே குறிப்பிட்ட பொதுப்படையான கோட்பாட்டு ரீதியான கருத்துகள் இலங்கையின் வடக்கு- கிழக்குக்குப் பொருத்தமாயிருக்கும் அதேவேளை, நிலத்திற்கும் தேசிய இனப்பிரச்சினைக்குமிடையிலான வரலாற்று ரீதியான உறவை நோக்கும் போது இப்பிரதேசத்தின் நிலப் பிரச்சினையில் சில பரிமாணங்கள் விசேட முக்கியத்துவம் பெறுகின்றன. நிலம் தேசிய இனப்பிரச்சினையின் சிக்கலான உறவின் அரசியல் பொருளாதாரமும் அதை உள்ளடக்கும் அரசியல் புவியியலும் பிரதான முக்கியத்துவம் உடையன எனக் கருதுகிறேன்.

இலங்கையின் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் நிலமும் தேசிய இனப்பிரச்சினையும் பின்னிப்பிணைந்துள்ளன என்பது பலரும் அறிந்ததே. இந்தப்பிணைப்பு அரசினால் தொடர்ச்சியாகப் பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் இனரீதியான குடியேற்றத் திட்டங்களுடன்தொடர்புடையதுஎன்பதும் பொது அறிவு. ஆயினும் இந்தத் திட்டங்களின் செயல்முறைப் போக்குப்

பற்றியும் இவற்றின் விளைவாக கிழக்கிலும் வடக்கிலும் ஏற்பட்டுள்ள இனப்புவியியல் ரீதியான சமூக மாற்றங்கள் மற்றும் தமிழ், முஸ்லிம், சிங்கள இனங்களுக்கிடையிலான உறவுகள் பற்றியும் வேறுபட்ட ஒன்றுக்கொன்று முரண்படும் எடுத்துரைப்புகள் நிலவுகின்றன. இவை எல்லாவற்றையும் அலசி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அதற்குப் பதிலாக நிலம்- தேசிய இனப்பிரச்சினை உறவுபற்றிய ஒரு விமர்சனப்பார்வையை முன்வைக்க விரும்புகிறேன்.

இலங்கையின் முழுநிலமும் 6.56 மில்லியன் ஹெக்டயர்கள் ஆகும். இதில் 5.38 மில்லியன் ஹெக்டயர்கள் (அதாவது 82 சதவீதம் ) அரசுடைமை நிலங்களாகும். இந்த அரச நிலத்தின் 37 வீதம் பலவிதமான மட்டுப்படுத்தப்பட்ட உரிமை ஆவணங்களுக்கூடாக சிறு விவசாயிகளுக்கு கிராமவிஸ்தரிப்பு மற்றும் குடியேற்றத்திட்டங்களில் பங்கிடப்பட்டுள்ளது. மிகுதி அரசகாணிகள் காடுகளாகவும் இயற்கைக்காப்பு வனங்களாகவும், புனிதபிரதேசங்களாகவும், உள்நாட்டு நீர்நிலைகளாகவும் உள்ளன. முழுநிலத்தின் 17 வீதம் தனியார் உடைமையாகக் காணப்படுகிறது.

ஒரு முக்கியமான தகவலை நினைவில் கொள்வது அவசியம். அதாவது இலங்கையின் பெரும்பகுதிநிலம் அரசுடைமையாக இருப்பது மட்டுமன்றி, அதன் மீதான அதிகாரம் முழுதாக மத்திய அரசிடம் மையப்படுத்தப்பட்டுள்ளது. 1987ல் இலங்கையின் யாப்பில் ஏற்படுத்தப்பட்ட பதின்மூன்றாவதுதிருத்தத்திற்குப்பின்பும் இன்றுவரை மத்திய அரசே அரசிற்குச் சொந்தமான சகல காணிகள் மீதும் பூரணமான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. பதின்மூன்றாம் திருத்தம் சொல்லும் அரசகாணிகள் பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப்பகிர்வு கூட இதுவரை (கால் நூற்றாண்டு) மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. இதுவரை குடியேற்றம் இடம்பெறாத அரசகாணிகள் பெரும்பாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே இருக்கின்றன. சமீபகாலங்களில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நிலஅபகரிப்பு பெருமளவில் தனியாரின் சொத்துக்களான காணிகளையும் அரசினால் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளையும் பாதித்துள்ளது. அதேவேளை, எஞ்சியிருக்கும் அரசகாணிகளின் எதிர்காலப் பயன்பாடுகள் பற்றிய முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை மத்திய அரசு விட்டுக்கொடுக்கும் அறிகுறிகள் இல்லை.

**வடக்கு கிழக்கில் நிலமும் தேசிய இனப்பிரச்சினையும்**

கிழக்குக் கரையோரங்களில் உல்லாசத்துறை விருத்திக்கென நிலங்கள் ஒதுக்கப்பட்டு முதலீட்டாளர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மட்டக்களப்பில் பாசிக்குடாவில் மாத்திரம் 14 புதிய உல்லாசவிடுதிகள் உருவாகின்றன. அதே போன்று திருகோணமலையின் உப்புவெளியிலும், அம்பாறையின் அறுகம்குடாவிலும் பல உல்லாசவிடுதிகள் உருவாகின்றன. இந்தத் திட்டங்கள் தொடர்பாக உள்ளூர் மக்களுக்குப் போதியளவுதகவல்கள்கிடைக்கவில்லை. இவை பற்றிய முடிவுகளில் அவர்களின் பங்குபற்றல்கள் இடம்பெறவுமில்லை. இராணுவ ஆட்சிக்கு கீழேயே இந்த "அபிவிருத்தி" திட்டங்கள் இடம் பெறுகின்றன.

> அரச உதவியுடன் உலர்ந்த பிரதேசத்தில் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கு சிங்கள இனத்துவ தேசியவாத கருத்தியல் சார்ந்த நியாயப்பாட்டையும் விளக்கத்தையும் டி.எஸ்.சேனாநாயக்க கொடுத்தார். வடமத்திய, வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள உலர்ந்த பிரதேசமே புராதன சிங்கள பௌத்த நாகரீகத்தின் தொட்டில் என்றும் தென்னிந்தியாவிலிருந்து வந்த படையெடுப்பாளர்களால் அழிக்கப்பட்ட அந்த நாகரிகத்தின் அடையாளத்தையும் மீட்டெடுப்பது வரலாற்றுத் தேவை என்றும் சொல்லும் கருத்தியலே குடியேற்றத் திட்டங்களுக்கு அரசியல் ரீதியான முக்கியத்துவத்தைக் கொடுத்தது

இன்றைய நிலைமையைப் புரிந்து கொள்ளப் பின்னோக்கிப் பார்த்தல் அவசியம். சிங்கள பெருந்தேசிய இனமேலாதிக்க அரச உருவாக்கத்தில் நிலத்தின் முக்கியத்துவம் பற்றியும் அதை எதிர்த்த தமிழ்த்தேசியவாதத்தின் போக்குப்பற்றியும் விமர்சனரீதியில் பார்த்தல் அவசியம். வடக்கு, கிழக்கில் அரசகாணிகள் அரசின் இனத்துவ மேலாதிக்கப் புலமயமாக்கலுக்குப் பயன்படுத்தப்பட்டன. இது வடகிழக்குத் தமிழர் தாயகம் எனும் கோரிக்கையைப் பலப்படுத்தத் தூண்டியது. அந்தக் கோரிக்கைக்குப் பதிலடியாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் குடியேற்றத்திட்டங்களின் அமுலாக்கலைத் துரிதப்படுத்தின. இது தமிழர் தாயகக்கோரிக்கையின் அடித்தளமான அடையாளம்- பிரதேசம் எனும் இணைப்பை உடைப்பதற்கு மிகவும் ஏற்ற கருவியாக அரசின் கையிலிருந்தது. தாயகக் கோரிக்கை அரசின் காணிக் கொள்கைக்கு எதிர்விளைவென்றால், அந்த எதிர் விளைவின் எதிர்விளைவுகள் மேலும் மோசமாயின. இது ஒரு சுருள்வட்டம் போலவும் அதேவேளை, அமைப்புரீதியில், அதிகாரரீதியில் அசமத்துவமான போட்டியாகத் தொடர்ந்தது. மறுபுறம் இரண்டு இனத்துவ தேசியவாதங்களுக்கு மிடையே ஒப்பிடக்கூடிய அல்லது ஒத்த தன்மைகளும் இருந்தன.

இனத்துவ மேலாதிக்க அரச உருவாக்கமும் நிலப்பிரச்சினையும் வடக்கு, கிழக்கில் நிலம் தேசிய இனப்பிரச்சினையுடன் பின்னிப்பிணைந்த கதை இலங்கையின் காலனித்துவத்துக்குப் பின்னான அரசஉருவாக்கத்தின் கதையுடனும் அதற்கு அப்பிரதேசத்து தமிழ்பேசும் மக்கள் மத்தியிலிருந்து எழுந்து வந்த எதிர்ப்புகளின் கதையுடனும் தொடர்புடையது என்றால் மிகையாகாது. அரசியல் மட்டத்தில் இது இரண்டு இனத்துவ தேசியவாதங்களின் நீண்ட அசமத்துவம் மிக்க போட்டியின் கதை என்பதும் உண்மை. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் நவீனகால பரிணாமத்தின் ஆரம்பங்களை காலனித்துவ ஆட்சிக்காலத்திலேயே தேட வேண்டும். இது பற்றி ஆழமாகப் பார்ப்பது இந்தக்

கட்டுரையின் நோக்கமல்ல.

1948ல் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்துசுதந்திரம்கிடைத்தபோது காலனித்துவம் விட்டுச் சென்ற ஒரு அரசுக்கு இந்த நாட்டவர் வாரிசுகளானார்கள். இலங்கைக்கு ஒரு அரசு இருந்தது. அது சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசு என அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், எனது அபிப்பிராயத்தில் மிக முக்கியமான விடயம் என்னவெனில், இலங்கை அரசு என ஒன்று இருந்த போதும் இலங்கையர் எனும் தேசியம் இருக்கவில்லை.இந்தத் தீவு கொண்டிருந்த பல்லின, பல்மத சமூகங்களை ஒன்றிணைக்கவல்ல இலங்கையர் எனும் கூட்டு அடையாளம் ஒன்றினைக் கற்பிதம் செய்து உருவாக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால், அந்தத் தேவை இருப்பது பற்றியோ அதைஎப்படிஅடைவது என்பது பற்றியோ விவாதங்கள்பரந்தஅளவில்எழவில்லை. அதற்கும் மாறாக நடைபெற்றது என்னவென்றால், பிரித்தானியா விட்டுச்சென்ற குறைபாடுகளைக் கொண்ட தாராள ஜனநாயகக்காலனித்துவ ஒற்றை ஆட்சி அரசினைப் படிப்படியாக ஒரு சிங்கள பௌத்தஅரசாகமாற்றும்திட்டமேயாகும். ஒரு பல்லின நாட்டின் அரச உருவாக்கம் ஓரின அதாவது சிங்கள தேசியத்தின் உருவாக்கத்துடன் இணைந்தது.1956ல் ஏற்பட்ட பண்டாரநாயக்க புரட்சி இந்த மாற்றப்போக்கின் முக்கியமான திருப்புமுனை எனக் கருதப்படுகிறது. இது உண்மைதான். 1956லிருந்தே அரசின் இனத்துவமயமாக்கல் ஆரம்பிக்கிறது. ஆனால், அதற்கு முன்பே இலங்கையின் அரசியல் சமூகத்தின் சிங்கள- தமிழ்- முஸ்லிம் என இனரீதியான வகுப்புவாதமயமாக்கல் ஆரம்பித்து விட்டதெனலாம். ஆயினும் வரப்போகும் சிங்களப் பேரினவாதத்தின் தன்மையை அறிவிப்பது போல் அமைந்திருந்தது சுதந்திர இலங்கையின் உதயத்தோடு வந்த பிரஜா உரிமைச்சட்டம். இதன் விளைவாக மலையகத்தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள்.

காலனித்துவத்துக்குப்பின்னரான இனத்துவ மேலாதிக்க அரசின் உருவாக்கம் யாப்பு ரீதியாக சட்டபூர்வமாக ஜனநாயக ரீதியாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளின் ஆதரவுடன் நடைபெற்றது. சுதந்திரத்துக்கு முன்னர் 1931ல் காலனித்துவ பிரித்தானியா வழங்கியிருந்த சர்வஜன வாக்குரிமையின் சர்வஜனத்தன்மையை இன ரீதியில் குறைக்கும் ஒரு சட்டத்தின் அமுலாக்கலுடன் சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாறு ஆரம்பிக்கிறது. இந்தச் சட்டத்தையும் 1956ல் வந்தசிங்களமொழியை மட்டும் அரச கரும மொழியாக்கும் சட்டத்தையும் தீவிரமாக எதிர்த்த கட்சிகளில் இலங்கையின் இடதுசாரிக்கட்சிகளான சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியும் முக்கிய பங்கினை வகித்தன. ஆனால், 1956 இலங்கையில் வர்க்க அரசியலினதும் இடதுசாரி இயக்கத்தினதும் வீழ்ச்சியின் ஆரம்பத்தின் அறிவிப்பாகியது. இலங்கை அரசாங்கங்களால் கிழக்கிலும், வடக்கிலும் முன்னெடுக்கப்பட்ட அரச உதவியுடனான குடியேற்றத்திட்டங்கள் இனத்துவ மேலாதிக்க அரச நிர்மாணத்திற்கு உதவும் செயற்பாடாக இருந்த அதேவேளை, அது குறிப்பான சில வர்க்க நலன்களையும் சார்ந்தது என்பதையும் சுட்டிக்காட்டுவது அவசியம். அரச உதவியுடனான குடியேற்றத் திட்டங்களுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இவை காலனித்துவ ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டன. கிராமப்புறங்களில் வளர்ந்துவரும் நிலமின்மையும் வறுமையும் நீண்டகாலத்தில் அரசியல் ரீதியான பிரச்சினையாக உருவெடுக்கலாம் என்பதால் மரபு ரீதியான சிறு பண்ணை விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தை 1929ல் காலனித்துவ அரசாங்கம் வெளியிட்டது. இதைச் செயற்படுத்த அப்போதிருந்த நிலச்சொத்து உரிமைகளைப் பாதிக்காத (அதாவது பெருமளவிலான நிலச்சொத்துகளைக் கொண்ட வர்க்கத்தினரைப் பாதிக்காத) ஒரு வழியைத் தேடினர் ஆட்சியாளர். நிலமற்றோரை இலங்கையின் உலர்ந்த பிரதேசத்திலிருக்கும் அரச நிலத்தில் குடியேற்றும் கொள்கை இதற்கூடாகப் பிறந்தது.இந்தக் கொள்கைக்கு இறுதி வடிவத்தைக் கொடுத்தவர் 1930ல் அரசசபையில் விவசாய மந்திரியாக இருந்த டி.எஸ்.சேனநாயக்க ஆகும். இவரேசுதந்திரஇலங்கையின்முதலாவது பிரதமரானார். இவர் தலைமை தாங்கிய ஐக்கிய தேசியக் கட்சி(UNP)தரகு முதலாளித்துவத்தின்நலன்களைப்பாதுகாக்கும் கட்சியாகவே இருந்தது. அதேவேளை, டி.எஸ்.சேனநாயக்க தன்னை ஒரு தேசியவாதியாகவும் கருதினார். காட்டிக் கொண்டார். 1935ல் விவசாயமும் தேசபக்தியும் (Agriculture and patriotism) எனும் நூலை எழுதி வெளியிட்டார். இந்த நூலை நான் 1970களில் வாசித்தேன். அதில் மரபு ரீதியான சிறிய பண்ணை விவசாயத்திற்கு நவீன முறையில் புத்துயிரளிப்பது பற்றிக் குறிப்பிட்டார். அவரே 1938ல் அரச உதவியுடனான குடியேற்றத்திட்டம் எனும் மசோதாவை அரசசபையில் சமர்ப்பித்தார். அதேசபையில் அங்கத்தவர்களாக இருந்த இடதுசாரிகளான கலாநிதி என்.எம் பெரேராவும், பிலிப் குணவர்த்தனாவும் அந்த மசோதாவை எதிர்த்து வாதாடினர். அவர்களின் கருத்துகளுக்கு டி.எஸ் சேனநாயக்கவின் மகனும் அரசசபை அங்கத்துவருமான டட்லி சேனநாயக்க கொடுத்த பதில் அந்த மசோதாவின் பின்னிருந்த வர்க்க நலனை வெளிக்காட்டியது. இந்த நாட்டில் வறுமையும் தொழில்வாய்ப்பின்மையும் நிலவுவது வர்க்க வெறுப்புணர்வு வளர்வதற்குச் சாதகமான நிலையை உருவாக்கும். அத்தகைய நிலை உருவாகாது தடுப்பதை றுவான்வெல அங்கத்தவர் (என்.எம். பெரேரா ) விரும்ப மாட்டார் என்பதில்சந்தேகமில்லைஎனக்கூறினார் டட்லி (இந்த விவாதத்தில் இடம் பெற்ற உரைகளின் அறிக்கையை ஒரு ஆய்வுக்காக நான் 1980ல் வாசித்தேன்). அப்போது குடியேற்றத்திட்டங்களுக்கும் இனப்பிரச்சினைக்கும் உள்ள உறவு அங்கு ஒரு விவாதப்பொருளாகவில்லை.

ஆயினும் குடியேற்றத்திட்டங்கள் கிழக்கில், வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலிருந்தே அங்கிருந்து தமிழ், முஸ்லிம் தலைவர்களிடமிருந்து விமர்சனங்களும் எதிர்ப்பும் பிறக்கத் தொடங்கியிருந்தன. சுதந்திரத்திற்கு முன்பிருந்தே டி.எஸ்.சேனநாயக்கவின் குடியேற்றக் கொள்கைக்கு வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். சுதந்திரத்துக்குப் பின்னர் 1949ல் பிரதமர் சேனநாயக்கவினால் கல்லோயாத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.(கல்லோயா தமிழில் பட்டிப்பளை ஆறு) இத்திட்டத்தின் நீர் தேக்கத்திற்கு சேனநாயக்கசமுத்திரம் எனப் பெயர் சூட்டப்பட்டமை வரலாற்றுப் புகழ்மிக்க பராக்கிரமபாகு மன்னனின் பெயரில் பொலநறுவையில் உள்ள அழகுமிக்க பராக்கிரம சமுத்திரத்தை நினைவூட்டுவது போல அமைந்தது. கல்லோயாத்திட்டம் பற்றியும் அதன் அபிவிருத்தி ரீதியான இனத்துவரீதியான விளைவுகள் பற்றியும் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. சில உதாரணங்களாக பின்வருவோரின் ஆய்வுகளைக்

குறிப்பிடலாம். B.H. Farmer (1957) ; M. Moore (1985); P. Peeble (1990); Manogaran (1994). கல்லோயாத்திட்டம் போன்ற ஒன்றின் சாத்தியப்பாடு பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னரே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரியப்பர் என்பவர் கருத்து வெளியிட்டுள்ளார். இது பற்றியும் கல்லோயாத்திட்டத்தின் இனரீதியான தாக்கங்கள் பற்றியும் எஸ்.எச். எம் ஜெமில் 2008 முதலாம் மாதத்தில் நவமணி பத்திரிகையில் பல தகவல்களைத் தருகிறார்.

விவசாயத்தையும் தேசபக்தியையும் இணைத்த டி.எஸ்.சேனநாயக்க அரச உதவியுடன் உலர்ந்த பிரதேசத்தில் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கு சிங்கள இனத்துவ தேசியவாத கருத்தியல் சார்ந்த நியாயப்பாட்டினையும் விளக்கத்தையும் கொடுத்தார். நாட்டின் வட மத்திய, வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள உலர்ந்த பிரதேசமே புராதன சிங்கள நாகரிகத்தின் தொட்டில் என்றும் அங்கே சிங்கள அரசர்கள் கட்டியெழுப்பிய அந்த நாகரிகம் நீர்ப்பாசனப் பொறியியல் நாகரிகம் என்றும் இந்தச் சிறப்பான சிங்கள பௌத்தநாகரீகம் தென் இந்தியாவிலிருந்து வந்த படையெடுப்பாளர்களால் அழிக்கப்பட்டதென்றும் அந்தத் தாயகத்தில் மீண்டும் நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்து இழந்த நாகரிகத்தையும் அடையாளத்தையும் மீட்டெடுப்பது வரலாற்றுத் தேவையென்றும் சொல்லும் கருத்தியலே குடியேற்றத் திட்டங்களுக்கு அரசியல் ரீதியான முக்கியத்துவத்தைக் கொடுத்தது. டி.எஸ்.சேனநாயக்கவின் நீண்டகால நோக்குப் பற்றியும் குடியேற்றத்திட்டங்களின் இனத்துவ மேலாதிக்க அரசியல் நோக்கம் பற்றியும் பல ஆய்வாளர்கள் எழுதியுள்ளார்கள். உலர்வலையக் குடியேற்றத் திட்டங்களை மீளக் கைப்பற்றலின் புராணக்கதை ( Myth of Reconquest) என சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர். (உதாரணமாக Donald E. Smith 1979; Mick Moore 1985). அதாவது இழந்த

**வடக்கு கிழக்கில் நிலமும் தேசிய இனப்பிரச்சினையும்**

ஒரு ஆள்புலத்தினை மீட்பது போன்ற ஒரு மாயை. அதேவேளை, இது ஒரு நவீன தேசியத்தின் உருவாக்கலின் யதார்த்தமாகிறது.

1987ல் கலாநிதி செறீனா தென்னக்கூன் அவர்கள் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்திச்சடங்குகள் பற்றிய ஒரு ஆய்வுக்கட்டுரையை அமெரிக்க சஞ்சிகையொன்றில் வெளியிட்டார். இதில் அவர் மகாவலித்திட்டத்தின் அபிவிருத்திக் கதையாடலைக் கட்டுடைக்கிறார். திட்டத்தின் அங்குரார்ப்பணத்தின் சடங்குகள் சிங்கள பௌத்த மரபுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதையும் நவீனமயமாக்கல் திட்டம் ஒன்றில் இந்த கலாசார ரீதியான சடங்குகளின் இனத்துவ அரசியல் பணியையும் விளக்கி விமர்சிக்கிறார். இவையெல்லாம் உலர்ந்த பிரதேசத்தின் மீள்கைப்பற்றலைக் குறிக்கின்றன.

> உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த பின்னர் அரச இயந்திரத்திற்கும் இராணுவத்திற்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. இவை இரண்டும் ஒத்துழைப்பது அவசியமாயிற்று. அரசின் நோக்கம் தமிழ்த் தேசியவாதத்தின் தாயக கோரிக்கையின் அடிப்படையான "அடையாளம் - பிரதேசம்" என்னும் இணைப்பை உடைப்பதே.

மகாவலித்திட்டம் பற்றியும் வடக்கு, கிழக்கு குடியேற்றத்திட்டங்களின் அரசியல் நோக்கம் பற்றியும் விடயங்களை அறிய விரும்புவோருக்கு 1988ல் மாலிங்க எச். குணரத்ன எழுதிய For a Sovereign State (ஒரு இறைமையுடைய அரசுக்காக) என்ற நூலை சிபாரிசு செய்கிறேன். குணரத்ன உணர்ச்சியும் உத்வேகமும் கொண்ட ஒரு தேசியவாதி. மகாவலித்திட்டத்தின் குடியேற்றங்களின் திட்டமிடலில், அமுலாக்கலில், இராணுவமயமாக்கலில் தீவிரமான பங்கினை வகித்தவர். தமிழ்ஈழவாதிகளின் தனி நாட்டுத்திட்டத்தை உடைத்துத் தேசத்தின் இறைமையைக் கட்டிக்காக்க வடக்கு, கிழக்கின் அரச நிலங்களில் குடியேற்றங்களை அமைப்பதை விட வேறு வழியில்லை என வெளிப்படையாகவும் எழுதியுள்ளார் குணரத்ன. இதற்கூடாக இந்தப் பிரதேசங்களைப் பல்லினமயமாக்கித் தமிழரின் சனத்தொகைச் செறிவைக் குறைத்து அவர்களை சிறுபான்மையாக்க முடியும் எனும் செயற்கையான திட்டத்தைத் துரிதப்படுத்துவதன் அவசியத்தை வற்புறுத்தினார் அவர்.

இன்று வடகிழக்கில் இராணுவத்தின் ஆதிக்கத்தின் கீழ் பௌத்த கோவில்கள் கட்டப்படுவது, "சிங்கள பௌத்த" வரலாற்று ஆதாரங்களைத் தேடும் "அகழ்வாராய்ச்சி", புனித பௌத்த பிரதேசப்பிரகடனங்கள் எல்லாம் "மீளக்கைப்பற்றலை"ப்புதிய உத்வேகத்துடன் வலியப்படுத்தியிருப்பதன் வெளிப்பாடுகள் போல் படுகின்றன. இவையெல்லாம் புத்தபிரானின் பெயரால் செய்யப்படுவதுதான் பெருந்துன்பியல்.

சுருங்கக்கூறின் வடக்கு, கிழக்கின் குடியேற்றத்திட்டங்கள் நிலமற்ற விவசாயிகளை அரசசெலவில் அரசகாணிகளில் குடியேற்றும் திட்டமானது இனமேலாதிக்க அரசின் ஆள் புலத்தின் இனத்துவமயமாக்கல் கொள்கையின் அமுலாக்கலுக்கு உதவுகிறது. நிலமற்ற விவசாயிகளுக்கு நாட்டின் எந்தப்பகுதியிலும் அரசநிலத்தை வழங்குவது நிலமின்மைக்கு ஒரு தற்காலிகத் தீர்வாகலாம். அந்த வகையில் அது நியாயமானதாகவும் இருக்கலாம். ஆனால், இந்தக் குடியேற்றத்திட்டங்கள் தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் இனச்செறிவை மாற்றும் நோக்குடன் பெரும்பான்மை இனத்துவ மேலாதிக்கத்தை உறுதியாக்கும் கருவியாகப் பயன்படுத்தப்படுவதே பிரச்சினைக்குரியதாகும்.

ஒவ்வொரு அரசாங்கமும் குடியேற்றத் திட்டங்களை தமது கட்சி அரசியல் நலன்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் அதேவேளை, குடியேற்றக் கொள்கையின் தொடர்ச்சியான அமுலாக்கல் செயற்திறன் மிக்க நிர்வாக இயந்திரத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. குடியேற்றக்கொள்கையின் அரசியல், கருத்தியல் மற்றும் கலாசார நோக்கங்களெல்லாம் இந்த நிர்வாக யந்திரத்தினால் உள்வாங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட அரசாங்கம் வடக்கு- கிழக்கின் பிரதேசங்களில் புவியியல் ரீதியான மாற்றங்களையோ பெயர் மாற்றங்களையோ அல்லது நிர்வாக ரீதியான மாற்றங்களையோ ஏற்படுத்த முனையும் போது அதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கும் உரிய தகவல்களையும் ஆற்றல்களையும் இந்த நிர்வாக இயந்திரம் கொண்டுள்ளது. உள்நாட்டு யுத்தம் ஆரம்

பித்த பின்னர் இந்த இயந்திரத்திற்கும் இராணுவத்திற்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. இவை இரண்டும் ஒத்துழைப்பது அவசியமாயிற்று. ஏற்கனவே குறிப்பிட்டது போல் அரசின் நோக்கம் தமிழ்த் தேசியவாதத்தின் தாயக கோரிக்கையின் அடிப்படையான “அடையாளம்- பிரதேசம்” எனும் இணைப்பை உடைப்பதே. இந்த வகையில் மணல்ஆறு வெலிஓயாவாக மாறியது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. வட-கிழக்கு இணைப்பின் இனரீதியான, பிரதேசரீதியான தொடர்ச்சியை மீக்க முடியாதவாறு உடைப்பதில் இந்த நிகழ்ச்சி அரசியல், புவியியல் மற்றும் குறியீட்டுக்காரணங்களால் விசேட முக்கியத்துவம் பெறுகிறது.

ஆள்புலத்தின் இனத்துவமயமாக்கல் என்பது மனித குடியேற்றத்தினதும் நிலப்பாவனையினதும் அரசியல் ரீதியான பொறியியல் (Political engineering ) என்பது பல ஆய்வாளர்களின் கருத்து. இந்தப் போக்கானது இனத்துவ மேலாதிக்க ஆட்சியின் உருவாக்கத்தின் ஒரு முக்கிய கருவி என்பதை இஸ்ரேலிய ஆய்வாளரான Oren Yiftachel (2006) இனத்துவ மேலாதிக்க ஆட்சி (Ethnocracy) பற்றிய தனது நூலில் குறிப்பிடுகிறார். இஸ்ரேலிய அரசு பாலஸ்தீன பிரதேசங்களை யூத மயப்படுத்தி வரும் கொள்கைகள் நடைமுறைகள் பற்றிய அவரது ஆய்வில் பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் (West Bank) 1976 ல் 3.7 வீதமாக மட்டுமே இருந்த யூதர்கள் 2002 ல் 23.3 வீதமாகப் பெருகிய கதையை விளக்குவதற்கு Ethnocracy எனும் கோட்பாட்டைப் பயன்படுத்துகிறார். Oren Yiftachel யூத இனத்தைச் சார்ந்த முற்போக்கு ஆய்வாளர் என்பதைக் குறிப்பிட வேண்டும். அவருடைய கருத்தில் இஸ்ரேலுடன் ஒப்பிடும் போது வரலாற்று ரீதியில் பலவிதமான வேறுபாடுகள் இருப்பினும் இலங்கை, மலேசியா, எஸ்டோனியா, லத்வியா, சேர்பியா போன்ற நாடுகளும் 19ம் நூற்றாண்டின் அவுஸ்திரேலியாவும் இனத்துவ மேலாதிக்க ஆட்சிகளைக் கொண்ட நாடுகளாகும்.

இங்கு குறிப்பிட்ட பல்லின நாடுகளில் குறிப்பிட்ட ஒரு இனத்தின் அந்தஸ்தை இன ரீதியில் மற்றைய இனங்களுக்கு மேலாக உயர்த்தி நிறுவனமயமாக்கல் அந்தந்த நாட்டின் சட்டங்களின் உதவியுடன் இடம்பெற்றுள்ளது. இந்த நாடுகளின் தோற்றப்பாட்டில் நவீன முதலாளித்துவ ஜனநாயகப் பொறிமுறைகள்

**வடக்கு கிழக்கில் நிலமும் தேசிய இனப்பிரச்சினையும்**

இயங்குவதைக் காணலாம். ஏன் சம்பிரதாயபூர்வமாக மனித உரிமைகளுக்குப் பொறுப்பான நிறுவனங்களைக்கூடக் காணலாம். பத்திரிகைச்சுதந்திரம், பல்அரசியல் கட்சிகளைக் கொண்ட பாராளுமன்றம் போன்றன இருக்கலாம். அதேவேளை பாராளுமன்றத்துக்கூடாக மேலாதிக்க ஆட்சி நிறுவனமயப்படுத்தப் பட்டுள்ளது. இப்படிச் சொல்வது வர்க்க உறவுகள், வர்க்கநலன்கள் முக்கிய மற்றுப் போய்விட்டன என்பதாகாது. யதார்த்தத்தில் வர்க்க உறவுகள் இனத்துவமயமாக்கலின் ஆதிக்கத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளன என்பதே உண்மை. இனத்துவமயமாக்கலை உயர் வர்க்கங்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றன.

ஒரு இனத்தின் நடுத்தர சமூக மட்டங்களை உள்ளடக்கும் குட்டிபூர்ஷ்வா கூட்டத்தின் ஆதரவைப் பெற இனத்துவ மயமாக்கல் ஒரு குறுக்கு வழியாகிறது. சமூக பொருளாதார அசமத்துவங்களுக்கான காரணிகளை இனத்துவமயப் படுத்துவது அந்த இனத்தின் உயர்வர்க்கத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் அதேவேளை, அதை இனவாதக் கருத்தியலில் தங்கி நிற்க வைக்கிறது. அரசியலின் இனத்துவமயமாக்கல் ஒரு தொற்று நோய் போல் ஒரு இனத்திடம் இருந்து அதேநாட்டில் வாழும் மற்ற இனங்களையும் பீடிக்கிறது. இந்த வியாதி எந்த இனத்தில் ஆரம்பித்தது என்பது முக்கியமாயிருக்கலாம். ஆனால் அதையும் விட முக்கியமானது அரச அதிகாரம் எந்த இனத்தைச் சார்ந்தோரிடம் என்பதேயாகும். இத்தகைய சமூகங்களில் இனத்துவத்தின் மேலாட்சித்தன்மைகளை ஒதுக்கி வர்க்க உறவுகளை மட்டும் வைத்து யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள முடியாது - குறிப்பாக அரசியல் அதிகாரத்தின்தன்மைகளை, அரசமற்றும்தனியார் முதலீடுகளின் போக்குகளை விளங்கிக் கொள்ள முடியாது.

1990களில் நான் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகளில் இலங்கை அரசின் இனத்துவ மயமாக்கல் (ethnicisation, communalisation) மதச்சார்பின்மையை அழித்தல் (Desecularisation) போன்ற கோட்பாடுகளைப் பயன் படுத்தினேன், Yiftachel இன் சமீபத்திய ஆய்வுகளைப் பார்த்த பின் அவர் பயன் படுத்தும் Ethnocracy எனும் கோட்பாடு எனது கருத்துகளுக்கும் ஏற்புடையதெனக் கருதுகிறேன். அத்துடன் அந்தக் கோட்பாடு இலங்கை அரசு போன்ற அரசுகளின் உருவாக்கத்தை ஆய்ந்தறியவும் பயன்பட வல்லது.

### தமிழ்த்தேசியவாதமும் தாயகக்கோரிக்கையும்

தமிழர்களும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களும் செறிந்து வாழும் வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பான்மை இனத்துவ மேலாதிக்கப்புலமயமாக்கலை நோக்காகக் கொண்ட குடியேற்றத்திட்டங்கள் இடம்பெறுவதை அப்பிரதேச மக்கள் எதிர்ப்பது நியாயமானதே. ஆரம்பத்தில் இந்த எதிர்ப்பு தமிழ், முஸ்லிம் மக்களின் அடையாளங்கள், அவர்களின் அரசியல்ரீதியான பிரதிநிதித்துவம் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. தெற்கிலே நிலமற்ற விவசாயிகள்தொகைஅதிகரித்த வண்ணமாக இருந்ததும் அங்குள்ள நிலமற்றோர் அரச உதவியுடன் உலர்ந்த பிரதேசத்தில் குடியேற பெருமளவில் முன்வரக் காரணமாயிருந்தது. இது ஆளும் கட்சியினால் அரசியல் மயப் படுத்தப்பட்டது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் குடியேற்றத்தின் பின்னால் இருந்த அரசியல் கருத்தியல் குடியேறும் சிங்கள மக்களுக்கும் உள்ளூர் தமிழ், முஸ்லிம் மக்களுக்குமிடையே நல்லுறவை வளர்ப்பதற்கு உதவவில்லை. அத்துடன் கல்லோயாபோன்றகுடியேற்றத்திட்டங்களில் தமிழ், முஸ்லிம் விவசாயிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களும் நிரப்பப்படவில்லை எனும் விமர்சனங்களும் எழுந்தன. இதற்குக் காரணம் தமிழரும் முஸ்லிம்களும் எதிர்பார்த்த அளவுக்கு குடியேற்றத்திற்கு விண்ணப்பிக்காமையே என அரசாங்க அதிகாரிகள் கூறினர்.

காலப்போக்கில் தமிழ் - முஸ்லிம் அரசியல் வேறுபாடுகள் தலைமை மட்டத்தில் விரிசலை ஏற்படுத்தி இரு இனங்களின் அரசியல் தலைமைகள் வெவ்வேறு திசைகளில் நகர்ந்தன. தமிழ்த் தேசியவாதிகளின் தாயகக்கோரிக்கை தமிழ்மக்களை இனத்துவரீதியில் மையப்படுத்தியே உருவானது. இறுதியில் தனிநாட்டுக்கோரிக்கை பிறந்த பொழுது குறுகிய இனத்துவ தேசியவாதமே அதன் அடிப்படையாயிற்று. இந்த அடிப்படையில் எழுந்த சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு இலங்கைக்குள்ளேயே

மற்றைய தமிழ் பேசும் சமூகங்களின் மற்றும் முற்போக்கான சிங்கள மக்களின் ஆதரவைப் பெற முடியவில்லை. அத்தகைய ஆதரவின் அவசியத்தையும் தமிழ்த்தலைமைகள் உணரவில்லை.

உலர்ந்த பிரதேசத்தில் அரச உதவியுடனான குடியேற்றத்திட்டங்கள் ஒரு சிங்கள பௌத்த இராச்சியத்தின் ''மீளக்கைப்பற்றல்'' எனும் புராணக்கதையின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது பற்றிக் கண்டோம். இதனை எதிர்த்து எழுந்த தமிழ் இனத்துவ தேசியவாதமும் தனக்கேயுரிய புராணக்கதைகளைக் கண்டு பிடித்தது.தமது கருத்தியலை உற்பத்தி செய்வதில் தமிழ்த்தேசியவாதிகள் சிங்களத் தேசியவாதிகளின் அணுகுமுறையைப் பின்பற்றினார்கள் எனத் தோன்றுகிறது.ஒரு ஒடுக்கப்பட்ட இனத்தின் அரசியல், சமூக அபிலாஷைகளுக்குத் தமிழ்த்தேசியவாதம் கொடுத்த கருத்தியல் ரீதியான வடிவத்தையும், உள்ளடக்கத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. அதன் பிரபல்யமான சுலோகம் ''ஆண்ட பரம்பரை ஆள நினைப்பதில் என்ன குறை''.

தென்னிந்தியத் தமிழ்ப் படையெடுப்பாளர்களே வடக்குக் கிழக்கில் செழித்தோங்கிய சிங்கள பௌத்த நாகரிகத்தை அழித்தவர்கள் என்றார்கள் சிங்களத் தேசியவாதிகள். தமிழ்த்தேசியவாதிகளின் சுலோகமோ ''ஆம் அந்த ஆண்டோரின்பரம்பரைமீண்டும்ஆளநினைப்பதில் என்னதவறு'' என்பது போல் அமைந்தது. அந்தச் சுலோகத்திற் கூடாகத் தமிழ்த் தேசியவாதம் சொல்ல முற்பட்ட சேதி வேறு என வாதிடலாம். ஆனால் நடைமுறையில் அதன் அர்த்தம் ஒரு ஒடுக்கப்பட்ட இனத்தின் விடுதலைக்கோஷம் போல் படவில்லை. இந்தச் சுலோகத்தை அப்போதே தமிழ் இடதுசாரிகள் விமர்சித்தனர் என்பதையும் நினைவுகூர்தல் தகும்.

''ஆண்டபரம்பரைச்'' சுலோகத்தைச் சிங்களத் தேசியவாதிகள் சோழப்பேரரசின் காலகட்டத்துடன் தொடர்புபடுத்தினர். இந்தத் தொடர்பை வெளிப்படையாக்குவது போல் அமைந்தது விடுதலைப்புலிகள் சோழப்பேரரசின் சின்னத்தையே தாம் நடத்தும் ஈழத்தமிழரின் விடுதலைப் போரின் சின்னமாக்கியமை. வடக்கு, கிழக்குத் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையின் வரலாற்று ரீதியான நியாயப்பாட்டிற்கான அடிப்படையைத் தமிழ்த்தேசியவாதம் விளக்க முற்பட்ட விதம் அதைச் சிங்களத் தேசிய

**வடக்கு கிழக்கில் நிலமும் தேசிய இனப்பிரச்சினையும்**

வாதத்தின் ஒரு மாற்று வடிவம் போல் காட்டியது. சிங்களத்தேசியவாதம் முன் வைத்த வரலாற்றுக்கதையாடலை மறுதலிக்கத் தமிழ்த்தேசியவாதம் தனது வரலாற்றுக்கதையாடலை மீள் உருவாக்கியது. இந்தப் போட்டி இருசாராரையும் தொடர்ச்சியான பின்னோக்கிய கற்பனார்த்தம் கலந்த வரலாற்றுப்பயணங்களுக்கு இட்டுச் சென்றது. இதில் ஒரு முக்கியமான பொதுத்தன்மை என்னவெனில், வரலாற்றுச் கதையாடலின் உருவாக்கலுக்கு பேரினவாதம் வகுத்த வழிமுறையையே தமிழ்த்தேசியவாதமும் கையாண்டது. ஒன்றின் வரலாற்று ரீதியான உரிமை கொண்டாடலை மறுப்பதற்கு மற்றது தனக்குச் சாதகமான ஆதாரத்தைத் தேடியது. இந்த விவாதத்திற்கு இருசாராரும் வரலாற்றியலாளர்களையும், அகழ்வாராய்ச்சியாளர்களையும் உதவிக்கழைத்தனர். சுயநிர்ணயக் கோரிக்கைக்கான நவீன காரணங்களை மூடிமறைக்கப் பேரினவாதம் கையாண்ட பொறிக்குள் தமிழ்த்தேசியவாதம் மாட்டிக் கொண்டது போலத்தென்படுகிறது. ஆனால், இந்தப் போட்டியோ யதார்த்தத்தில் அமைப்புரீதியான அசமத்துவத்தைக் கொண்டிருந்தது. சிங்களத்தேசியவாதிகளிடம் அரச அதிகாரம் மட்டுமல்ல அந்த அரசுக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரமும், ஆதரவும் இருந்தது. உள்நாட்டில் இந்த அசமத்துவமான போட்டிகளின் விளைவுகளை அரசகுடியேற்றத்திட்டங்களிலும் நில அபகரிப்புகளிலும் காண்கிறோம். தாயகக்கோரிக்கையின் பிரதேச ரீதியான அடிப்படை மிகப் பெருமளவில் அரச உடைமையான நிலமாக இருப்பது பற்றி ஏற்கனவே அறிந்துள்ளோம். அரசாங்கம் இதை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. இது அதிகாரப்பிரிவின் ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது.

1970களில் சில தமிழ் அமைப்புகள் வடக்குக் கிழக்கில் அரசின் சிங்கள குடியேற்றத்திற்கு எதிராக தமிழ்க்குடியேற்றங்களை உருவாக்கின. இனக்கலவரங்களால் இடம்பெயர்ந்து தவித்த மலையகத்தமிழ்க் குடும்பங்களை இந்த அமைப்புகள் குடியேற்றின. இதற்கு ஏற்கனவே சிலரால் 99 வருட குத்தகையில் எடுக்கப்பட்ட அரச காணிகளைப் பயன்படுத்தினர். வடக்கிலும் கிழக்கிலும் இப்படியாகவும் வேறு வழிகளுக்கூடாகவும் குடியேறி இடம்பெயர்ந்த தோட்டத்தொழிலாளர்கள் கிராமியக் கூலி உழைப்பாளர்களாகவும், சிறு விவசாயிகளாகவும் தமது வாழ்வாதாரத்தைத் தேடினர்.

இடம்பெயர்ந்த மலையகத்தமிழர்களை வடக்கில் கிழக்கில் குடியேற்றுவதில் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் பங்கு உண்டென உயர்மட்ட சிங்கள நிர்வாக மற்றும் இராணுவ அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் சந்தேகித்தனர். நடைபெறுவது ஒரு ''தமிழ் ஈழவாத ஆக்கிரமிப்பு'' எனக் கருதினர். இது குணரத்னவின் நூலில் வெளிப்படுகிறது. 1980களில் போரின் வருகையுடனும் மகாவலித்திட்டத்தின் அமுலாக்கலுடனும் 99 வருட குத்தகைக்குப் பெற்ற அரச காணிகளில் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் இராணுவத்தால் அகற்றப்பட்டன. அந்தக் காணிகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமைகளும் இரத்துச்செய்யப்பட்டன.குத்தகைக்கு வழங்கப்பட்ட காரணத்திற்கு மாறாகப் பயன்படுத்தியது சட்டவிரோதம் எனும் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

போரின் விளைவாக வடக்கில் கிழக்கில் பாரிய இடப்பெயர்வுகள் தொடர்ந்தன. இடம்பெயர்ந்தோரில் பெரும்பான்மையினர் தமிழர். அடுத்து முஸ்லிம்களும் சிங்களவர்களும். போர்க்கால இடப்பெயர்வுகளெல்லாம் போரின் எதிர்பாராத

> காலப்போக்கில் தமிழ்-முஸ்லிம் வேறுபாடுகள் தலைமை மட்டத்தில் விரிசலை ஏற்படுத்தி இரு இனங்களினதும் அரசியல் தலைமையில் வெவ்வேறு திசைகளில் நகர்ந்தன. தமிழ்த் தேசியவாதிகளின் தாயகக்கோரிக்கை தமிழ் மக்களை இனத்துவ ரீதியில் மையப்படுத்தியே உருவானது. இறுதியில் தனிநாட்டு கோரிக்கை பிறந்த பொழுது குறுகிய இனத்துவ தேசியவாதமே அடிப்படையாயிற்று

விளைவுகள் அல்ல. அரச இராணுவமும், விடுதலைப்புலிகளும் தமது நோக்கங்களுக்காக வேண்டுமென்றே பொதுமக்களின் இடப்பெயர்வுகளையும் உண்டாக்கினர். இருசாராரும் நடத்திய இடப்பெயர்வுகள் பலரும் அறிந்ததே. எனினும் ஒருசில விடயங்களைக் குறிப்பிடுதல் பயன்தரும். வடக்கிலும் கிழக்கிலும் அரசு பொது மக்களை வெளியேற்றிப் பல உயர்பாதுகாப்பு வலையங்களை உருவாக்கியது. இந்த வலையங்கள் பெருமளவில் இன்னும் தொடர்கின்றன. 1984ல் விடுதலைப்புலிகள் மகாவலித்திட்டத்தின் கீழ் குடியேற்றப்பட்ட சிங்களவர்களைத் தாக்கினர். இதில் பலர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலாக அரசாங்கம் குடியேற்றவாசிகளுக்கு ஆயுதங்களும், ஆயுதப் பயிற்சியும் வழங்கியது. 1990 பத்தாம் மாதம் விடுதலைப்புலிகள் வடக்கில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களை வெளியேற்றியதும் அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் காத்தான்குடியில் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களைச் சுட்டுக் கொன்றதும் தமிழ்த் தேசியவாதத்தின் குறுகிய இனவாதத்தையும் இராணுவவாதத்தையும் காட்டும் சம்பவங்களாயின.

உள்நாட்டுப்போரின் விளைவால் வடகிழக்கின் சனத்தொகையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழர்களின் தொடர்ச்சியான வெளியேற்றம் இனரீதியில் முக்கியமான புவியியல் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குடியேற்றத் திட்டங்களினாலும் நிரந்தர இடப்பெயர்வுகளினாலும் தமிழர்தாயகம் எனப்படும் பிரதேசம் மீள முடியாத மாற்றங்களைக் கண்டுள்ளது. வெளிநாடுகளை நோக்கிய நகர்ச்சி ஒரு பெரிய புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தை உருவாக்கியுள்ளது. Tamil Diaspora என அழைக்கப்படும் இச்சமூகத்தை தமிழ்ச் சிதறுகைச்சமூகம் எனத் தமிழில் குறிப்பிடலாம் என்பது பேராசிரியர் சிவத்தம்பியின் கருத்தாகும். இந்த சர்வதேசப்புலப்பெயர்வின் உள்ளூர் தாக்கங்கள் எல்லாமே நல்லவை எனக்கொள்ள முடியாது. நன்மைகள், தீமைகள் இரண்டையும் கொண்ட ஒரு கலப்பு எனலாம். இவை பற்றி ஆழப் பார்ப்பது இந்த கட்டுரையின் நோக்கமல்ல. சர்வதேச புலப்பெயர்வினால் வந்த "காசாதாரப் பொருளாதாரம்" (Remittance economy) போர்க்காலத்திலும் அதற்குப்பின்னரும் பலருக்கு பயனளித்துள்ளது. கணிசமான தொகையினர் வடக்கிலிருந்து நிரந்தரமாக தெற்கில் குடியேறவும் இது உதவியுள்ளது. வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தில் தங்கியிருக்கும் குடும்பங்கள் பலவற்றில் நுகர்வுவாதம் தலைதூக்கியுள்ளதையும் உழைப்பின் பெறுமதி பற்றிய போதிய உணர்வின்மையின் அறிகுறிகளையும் காணலாம். மறுபுறம் போருக்குப் பின்பும் மாற்றுவழிகளால் போர் தொடரும் நிலையும் வெளிநாட்டுத் தொடர்புகளும் சர்வதேச நகர்ச்சியில் ஆழமான விருப்பினையும் நம்பிக்கையையும் தமிழர் மத்தியில் பதித்துள்ளன. இந்தப் போக்கிற்கும் தாயகக்கோரிக்கைக்கும் முரண்பாடு இல்லையா?

> வடக்கு கிழக்கில் நிலவும் தேசிய இனப்பிரச்சினையும்

இன்றைய வடக்கும் கிழக்கும் முன்பை விட பல்லினமயமாகி வருகிறது. இலங்கையின் தெற்கும் - குறிப்பாக மேல் மாகாணம் முன்பைவிடப் பல்லினமயமாகியுள்ளது. வடக்கு, கிழக்கு இப்போதும் தமிழ் பேசுவோர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாக இருப்பினும் அங்கு ஏற்பட்டுள்ள புவியியல் ரீதியான மாற்றங்களையும் அவற்றின் எதிர்காலப் போக்குகளையும் கருத்தில் எடுத்தல் அவசியம். தமிழர் ஆரம்பத்தில் கோரிய தாயகத்தின் இன்றைய நிலை என்ன? நிலத்திற்கும் தேசிய இனப்பிரச்சினைக்குமிடையிலான உறவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையே வடக்குக்கிழக்கின் அரசியல் புவியியலும் அங்கு இராணுவ அதிகாரத்தின் கீழ் இடம்பெறும் நிலஅபகரிப்புகளும் அபிவிருத்தி, தேசியபாதுகாப்பு எனும் காரணங்களால் ஏற்படும் இடப்பெயர்வுகளும் காட்டுகின்றன.

போருக்குப் பின்னரும் முன்புபோல் வடக்குக்கிழக்கில் இராணுவம் தனக்குத் தேவையான நிலத்தைச் சுவீகரித்துத் தன் விருப்பப்படி பயன்படுத்தி வருகிறது. அரச காணிகளைப் பொறுத்தவரை அரசாங்கம் அவற்றை வழமைபோல் குடியேற்றத்திட்டங்களுக்கு ஒதுக்க முடியும். அதைவிட இப்போது நடைமுறையிலிருக்கும் நவதாராள பொருளாதாரக் கொள்கைப்படி பயன்பாடுமிக்க நிலவளங்களை தனியார்துறைக்குக் கையளிக்க முடியும். இவை இரண்டுமே நடைமுறையிலிருக்கும் கொள்கைகள். இன்னொருபுறம் அரசாங்கம் சிலகாணிகளை பௌத்த புனிதபிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தப் போக்குகள் வடக்கு, கிழக்கின் இனப்புவியியலில் நிலத்தின் உடைமை உறவுகளில், நிலத்தின் பாவனையில், நிலத்தோற்றத்தில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்திய வண்ணமிருக்கின்றன. இவை மக்களின் பாதுகாப்பில், வாழ்வாதாரங்களில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன? அவற்றின் நன்மை, தீமைகள் என்ன? எனும் கேள்விகள் முக்கியத்துவம் பெறும் அதேவேளை, இன்னொருமட்டத்தில் இந்தப் போக்குகள் தேசிய இனப்பிரச்சினையின் உள்ளடக்கங்களில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன எனும் கேள்விக்கும் அரசியல்ரீதியில் முகம்கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. வடக்கு, கிழக்கு முன்பை விடப் பல்லினமயமாகியுள்ள தன் மறுபக்கம் அங்கு இனங்களுக்கிடையிலான உறவுகள் மேலும் விரிசலடைந்துள்ளமையாகும். நிலம் மற்றும் கரையோர வளங்கள் கடற்றொழில் தொடர்பான பிரச்சினைகள் மூன்று இனங்களுக்குமிடையிலான சிக்கலான முரண்பாடாகிவிட்டது. இது கிழக்கில் மிகவும் ஆழமடைந்துள்ளது. நிலவளங்கள் தொடர்பான பிரச்சினைகளை இனத்துவமயமாக்கிய அதே அரசு இனங்களுக்கிடையிலான நிலப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நீதிபதியாகவும் செயற்படுகிறது. இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு பரஸ்பர மரியாதை போன்றவை அருகிக் கொண்டு போவதற்கு நிலம் மற்றும் கரையோரக் கடல்வளங்கள் தொடர்பான உரிமைப் பிரச்சினைகள் ஒரு பிரதான காரணமாகும். தேசிய இனப்பிரச்சினையும், வடக்குக் கிழக்கு மக்களின் சீவனோபாயப் பிரச்சினையும் மேலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து விட்டன.

ஏற்பட்டுள்ள அரசியல், சமூக, பொருளாதார, இனப்புவியியல் மாற்றங்களை நோக்குமிடத்து தேசிய இனப்பிரச்சினையின் இன்றைய நிலை பற்றிய மீள் சிந்திப்பு அவசியமாகிறது. நியாயமான அரசியல் தீர்வை நோக்கிய வகையில் தேசிய இனப்பிரச்சினையின் மீள்சட்ட கமயமாக்கல் அவசியம் என்பதும் எனது கருத்தாகும். இது பற்றிய திறந்த கருத்துப் பரிமாற்றங்கள், விவாதங்கள் தேவை. இதை மனதில் வைத்து விவாதிக்கப்பட வேண்டிய சில பொதுவான கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்.

## ஒரு திறந்த விவாதத்தை நோக்கி

இலங்கையின் தேசிய இனப்பிரச்சி

னையின் இன்றைய வடிவமும் உள்ளார்ந்த தன்மைகளும் என்ன? வடக்குக்கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமையை ஒரு கோரிக்கையாக முன்வைத்த காலத்தின் நிலைமைகளுடன் ஒப்பிடும் போது இன்றைய நிலைமைகளை எப்படி விளங்கிக் கொள்ளலாம்? இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பற்றிய பிரச்சினை மட்டுமன்றி, அதற்கும் அப்பால் மலையகத் தமிழ்மக்களினதும், தெற்கிலே பரந்து வாழும் தமிழ்பேசும் மக்களினதும், உரிமைகளையும் பற்றியது என்பதை மறந்து வடக்குக்கிழக்கில் வாழும் மக்களின் உரிமைகளைப் பற்றி மட்டுமே பேசமுடியுமா? இனரீதியில் இனத்துவ மேலாதிக்க அரசினால் இரண்டாம்தர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சமூகங்களின் கோரிக்கைகளை இணைத்து அரசியல்ரீதியில்சிந்திப்பது இன்றைய தேவை இல்லையா? இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை என ஒன்றில்லை இருந்தது பயங்கரவாதப்பிரச்சினையே, அது தீர்க்கப்பட்டு விட்டது எனும் கருத்தும், உணர்வும் ஆழப்பதிந்திருக்கும் சிங்கள மக்களுக்கு வடக்கு, கிழக்கின் உண்மையான நிலைவரங்களையும், இனரீதியில் தமிழ்பேசும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் எடுத்து விளக்குவது அவசியமில்லையா? இது ஒரு பெரும் சவால் மிக்கது. அதேவேளை, அவசியமானது என்பதே எனது கருத்து.

வடக்குக்கிழக்கில் இதுவரை ஏற்பட்டுள்ள பல மாற்றங்கள் குறிப்பாக இனப்புவியியல் ரீதியான மாற்றங்களைப் பார்க்கும் போது முன்னைய நிலைமைகளுக்கு ஒருபோதும் திரும்பிப் போக முடியாது எனும் உண்மை தெளிவாகிறது. இன்றைய உடனடித் தேவைகளில் ஒன்று தொடர்ந்தும் இனத்துவ மேலாதிக்க நோக்கில் அரச உதவியுடனான குடியேற்றத் திட்டங்களும் அரசநிலத்தின் உபயோகம், உரிமை பற்றிய ஒருதலைப்பட்சமான பிரகடனங்களும், மக்களின் சம்மதமின்றி நில வளங்களைப் பெருமூலதனத்திடம் கையளிக்கப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும். இதை ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக மற்றைய தமிழ்பேசும் இனங்களின் சிங்களமக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு அரசியல் சக்திகளின் ஆதரவைப் பெறும் வகையில் முன் வைப்பது உடனடித் தேவையாகும். இராணுவமயமாக்கல் அத்துடன் உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதும் இத்தகைய ஒரு ஜனநாயக உரிமைக் கோரிக்கையே.

இன்றைய இலங்கை அரசு ஒரு ஒற்றையாட்சி அரசு மட்டுமல்ல, அது ஒரு இனத்துவ மேலாதிக்க மயப்படுத்தப்பட்ட, இராணுவமயப்படுத்தப்பட்ட, சகல மக்களின் ஜனநாயக உரிமைகளையும் நசுக்கும் அரசாக மாற்றம் கண்டுள்ளது. ஜனநாயகத் தோற்றங்களை வெளிஉலகிற்கு காட்டிக் கொண்டு அதிகாரவாத அரசாக மாறியுள்ளது. இன்றைய ஆட்சியில் நீதித்துறை, நிர்வாகத்துறை, உயர்கல்வித்துறை நிறுவனங்களின் முகாமை அனைத்துமே மோசமாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் பொருளாதாரக்கொள்கை பெருமூலதனத்திற்கும் ஆளும்கட்சி அரசியல்வாதிகளுக்கும் நாட்டின் வளங்களை அபகரிக்கும் சந்தர்ப்பங்களைக் கொடுக்கும் அதேவேளை, உழைக்கும் வர்க்கங்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பெரும் சுமைகளைப் போட்டுள்ளது.

இனமேலாதிக்க மயப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசின் மீள் அமைப்பின்றி தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காணமுடியாது. இது ஜனநாயகத்தை அர்த்தமுள்ள வகையில் நிலைநாட்டுவதற்கும் இனங்களிடையே சமத்துவத்தின் அடிப்படையில் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் அமைதியைக் கட்டி எழுப்பவும் இன்றியமையாததாகும். அதேவேளை, மேற்குறிப்பிட்ட நிலைமைகளின் விளைவுகள் இன,மத எல்லைகளையும் தாண்டிசகல இன மக்களையும் பாதித்துள்ளன. இவையெல்லாம் இன்று ஒரு பரந்த ஜனநாயக அணியை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தைத் தந்துள்ளன. இத்தகைய ஒரு அணியின் உருவாக்கத்துடனேயே தேசிய இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான போராட்டமும் இணைய வேண்டும்.இத்தகைய ஒரு அணுகுமுறை சாத்தியமில்லை எனச் சுலபமாகச் சொல்லிவிடலாம். ஆனால் அதை எப்படிச் சாத்தியமாக்குவது என்பதே ஆக்கபூர்வமான கேள்வியாகும். மரபுரீதியான எதிர்க்கட்சிகளால் மாற்றத்திற்கான போராட்டங்களை எடுத்துச் செல்ல முடியாது என்பது தெளிவான உண்மை. இன்று ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்கள் மாற்று அமைப்புகளுக்கூடாக வளர்க்கக் கூடிய சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன. இப்போது நடைபெறும் பல்கலைக் கழகங்களின் ஆசிரியர்களின் வேலை நிறுத்தமும் மாணவர்களின் போராட்டமும் பரந்துபட்ட முறையில் பொதுமக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுள்ளன. நீண்ட காலத்திற்குப் பின் இது ஒரு நல்ல அறிகுறி. நிலஅபகரிப்புக்கெதிரான போராட்டங்கள், காணாமல்போனோர் பற்றிய தகவல்களைத் தேடும் இயக்கங்கள், வெள்ளைவான் கடத்தல்களை எதிர்க்கும் போக்குகள் போன்றவை பல்லினங்களையும் சார்ந்தவை. இந்தச் சூழ்நிலை தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பற்றி நியாயமான அரசியல் தீர்வு பற்றிய கருத்துப்பரிமாறல்களுக்குச் சாதகமானதெனும் நம்பிக்கை பிறக்கிறது. இதற்கான அறிகுறிகள் இருக்கவே செய்கின்றன. ஒரு அரசியல் திட்டத்தை முன்வைப்பது எனது நோக்கமல்ல. அது எனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதென்பதை நான் அறிவேன். கடந்த காலத்தையும், இன்றைய நிலைமைகளையும் விமர்சன ரீதியில், சுய விமர்சன ரீதியில் ஆராய்ந்து அரசியல் ரீதியில் முன்னே செல்லும் வழிகளுக்கான தேடலைப் பற்றிய ஒரு திறந்த விவாதத்தின் தேவையை எடுத்துக் கூறுவதே எனது நோக்கம்.

> வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கோரிக்கையின் வரலாற்று ரீதியான நியாயப்பாட்டிற்கான அடிப்படையை தமிழ்த் தேசியவாதம் விளக்க முற்பட்ட விதம் அதை சிங்கள தேசிய வாதத்தின் ஒரு மாற்று வடிவம் போல் காட்டியது. சிங்கள தேசியவாதம் முன்வைத்த வரலாற்றுக் கதையாடலை மறுதலிக்கத் தமிழ்த் தேசியவாதம் தனது வரலாற்று கதையாடலை மீள் உருவாக்கியது

# அரசியல் தீர்வு முயற்சிகளில் தென்னாபிரிக்காவின் பாத்திரம்...?

ள்நாட்டு அரசியல்

**இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட விசேடமான முறை போருக்குப் பின்னரான காலகட்டத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய அரசியல் செயன்முறைகளை தொடர்ந்து வரையறை செய்துகொண்டிருக்கப்போகிறது**

அண்மைய வாரங்களாக வெளியுறவு அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய மறுப்பு அறிக்கைகளை நாம் கருத்தில் எடுப்பதாக இருந்தால், இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் கொண்டுவருவதற்கு தென்னாபிரிக்கா மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபடப்போவதில்லை என்றே கருதவேண்டும். ஆனால், தென்னாபிரிக்க தூதுக்குழுவினால் முன் வைக்கப்பட்ட யோசனைக்கு இலங்கை அரசாங்கம் ஒருவித எச்சரிக்கை உணர்வுடன் பதிலளித்திருக்கிறது என்பதை உத்தியோகபூர்வ அறிக்கைகளின் வாசகங்களின் மூலமாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. வெளியுறவு அமைச்சின் வார்த்தைகளிலேயே சொல்வதானால், "தாங்கள் பெற்றுக்கொண்ட சொந்த அனுபவங்களையும் நுண்ணறிவு ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டு, நிலைபேறான தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளில் இலங்கைக்கு சகலவிதமான உதவிகளையும் வழங்குவதற்கு" தயாராயிருப்பதாக தென்னாபிரிக்கக் குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள்.


மத்தியஸ்தம் (Mediation) என்பது (இலங்கையில் தென்னாபிரிக்கர்களினால் ஆற்றப்படக்கூடிய பாத்திரம் என்று எண்ணிப்பார்க்கக்கூடிய பாத்திரம்) மூன்றாம் தரப்பின் பாத்திரமாக இல்லையென்றால், சமாதான இராஜதந்திரம் என்பதன் வழியாக அவர்கள் செய்யக் கூடியவற்றின் உண்மையான அர்த்தம் என்னவாக இருக்கமுடியும்?

இலங்கை அரசியலின் சமகாலப் பின்புலத்தை நோக்குகையில், பின்வரும் பூர்வாங்க அனுமானங்களை முன்வைக்கக் கூடியதாக இருக்கிறது. (1) இலங்கை நெருக்கடியில் முன்னர் சம்பந்தப்பட்ட வேறு எந்தவொரு நாட்டையும் விட, "மூன்றாம்தரப்பு" பாத்திரமொன்றை வகிப்பதற்கு தென்னாபிரிக்கா இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை கூடுதலான அளவுக்கு ஏற்புடையதாக அமையும். (2) தென்னாபிரிக்காவின் மூன்றாம் தரப்புப் பாத்திரம் என்பது தற்காலிகமாக குறைந்த அளவை ஏற்றுக்கொள்ள இணங்குபவர் (minimalist) என்ற வகையிலானதாக அமையக்கூடும். அல்லது எந்தவொரு, பாத்திரமும் இல்லாமற் போகவும் கூடும். மத்தியஸ்தம் (Mediation) அனுசரணை (Facilitation), பரவலாக்கம் (Devolution) மற்றும் பதின்மூன்றாவது திருத்தம் என்பன போன்ற சொற்பதங்கள் செயற்பாடுகளின் அகராதியில் இருந்து இடைநிறுத்தப்படவேண்டும். உதவி வழங்குதல் அல்லது சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உதவுதல்(Helping the parties) (Providing assistance)போன்ற தீங்கு விளையாத வாய்ப்பாடுகள் அரசாங்கத் தலைவர்களுக்கு எத்தகைய பேச்சுமுறை ஏற்புடையதாக இருக்கும் என்பதை பிரதிபலித்து நிற்கின்றது.

"உதவி வழங்குதல்" என்ற வடிவில் இலங்கையில் தென்னாபிரிக்காவினால் ஆற்றக்கூடிய (குறைந்த அளவைப் பெற்றுக்கொள்கின்ற அதேவேளை, பயனுறுதியுடையதான) பாத்திரம் எதுவாக இருக்கமுடியும்? இலங்கை அரசியலின்




வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுடன் தென்னாபிரிக்க தூதுக்குழுவினர்



## ஜெயதேவ உயன்கொட

சமகால சூழ்நிலையில், ஒரு குறிப்பிட்ட நிலைப்பாட்டில் நின்று பேரம் பேசுகின்ற தற்போதைய போக்கை மறுபரிசீலனை செய்து பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புவதற்கு அரசாங்கத்துக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் உதவுவதென்பது ஒரு ''மூன்றாம் தரப்பினால்'' செய்யக்கூடிய மிகவும் பெரிய பங்களிப்பாக அமையும். அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் திரும்புவது அவசியமானது, ஏனென்றால் இருதரப்பினதும் நிலைப்பாடுகளில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற துருவநிலை உத்தேச பாராளுமன்றத் தெரிவுக்குழுவை செயற்படுத்துவதை தடுத்துக்கொண்டிருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் இணைந்தால் கூட, இரு தரப்பினரும் கடுமையான சச்சரவில் பிரவேசித்து ஆழமான வேறுபாடுகளையும் இணங்கமுடியாத அம்சங்களையும் மாத்திரமே வெளிப்படுத்திக் காட்டக்கூடிய நிலைமையே தோன்றும் என்பதற்கான



சகல அறிகுறிகளும் தெரிகின்றன. இரு தரப்பினரும் இணங்கிக்கொள்ளக்கூடிய கூட்டுத் தீர்வுகள் வருவதற்கில்லை. அதனால், ஏற்கனவே எடுத்துக்கொண்ட நிலைப்பாடுகளில் அழுங்குப்பிடியாக நிற்கின்ற போக்கை மறுபரிசீலனை செய்த பிறகு பேச்சுவார்த்தைக்குத் திரும்புவதற்கு இருதரப்பினரையும் இணங்கச் செய்ய வேண்டியதே குறுகிய காலத்தில் நிறைவேற்றக்கூடிய காரியமாகும்.

தற்போது இலங்கையில் அரசியல் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான ஊடாட்டங்களை மீள்விக்க வேண்டியது முற்றிலும் அத்தியாவசியமானதாகும். ஆனால், தாங்களாகவே அரசியல் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியாது என்பதை ஒருவருடத்துக்கும் கூடுதலான காலமாக இருதரப்பினருமே வெளிக்காட்டியிருக்கிறார்கள். வெளியார் யாரோ அவர்களை பேச்சுவார்த்தை மேடைக்கு கூட்டிச்செல்ல வேண்டியிருக்கிறது. ஒருவகையில் நோக்குகையில் இதைச் சரித்திரம் திருப்புகின்ற ஒரு போக்காகபார்க்கக்கூடியதாகஇருக்கிறது. நெருக்கடியில்சம்பந்தப்பட்டஉள்நாட்டுத் தரப்பினர் தாங்களாகவே செய்யவேண்டியதைச்செய்ய இயலாமல் இருக்கின்றமை வெளியார் பிரவேசிப்பதற்கு வழியைத் திறந்துவிடுகின்றது. கடந்த காலத்தில் இந்தியாவும் நோர்வேயும் பிரவேசித்தன. இப்போது தென்னாபிரிக்கா இலங்கையில் மூன்றாம் தரப்பின் ஈடுபாட்டு வரலாற்றைத் திரும்பிவர அனுமதிப்பதில் இருக்கக்கூடிய ஆபத்து எத்தகைய அனர்த்தத் தனமானதாக இருக்கும் என்பதை தென்னாபிரிக்கர்கள் அறிவார்கள்.

அரசாங்கத்துக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டை நிலையை அடைந்தமைக்கான காரணம் அபிவிருத்தி அல்லது அதிகாரப்பரவலாக்கம் (Development or Devolution) என்ற இரு நோக்குகளின் அடிப்படையிலான நிலைப்பாடுகளின் துருவமயமாதலேயாகும். ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணி அரசாங்கத்தைப் பொறுத்தவரை, உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதலுக்கும் தேசிய ஒருங்கிணைப்புக்குமான அணுகுமுறை வடக்கு, கிழக்கில் உள்ளகக் கட்டமைப்பு மேம்பாட்டையும் பொருளாதார அபிவிருத்தியையும் துரிதப்படுத்துவதேயாகும். அபிவிருத்தியினால் படிப்படியாக ஏற்படக்கூடிய விளைபயன்கள் நாளடைவில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் அதிகாரப்பரவலாக்கலை வேண்டப்படாத ஒன்றாக மாற்றிவிடும் என்பதே அரசாங்கத்தின் இந்த அணுகுமுறையின் பின்னாலுள்ள முக்கிய எதிர்பார்ப்பாகும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு இதற்கு முற்றிலும் வேறுபட்டது. முதலில் அதிகாரப்பரவலாக்கம் என்பதே அவர்களின் நிலைப்பாடு. அழகான வீதிகளுடனும் பாலங்களுடனும் தமிழ் மக்கள் திருப்திப்பட்டு விடுவதில்லை. கௌரவம், சுயமரியாதை, அதிகாரப்பரவலாக்கம், அரசியல் உரிமைகள் என்பவை தமிழ் மக்களைப் பொறுத்தவரை முக்கியமானவை என்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும். இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான தீர்த்துவைக்கப்படாத விவாதம் பின்வரும் கேள்வியைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது. உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செயன்முறைகளைப் பொறுத்தவரை முன்னுரிமைக்குரியது அபிவிருத்தியா அல்லது அதிகாரப்பரவலாக்கலா?. துருவநிலைப்பட்டிருக்கும் இருதரப்பினரும் அவர்களது எண்ணப்படி செயற்பட விடப்பட்டால், ஒரு தரப்புமே தங்களது ஒருதலைச்சார்பான நிலைப்பாட்டிலிருந்து விலக இயலாததாகவே இருக்கும் என்றே தோன்றுகிறது.

இந்த இடத்தில்தான் அரசாங்கத்துடனும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனுமான ஊடாட்டங்களில் தென்னாபிரிக்கர்களினால் பயனுறுதியுடைய பாத்திரமொன்றை வகிக்கமுடியும். உணர்ச்சிவசப்படாமல் நோக்கும்போது, அபிவிருத்தியும் அதிகாரப் பரவலாக்கமும் இருதரப்பினராலும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதான நிகழ்ச்சி நிரலின் ஆக்கக்கூறுகளாக அமையமாட்டா என்பதே எனது அபிப்பிராயமாகும்.

அதேவேளை, விரைவாக அரசியல்

இணக்கத் தீர்வொன்றை எட்டுமாறு இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மேற்குலக அரசாங்கங்களினால் பிரயோகிக்கப்படுவதாகக் கூறப்படும் அழுத்தங்கள் உரிய காலத்துக்கு முன்னதான அவசரச் செயற்பாடாகவும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய காரியமாகவுமே இருக்கும். இலங்கைச் சூழ்நிலையில் இருக்கக்கூடிய குறிப்பிட்ட சில விசேடமான அம்சங்கள் போரின் முடிவுக்குப் பின்னர் விரைவான விட்டுக்கொடுப்புக்கும் இணக்கப்பாட்டுக்குமான சாத்தியப்பாடுகளை நிராகரிக்கின்றன. இலங்கையில் நல்லது நடக்க வேண்டுமென்று விரும்புகிற - அதே வேளை தங்கள் விரலை சுட்டுக்கொள்ள வலிய வர விரும்புகிற வெளிப்பாத்திரங்கள் (External Actors) இந்த விஷேடமான அம்சங்களை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்; அவற்றைக் கையாளவும் வேண்டும். அவை உண்மையிலேயே அதிவிசேடமான பிரச்சினைகளாகும்.

உள்நாட்டுப் போர் பேச்சுவார்த்தை மூலமான இணக்கத் தீர்வொன்றின் வடிவில் முடிவுக்கு வரவில்லை என்பது இலங்கைச் சூழ்நிலையின் விசேடமான அம்சங்களில் அதிமுதன்மையானதாகும். சர்வதேச மத்தியஸ்தம்/அனுசரணை ஆகியவற்றின் ஊடான (பேச்சுவார்த்தை மூலமாக இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கான) முயற்சிகள் தோல்வி கண்டதன் பின்னரான காலகட்டத்திலேயே போர் முடிவுக்கு வந்தது. மத்தியஸ்தத்தின் ஊடான சமாதான முயற்சிகளின் தோல்வி போரின் மூலமாக, (போரின் மூலமாக மாத்திரம்) அதுவும் அரசாங்கத்துக்கு ஒருதலைப் பட்சமான இராணுவ வெற்றியின் வடிவில் - போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. இது மத்தியஸ்தம் என்ற யோசனைக்கு இருக்கக்கூடிய நியாயபூர்வத்தன்மையை அரித்தெடுத்து விட்டது. உண்மையிலேயே, இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட விசேடமான முறை போருக்குப் பின்னரான காலகட்டத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய அரசியல் செயன்முறைகளின் அடிப்படைகளைத் தொடர்ந்து வரையறை செய்து அவற்றுக்கு உருக்கொடுத்துக்கொண்டிருக்கப்போகிறது.

இரண்டாவதாக, போரில் வெற்றிபெற்ற அரசாங்கம் போருக்குப் பின்னரான அரசியல் செயன்முறைகளை வரையறுக்கும் உரிமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பகிர்ந்து கொள்வது சாத்தியமில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசாங்கம் விடுதலைப் புலிகளின் ஒரு நேச அணியாகவே கருதுகிறது. 13+ என்ற (அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் கீழ் உள்ள அதிகாரங்களுக்கும் கூடுதலான அதிகாரங்கள்) யோசனையின் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைக்கும் மேம்பட்ட அதிகாரப்பரவலாக்கல் கோரிக்கையை போருக்குப் பின்னரான இலங்கையின் அரசியல் போக்கை, பேச்சுவார்த்தைகளின் பின்கதவின் மூலமாக (விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சி நிரலை மீண்டும் கொண்டுவரும் நோக்குடனான) வரையறை செய்வதற்கான ஒரு முயற்சியாகவே அரசாங்கம் பார்க்கிறது என்பதுதான் உண்மை. இலங்கையின் அரசியல் எதிர்காலத்தை கூட்டாக வகுப்பதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பங்குடைமைப் பாத்திரம் என்பது சமகால இலங்கையில் சாத்தியப்படக்கூடிய ஒன்றாக இல்லை என்றே தோன்றுகிறது.

மூன்றாவதாக, அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பரஸ்பரம் இரு மொழிகளில் பேசிக்கொண்டிருக்கின்றன என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. இது இரு தரப்பினருக்குமிடையே ஆக்கபூர்வமான தொடர்பாடலுக்கு வசதி செய்வதாக இல்லை. அபிவிருத்தியென்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் மொழியின் அர்த்தம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு இல்லை என்பதேயாகும். இந்தக் கூட்டமைப்பைக் கடந்து சென்று உதவி வழங்கும் நாடுகள் சமூகத்துடனும் தமிழ்ப் பிரஜைகளுடனும் பேசுவதற்குகந்த முறையிலேயே அரசாங்கத்தின் மொழி உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்றே சுயநிர்ணய உரிமை, வடக்கு - கிழக்கு இணைப்பு, 13+ மற்றும் அதிகாரப் பரவலாக்கம் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மொழி அரசாங்கத் தரப்பினரால் புரிந்து கொள்ளப்படுவதாக இல்லை. கூட்டமைப்பு புலம்பெயர் தமிழர்களுடனும் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர் சமூகத்துடனும் (அங்குள்ள முஸ்லிம் சமூகத்துடன் கூட இல்லை) இந்த மொழியைப் பயன்படுத்தியே பேசுகிறது. அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டை நிலையை அடைந்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. இருவேறுபட்ட மொழிகளில் பேசுகின்ற போது அவர்கள் எதற்காகத் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்?

நான்காவதாக, அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே பாரிய அரசியல் அவநம்பிக்கை நிலவுகிறது. அதிகாரப் பரவலாக்கல், வடக்கு- கிழக்கு இணைப்பு, மற்றும் சுயநிர்ணய உரிமைகள் ஆகியவற்றைக் கூட்டமைப்பு வலியுறுத்தும் போது அரசாங்கம் கணிசமான அளவுக்கு பொறுமையிழந்து கோபத்துடன் பிரதிபலிப்பைக் காட்டுகிறது. நீண்டகால ஆயுதக் கிளர்ச்சியின் மூலமாக விடுதலைப் புலிகளினால் சாதிக்க முடியாமற்போனதை வெளிநாடுகளின் அரசியல் ஆதரவைத் திரட்டிக் கொண்டு அமைதியான வழிமுறைகள் மூலமாகப் பெற்றுக்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கிறது என்று அரசாங்கம் நினைப்பதே இதற்குக் காரணமாகும். அதேபோன்றே, பாராளுமன்றத் தெரிவுக்குழுச் செயன்முறைகளில் கூட்டமைப்பு இணைந்து கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் வலியுறுத்தும் போது, கடுமையான சந்தோசத்துடனும் கூட்டமைப்பு அதன் பிரதிபலிப்பைக் காட்டுகிறது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயன்முறைகளின் ஊடாக காலத்தை இழுத்தடித்து ஏமாற்றுவதற்கான மறைமுகமான நிகழ்ச்சி நிரலை அரசாங்கம் கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைக்கிறது. அதனாற்தான், பாராளுமன்றத் தெரிவுக்குழுச் செயன்முறைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கான முன்னிபந்தனையாக, (அக்குழுவுக்குப் போவதற்கு முன்னதாக) இருதரப்புக்கும் இடையேயான கூட்டு இணக்கப்பாட்டின் வடிவில் "அரசியல் உத்தரவாதங்களை கூட்டமைப்பு" கோருகிறது. ஆனால், அரசாங்கமோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான (தெரிவுக்குழுவுக்கு முன்னதான) அத்தகையதொரு இணக்கப்பாடு தெரிவுக்குழுவில் தனது தந்திரோபாயக் காய்நகர்த்தல்களுக்கான களத்தை கடுமையாகக் குறுக்கிவிடுமென்று நினைக்கிறது. அதேபோன்றே தமிழ்ச் சமூகத்தின் பிரதான அல்லது ஏகப் பிரதிநிதி என்ற அந்தஸ்தை தவறுதலாகவேனும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு கொடுத்துவிடக்கூடாது என்பதில் அரசாங்கம் மிகுந்த அவதானமாக இருந்து வருகிறது.

நான்காவதாக, இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதென்பது உள்நாட்டுப் போர்க்கால கட்டத்தில் இருந்ததைப் போன்றே, விடுதலைப்புலிகள்

இல்லாத இன்றைய காலகட்டத்திலும் மிகவும் சிக்கலானதாக விளங்குகின்றது. உள்நாட்டுப் போர் முடிவுக்குவந்த பிறகு இலங்கை மண்ணில் உருப்பெற்றுவந்தி ருக்கும் அரசியல் சூழ்நிலையைப் பற்றிய ஆய்வின் சுருக்கத்தை பின்வருமாறு கூறலாம்;

1. அதிகாரப் பரவலாக்கம் என்பது விடு தலைப்புலிகளின் பிரிவினைவாதக் கிளர்ச்சியினால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தனி வகைப்பட்ட சூழ்நிலைகளில் பிறந்த, அந்தச் சூழ்நிலைக்கு மாத் திரமே பொருத்தமான ஒரு திட்டம் என்றே ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் நினைக்கிறது போல்

**அரசாங்கமும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் பரஸ்பரம் இரு மொழிகளில் பேசிக்கொண்டிருக்கின்ற னர். இது இரு தரப்பினருக் குமிடையே ஆக்கபூர்வமான தொடர்பாடலுக்கு வசதி செய்வதாக இல்லை**

தெரிகிறது. அதாவது 2009 மே மாதத்துக்கு முந்திய காலகட்டத்திற்கு பொருத்தமாயிருந்திருக்கக்கூடிய திட்டமென்றே அரசாங்கம் கருதுகிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதிகாரப் பரவலாக்கம் நாட்டுப் பிரி வினைக்கு மாற்றானது. விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத அச்சு றுத்தல் இராணுவ ரீதியாகத் தோற் கடிக்கப்பட்ட போது, அதிகாரப்பரவ லாக்கத்தைப் பொருத்தமானதாக்கிய அடிப்படை அரசியல் சூழ்நிலைகள் பெருமளவுக்கு மாறிவிட்டன. எனவே, அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் சர்வதேச சமூகத்தினதும் வலியுறுத் தல்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த சமகால அடிப்படை ஏதுமில்லை என்பதே அரசாங்கத்தின் நினைப்பாக இருக்கிறது. கடந்துபோய்விட்ட ஒரு காலகட்டத்திலிருந்து பெறப்பட்ட ஒரு வெறும் சுலோகமாகவே அதை அர சாங்கம் பார்க்கிறது.

2. வெற்றிகொள்ளப்பட்டு கீழ்ப்படுத்தப் பட்ட சிறுபான்மை இனச்சமூகத்தின் ஆன்மாவை தாங்கள் பிரதிநிதித் துவப்படுத்தி நிற்பதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கருதுகிறார்கள். அதேவேளை, அரசா ங்கமோ ஒரு வெற்றியாளரின் பெரு மையைப் (தப்பெண்ணத்தையும் கூட) பிரதிநிதித்துவப்படுத்துவதற் கான தார்மீக மற்றும் அரசியல் உரிமை தனக்கு இருப்பதாக அடிக்கடி காட்டிக்கொள்கிறது. வெற்றியாளரும் வெற்றிகொள்ளப்பட்டவரும் நேருக்கு நேர் சந்தித்து நாட்டுக்கான பொது வான அரசியல் எதிர்காலத்தை கூட் டாக வகுக்க முடியுமா? அது ஒரு போதுமே சுலபமானதாக இருக்கப் போவதில்லை என்பதையே நாம் இலங்கையில் இதுவரை கண்டி ருக்கக்கூடிய நிகழ்வுப் போக்குகள் உணர்த்தி நிற்கின்றன.

3. ஒரு தரப்பை மறுதரப்பு மடக்குவ



தற்கானவியூகம், கடும்பேரம்பேசலில் நாட்டம், எந்தப் பயனையும் தராத சிந்தனையில் நாட்டம் ஆகியவற்றி னால் ஏற்படுத்தப்பட்ட பொறியில் அரசாங்கமும் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பும் தற்போது அகப்பட்டிருக் கின்றன. கேடுவிளைவிக்கக்கூடிய இந்தப் பொறியில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்வதே இருதரப்பி னருக்கும் பயனுடையதாகும். ஆனால், அதற்கான அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொண்டதாகத் தோன்றவில்லை. இந்தப் பொறியில் இருந்து விடுபடுவதென்பது ஒரு தலைப்பட்சமான செயற்பாடல்ல, அது ஒரு கூட்டு முயற்சியாகவே நிச்சயமாக இருக்க முடியும் என்பதை அரசாங் கத்தையும் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பையும் அவதானித்து வருபவர் களில் யாராவது சொல்ல வேண்டும்.

மேற்கூறப்பட்ட சவால்களின் பட்டி யலைச் சிந்தனைக்கெடுக்கும்போது, இலங்கையில் ஒரு அரசியல் விட்டுக் கொடுப்பை இணக்கப்பாட்டை நோக்கிய விரைவான முன்னேற்றம் ஏற்படுமென்று சீர்திருத்த முடியாத கருத்தியல்வாதி யொருவரினால் மாத்திரமே கற்பனை செய்துபார்க்க முடியும். எவ்வாறெனினும் இந்தச் சிக்கலான சூழ்நிலையை புரிந்து கொள்கின்ற அதேவேளை, நாம் எந்த வொரு நன்மையையுமே நம்பி ஏற்க மறுக்கின்ற மனப்பான்மையுடையோராக அல்லது தோல்வி மனப்பான்மையைக் கொண்டோராகவே எப்போதும் இருக்க வேண்டியதில்லை. புதிய மார்க்கங்களை நாம் கண்டறிவதற்கு முயற்சிக்க வேண் டும். இந்த இடத்தில் தான் இலங்கையில் தென்னாபிரிக்காவின் தற்போதைய முன்முயற்சியை நிதானமாகக் கருத்துரு வாக்கம் செய்ய வேண்டிய தேவை இருக் கிறது. நெல்சன் மண்டேலாவின் தலை மைத்துவத்தினால் உற்சாகப்படுத்தப்பட்ட தென்னாபிரிக்கா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையும் தமிழ்த்தேசியக் கூட் டமைப்பையும் பேச்சுவார்த்தையில் சந் திக்கச் செய்து, பரஸ்பரம் புரிந்துகொள் ளக்கூடிய மொழியில் தொடர்பாடலை மேற்கொள்ளச்செய்து, சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என்று சகல சமூகத்தவர்களும் பொதுவில் நன்மையடையக்கூடிய அரசியல் எதிர்காலமொன்றை வகுப்ப தற்கு உதவமுடியும். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் என்று மாத்திரமில்லா மல், சகல சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் அரசியல் எதிர்காலத்தை வகுப்பதே இந்தச் செயன்முறைகளின் நோக்கமாக இருக்கவேண்டும். எந்தத் தரப்பினருமே தங்களை ஒரு வெற்றி யாளராகவோ அல்லது வெற்றிகொள்ளப் பட்டவராகவோ நோக்காமல், தார்மீக ரீதியில் சமத்துவமானவர்களாக (Moral equals)ப் பார்க்கக் கூடியதான பேச்சு வார்த்தைக்கு வசதி செய்யும் அரங்காக அது இருக்க வேண்டும். போருக்குப் பின்னரான காலகட்டத்தில் சமாதான த்தைக் கட்டியெழுப்புவதற்கான, நல்லி ணக்கத்தை ஏற்படுத்துவதற்கான, தேச த்தைக் கட்டியெழுப்புவதற்கான சர்வ கட்சிப் பேச்சுவார்த்தைகளுக்கு தார்மீக அடித்தளத்தைப் போடவேண்டிய தேவை இருக்கிறது.

அத்தகையதொரு பெருமுயற்சிக்கான பிரயத்தனத்தைச் செய்வதற்குக் கூட நெல்சன்மண்டேலாவின் தென்னா பிரிக்காவினால் மாத்திரமே முடியும். உட னடியான அரசியல் விளைபயன்களை யும் பட்சாபாதமான விளைவுகளையும் தோற்றுவிக்க முடியாமற்போனாலும் போக்கக்கூடுமென்றாலும், பேச்சுவார் த்தையின் பெறுமதியை இலங்கையின் முரண்நிலையில்சம்பந்தப்பட்டதரப்புகள் விளங்கிக் கொள்வதற்கு தென்னாபிரிக் கர்கள் “உதவுவர்” என்று எதிர்பார்ப் போமாக!



## கிழக்குத் தேர்தலுக்கு பிறகு

# தமிழர்-முஸ்லிம் உறவு எங்கே போகிறது?

உள்நாட்டு அரசியல்

என்.சத்திய மூர்த்தி


எதிர்பார்த்தபடியோ, அல்லது பயந்தது போலவோ, ஏதோ ஒரு விதத்தில் கிழக்கு மாகாண தேர்தலுக்கு பின்னர், தமிழர்- முஸ்லிம் உறவு மீண்டும் ஒரு முறை குழப்ப வலயத்திற்குள் பிரவேசித்துள்ளது. அதிலிருந்து வெளியேறி, அந்த உறவுகள் புதிப்பிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டால் மட்டுமே இரு இனத்தவரிடையேயான எதிர்கால உறவுகளில் சுமுக தன்மை ஏற்பட்டு அதன் மூலம் இனப் பிரச்சினைக் கான அரசியல் தீர்வு ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகும். ஆனால், இடைப் பட்ட காலத்தில், இரண்டு சமூகத்தினரும் தனித்தனியாக தங்களது இனத்திற்குள் ளேயான சமூக மற்றும் அரசியல் பிரச்சி னைகளை தீர்த்துக்கொள்வது முக்கிய மான முதல் அடியாக உருவெடுத்துள்ளது என்பதும் உண்மை.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடி விற்கு பின்னர், தமிழ்த்தேசிய கூட்ட மைப்பு முதலமைச்சர் பதவியை வெளிப் படையாக வழங்கியும், முஸ்லிம் காங் கிரஸ் அதனை ஏற்றுக் கொள்ளாதது பலரையும் அதிர்ச்சிக்கும் ஆச்சரியத் திற்கும் உள்ளாக்கியது. இந்த அதிர்ச்சி க்கும் ஆச்சரியத்திற்கும் பல காரணங் களைக்கூறலாம். முதலாவதாக, மாகாண சபையில் பதினொரு இடங்களைப் பிடித்த கூட்டமைப்பு, அதிரடியாக முதல்வர் பத வியை ஏழு இடங்களையே பெற்ற முஸ் லிம் காங்கிரஸுக்கு வழங்கியதைச் சொல் லலாம். இரண்டாவதாக, கூட்டமைப்பு வழங்கிய முதல்வர் பதவியை ஏற்றுக் கொள்ளாமல், அரசு அணியில் தொடர்ந்து கொண்டே அந்த பதவியை வேறொரு முஸ்லிம் உறுப்பினருக்கு வழங்கியதும் அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்குமான மற்றொரு காரணம்.

இதை விட முக்கிய காரணம் ஒன்று உள்ளது. அது தான், கிழக்கு மாகாணத் தில் "தேசிய அரசு" அமைந்தால் அதனை வரவேற்பதாக கூட்டமைப்பு வெளியிட்ட அறிவிப்பு. அதாவது, மத்தியில் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அணியுடன் ஆட்சியில் பங்கு பெறுவதாகவே இதனை பொருள் கொள்ள வேண்டும். ஆனால், அதற்கு முன்னர் இனப்பிரச்சினை குறித்த கூட்டமைப்பின் அபிலாசைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை, இந்த முயற்சி பத்திரிகைக் குறிப்பாக மட்டுமே இருக்கும் என்பதை உடனுக் குடனே தெளிவாக்கியது. என்றாலும், அரசியல் ரீதியாக கூட்டமைப்பு எந்த கட்சி க்கும், எந்த இனத்திற்கும், எந்த விதத்திலும் எதிரியல்ல என்ற எண்ண த்தை மீண்டும் வலியுறுத்த இது வகை செய்தது. கொள்கை ரீதியாக இது தேசிய அரசியலுக்கும், அரசுக்கும் கூட பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

"கூட்டமைப்பு அளித்த முதலமைச்சர் பதவியை ஏற்க மறுத்து, ஆளும் கூட்டணி அளித்த இரண்டாம் இடத்தை" முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டதற்கு தகுந்த காரணங்கள் விளக்கப்படவில்லை. என்றாலும், அந்த காரணங்களை இனம் கண்டுகொள்வது எளிதான விடயமே. முதலாவதாக, கூட்டமைப்பு வெளியிட வில்லை என்றாலும், முஸ்லிம் காங்கிர ஸுக்கு அளிக்கப்பட்ட முதலமைச்சர் பதவி ஐந்து ஆண்டு பதவி காலத்தில் முதல் இரண்டரை ஆண்டுகளுக்கு மட்டுமே என்பது சொல்லப்படாத ஆனால் புரிந்து கொள்ளப்பட்ட விடயம். இதுவே, மத்தியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியும் அந்த கட்சிக்கு அளித்த வாக்குறுதி. என்ன, முதல் இரண்டரை ஆண்டுகளுக்கு பதிலாக இறுதி இரண் டரை ஆண்டுகள் முஸ்லிம் காங்கிரஸ் அந்த பதவியை வகிக்கும். அவ்வளவு தான்.

அது மட்டுமல்ல. தற்போதைய ஏற்பாட் டின் படி, கிழக்கு மாகாணத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு முஸ்லிம் முதலமைச்சரே பதவியில் இருப்பார். இதுவே, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அணி சேர்ந்தி ருந்தால், இறுதி இரண்டரை ஆண்டு களுக்கும் முஸ்லிம் ஒருவரே முதலமைச் சராக நியமிக்கப்படுவார் என்று எதிர் பார்க்க முடியாது. அந்த சூழ்நிலையில்,




முஸ்லிம் காங்கிரஸ், பதவி ஆசையில் அல்லது குறுகிய அரசியல் கண்ணோட்டம் காரணமாக இனத்திற்கு கிடைக்க வேண் டிய வாய்ப்பை இழக்க காரணமானது என்ற குற்றச்சாட்டு கூட எழலாம். பின்னர் வரக்கூடிய அத்தகைய குற்றச்சாட்டில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் இப்போதே தப்பிவிட்டது என்று கூறலாம்.

அது தவிர, கூட்டமைப்புடன் அணி சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் அரசு அமைத்தால், முஸ்லிம் காங்கிரஸ்

தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான மத்திய அரசில் இருந்து விலக வேண்டிய சூழ்நிலை ஏற்படும். கிழக்கு மாகாணத்தில் தேசிய அரசு என்று தோன்றாவிட்டால், அதுவே அரசியல் தர்மமும் கூட. ஆனால், கிழக்கு மாகாண தேர்தல் சமயத்தில் கூட தான் பங்கு வகித்த மத்திய அரசில் இருந்து விலகாத முஸ்லிம் காங்கிரஸ், பின்னர் அவ்வாறு செய்வது அரசியல் ரீதியாக கேள்விக் குறியான விடயம்.

இதற்குமாறாக, கட்சியின் தற்போதைய முடிவின்படி, மத்தியில் அமைச்சர்கள் பதவியை தக்க வைத்துக்கொள்ளும் போதே, மாகாணத்திலும் அந்த கட்சி பதவிகளை பெறுவதற்கான வாய்ப்புகள் தோன்றி உள்ளன. அதுவும், இரண்டரை ஆண்டுகளுக்கு பின்னர் முதலமைச்சர்



பதவியும் கிடைக்கும் என்ற சூழ்நிலையில், அரசு மற்றும் அமைச்சர் பதவியில் அனுபவம் இல்லாத முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினர்கள் இடைப்பட்ட காலத்தை ஆட்சி அனுபவம் பெறுவதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். மத்தியில் அரசியல் மற்றும் அரசு அனுபவம் உள்ள கட்சித் தலைமைகள், இந்த காலத்தை தங்களது மாகாண சபை உறுப்பினர் களும் மாகாண அமைச்சர்களையும் தயார்படுத்த, சீர்படுத்த பயன்படுத்திக் கொள்ளலாம்.

என்றாலும், இது போன்ற வாய்ப்பு களும் ஆலோசனைகளும் கிழக்கு மாகாண அரசு குறித்து முஸ்லிம் காங்கிரஸ் முடிவு எடுக்கும் போது கட்சியின் தலைமையால் கருத்தில் கொள்ளப் பட்டதாக தெரியவில்லை. ஆனால், கூட்ட மைப்புடன் அணி சேர்ந்தால், முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை அளவிலும், மத்தியில் பாராளுமன்றத்திலும் மீண்டும் ஒரு முறை உடையலாம் அல்லது உடைக் கப்படலாம் என்ற உண்மையை கட்சித் தலைமை உணராது இருந்திருக்க முடி யாது. தேசிய அளவில் கட்சியின் கடந்த காலம் இதனை உறுதி செய்யும். எனவே, கட்சியின் ஒற்றுமை என்ற கடிவாளமும் கூட முஸ்லிம் காங்கிரஸின் முடிவை வழிநடத்தி இருக்கலாம்.

இதன் காரணமாகவெல்லாம் மட்டுமே, முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, தலைவர்களின் பதவி ஆசைக்கு தனது வாக்காளர் களையும் சமூகத்தையும் அடகு வைத்து விட்டது என்பது அல்ல பொருள். கட்சி நிறுவனர், காலம் சென்ற அஷ்ரஃப் காலம் தொட்டே, முஸ்லிம் காங்கிரஸ் மத்தியில் ஆளும் பேரினவாதமல்லாத ஆனால் சிங்கள-பௌத்த அரசியல் தலைமையுடன் இணைந்து பணிசெய் தாலே தங்களது சமூகத்திற்கு பயன்படும் வகையில் செயல்படலாம் என்று கருதி வந்திருக்கிறது. இதிலும் குறிப்பாக, அவ்வப்போதைய அரசில் அங்கம் வகித்து தங்களது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முஸ்லிம் காங்கிரஸும், அதில் இருந்து பின்னர் பிரிந்து சென்ற பிற கட்சிகளும் முனைப்பாக இருந்து வந்துள்ளன.

### தலை இருக்க, வால் ஆடும்?

இந்த வகையில், முஸ்லிம் காங்கி ரஸும் சரி, அந்த இனத்தவரை வழி நடத்தும் பிற அரசியல் கட்சிகளும் சரி, காலஞ் சென்ற சௌமியமூர்த்தி தொண்ட மான் தலைமையிலான மலையக தமி ழர்களின் அரசியல் கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் நிலைப்பாட்டையும் அணுகுமுறையை யுமே பின்பற்றி வந்துள்ளனர் என்பதே உண்மை. இன்னும் சொல்லப் போனால், தொழிலாளர் காங்கிரஸ் போன்றே முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அரசியல் அணுகுமுறை விடயத்தில் "இலங்கைத் தமிழர் சமுதாயம்" மற்றும் அவர்களது அரசியல் தலைமை காட்டிய வழியில் செல்வதற்கு தொடர்ந்து மறுத்து வந்திருக்கிறது. இனப்போருக்கு பிந்திய காலகட்டத்திலும் இரு தரப்பாரும் தங் களது அணுகுமுறையை இன்னமும் மாற்றிக் கொள்ளவில்லை.

இந்தப் பின்னணியில், கிழக்கு மாகாண த்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் ஆட்சியை பகிர்ந்து கொண்டால், முஸ்லிம் காங்கிரஸ் மத்திய அரசுடனான பிரச்சி னைகளில் எந்தவிதமான அணுகு முறையை முன்னெடுக்க வேண்டும் என்ற வகையில் அன்றாட அரசு நடை முறையிலும், மற்றும் நடைமுறை அரசி யலிலும் இரு கட்சிகளின் இடையேயும் பிரச்சினை மேல் பிரச்சினைகளே தோன்றி இருக்கும். அதிலும் குறிப்பாக, அதிகாரப் பகிர்வு முறை மற்றுமுள்ள இனப்பிரச்சினை குறித்த அரசியல் நடவடி க்கைகளிலும் இந்த அணுகுமுறை குறித்த அடிப்படை விவகாரங்கள் எல்லா நிலைகளிலும் எல்லா விடயங்களில் வெளிப்படுவதும் தவிர்க்க முடியாத விடயமாக மாறிவிடும். அதிலும், தமிழ்க் கூட்டமைப்பு பங்கு பெறும் அரசில் முஸ் லிம் காங்கிரஸ் முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டால், "தலை இருக்க, வால் ஆடும்" கதையாக அது முடியும். அல்லது அது போன்ற குற்றச்சாட்டுகளே முன் வைக்கப்படும்.

இது மட்டுமல்ல, இனப்பிரச்சினை

> இனப்பிரச்சினை குறித்த அரசியல் பேச்சுவார்த் தைகள் எந்தக்காலகட்டத்தில், எந்த வழிமுறையில் நடந்தாலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கும் என்று கருதிவிட முடியாது. இரு தரப்பினரிடையேயும் ஆழமாக வேரூன்றிவிட்ட வேறுபாடுகளே விவகாரங்களாக வெளிப்படும் வாய்ப்பே அதிகம்

குறித்த அரசியல் பேச்சுவார்த்தைகள் எந்த காலகட்டத்தில், எந்த வழிமுறையில் நடந்தாலும், கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கும் என்று கருதிவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால், இரு தரப்பினரிடையேயும் ஆழமாகவேரூன்றி விட்டவித்தியாசங்களே, விவகாரங்களாய் வெளிப்படும் வாய்ப்பே அதிகம் உள்ளது. குறிப்பாக, வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்த பிரச்சினையைக் கூறலாம். மேலெழுந்தவாரியாக இந்தப் பிரச்சினையில் இரு தரப்பினரிடையேயும் ஒருமித்த கருத்து உருவாவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், இது குறித்து இரு தரப்பினருமே எந்தவிதத்திலும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவும் இல்லை. ஒருமித்த கருத்து இருந்தால், அதனை வெளிப்படுத்தியதும் இல்லை.

கிழக்கு மாகாண தேர்தலுக்குப்பின்னர், என்னவோ கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுமே "இயற்கை கூட்டணி" அமைக்க முடியும் என்ற விதத்தில் தமிழ் அரசியல் தலைமை பேசி வந்தது. அரசு அமைப்பது குறித்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முடிவு தெரிந்த பின்னர், அரசு கூட்டணியுடன் சேர்ந்ததன் மூலம், அந்த கட்சி என்னவோ தான் சார்ந்திருக்கும் சமுதாயத்தை "ஏமாற்றி விட்டது" போலவும் சில கூட்டமைப்பு தலைவர்கள் பேசவும் செய்தார்கள். இதில் "ஏமாற்று வேலை" எங்கே வந்தது என்பது புரியவில்லை. கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்து நின்றாலும் முஸ்லிம் காங்கிரஸ் மத்திய அரசில் இருந்து விலகி விடவில்லை. விலகிவிடப் போவதாக கோடிட்டுக்கூட காட்டியது இல்லை. எங்கே வந்தது இந்த "ஏமாற்று வேலை"?

மாறாக, முஸ்லிம் வாக்குகளும், அவர்களது கட்சியின் அரசியல் ஆதரவும். இனப்பிரச்சினை குறித்த ஒருமித்த கருத்து குறித்தும் கூட்டமைப்பே அதிகம் பேசி வந்திருக்கிறது. என்றாலும், கடந்த 1990-ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் இனத்தவரை தடாலடியாக விடுதலைப்புலிகள் இயக்கம், மரண பயத்தைக் காட்டி வெளியேற்றியதையும், அதையொட்டி, கிழக்கு மாகாணத்திலும் அந்த இனத்தவரை படுகொலை செய்ததை அந்த இனத்தவர்கள் இன்னமும் மறந்திருக்க மாட்டார்கள். அது குறித்து சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத எந்த முடிவையும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் எடுத்துவிட முடியாது என்பதே உண்மை.

இனப்பிரச்சினைக்கு, "ஓஸ்லோ தீர்மானம்" அடிப்படையில் தீர்வு காண முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் ஒரேயொரு சுற்றுப் பேச்சு நடத்திய விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், அது குறித்து வருத்தம் தெரிவித்ததாக செய்திகள் எதுவும் வெளியாகவில்லை. தற்போது போர் முடிவிற்கு வந்து மூன்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் கூட்டமைப்பு தலைமையும் அத்தகைய "துன்பியல்" சம்பவங்களுக்கு வருத்தம் தெரிவிக்கவில்லை. அதன் பின்னர், முஸ்லிம் சமுதாயத்தை சார்ந்த அரசியல் கட்சிகளால் எவ்வாறு அரசியல் கூட்டணி குறித்து தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று கூட்டமைப்பு எதிர்பார்த்தது என்பது புரியாத புதிராகவே உள்ளது.


தற்போதைய நிலைமையில் கிழக்கு மாகாணம் தனியாக இருந்தால் மட்டுமே ஐந்து ஆண்டுகள் முஸ்லிம் முதலமைச்சர்(கள்) பதவியில் இருக்க முடியும் என்ற சாத்தியக்கூறு காரணமாக, வடக்கு மாகாணத்துடனான இணைப்பு குறித்து, முஸ்லிம் காங்கிரஸோ அந்த சமூகத்தின் பிற கட்சிகளோ நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்றே தோன்றுகிறது. அதே சமயம், இந்த காரணங்களுக்காக மட்டுமே அரசு அணியுடனான கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு முதலமைச்சர் பதவி கிடைத்து விடும் என்று அறுதியிட்டு கூறிவிட முடியாது.

அதாவது, 2014-15 காலகட்டத்தில், ஜனாதிபதி பதவி மற்றும் பாராளுமன்றங்களுக்கான தேர்தல்கள் குறித்த ஹேஷ்யங்களும் சர்ச்சைகளும் தேசிய அளவில் கிளம்பி இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அத்தகைய சூழ்நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அப்போதைய நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பது குறித்து இப்போதே முடிவாக எதையும் அந்தக் கட்சித் தலைமை கூட கூறிவிட முடியாது. இனப்பிரச்சினைக்கு ஏதாவது ஒரு விதத்தில் தீர்வு ஏற்படுமாயின், சிங்கள அரசுடனான தமிழ்க் கூட்டமைப்பின் அப்போதைய உறவு முறை குறித்தும், இப்போதே பேச முடியாது.

அதற்கும் அப்பால் சென்று, ஐந்து வருடங்களுக்கு முதலமைச்சராக பதவி ஏற்ற பிள்ளையான் என அறியப்படும் சந்திரகாந்தன், அதனை நான்கு வருடங்களிலேயே இழக்க வேண்டிய அரசியல் துர்ப்பாக்கியம் ஏற்பட்டதென்றால், அவருக்கு பின்னால் கிழக்கு மாகாண முதல்வர் பதவியேற்றுள்ள நஜீப் அப்துல் மஜீத் இரண்டரை ஆண்டுகளுக்கு பின்னர் ஏன் மாகாணசபைக்கு மறுபடியும் தேர்தல் வருவதற்கு தடையாக நிற்கப் போகிறாரா என்பதும் புரியாத புதிராக இருக்கும்.

**தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு தனியொரு அரசியல் வடிவம் கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினையின் அடிப்படையில் அந்த அணி பிரிந்தால் கிழக்கு மாகாணத்தில் அதன் எதிரொலி என்னவாக இருக்கும்? கிழக்கில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கூட்டமைப்பு வேட்பாளர்களில் பலரும் தமிழரசுக்கட்சி அல்லாத பிற பங்காளிக்கட்சிகளைச் சார்ந்தவர்கள். அதுவே தனிக்கதையாக உருவெடுக்கும் வாய்ப்பு உள்ளது**

இதற்கு இடையில், வடக்கு மாகாண சபை தேர்தல் நடைபெற்று அதில் இடப்பங்கீட்டில் உள்கட்சி பிரச்சினைகள் வெடித்தாலோ, அல்லது கூட்டமைப்பிற்கு தனியொரு அரசியல் வடிவம் கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினையின் அடிப்படையில் அந்த அணி பிரிந்தாலோ, கிழக்கு மாகாணத்தில் அதன் எதிரொலி என்னவாக இருக்கும் என்பதனையும் இப்போதே கூறிவிட முடியாது. ஆனால், பத்திரிகை செய்திகளின் அடிப்படையில் பார்த்தால், கிழக்கு மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பதினொரு கூட்டமைப்பு வேட்பாளர்களில் பலரும் "இலங்கை தமிழ் அரசு கட்சி" அல்லாத பிற பங்கு கட்சிகளைச் சார்ந்தவர்கள் என்று கருதப்படுகிறது. அது உண்மை என்றால், அதுவே தனிக்கதையாக உருவெடுக்கும் வாய்ப்பு உள்ளது. அப்போது, இப்போதுள்ள கணக்குகளும், கருத்துக்களும் கூட எடுபடாது!





எம்.பி.
வித்தியாதரன்

# ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்திய விஜயம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் தமிழர் பிரச்சினை தொடர்பில் ஒருவகையான கசப்பு நிலைக்கு உள்ளாகிய ஒரு நேரத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்பார்க்கப்படாத முறையில் இந்தியாவுக்கு ஒரு விஜயத்தை அண்மையில் மேற்கொண்டிருந்தார். கௌதமபுத்தர் பரிநிர்வாணம் அடைந்து 2600 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு மத்தியப் பிரதேச மாநிலத்தின் சாஞ்சியில் அமைக்கப்படவிருக்கும் பௌத்த பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்டுவதற்காக அந்த மாநில அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ராஜபக்ஷ வந்திருந்தார். தமிழ் நாடு மாநிலத்தில் இலங்கைப் பிரஜைகளுக்கு எதிரான சில வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற பின்புலத்தில் ராஜபக்ஷவின் விஜயம் அமைந்திருந்தது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியிருந்தது ஒரு அம்சமாகும்.

இலங்கையில் இருந்து சென்னைக்கு வந்த கால்பந்து விளையாட்டு அணிகள் தமிழ்நாடு அரசாங்கத்தினாலேயே திருப்பியனுப்பப்பட்ட சம்பவமும் சிங்களவர்களும் தமிழர்களும் கலந்த யாத்திரிகர் குழு மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் இலங்கை அரசாங்கத்துக்கு மாத்திரமல்ல, இந்தியாவில் உள்ள அரசியல் தலைவர்கள், கொள்கைவகுப்பாளர்கள், அரசியல் அவதானிகள் என்று பலதரப்பினருக்கும் பெரும் வெறுப்பை ஏற்படுத்தியிருந்தன. தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை, இலங்கை அரசாங்கத்தின் மீது (மக்களுக்கும் மக்களுக்கும் இடையேயான உறவுகளைப் பாதிக்காத முறையில்) எவ்வாறு நெருக்குதல்களைப் பிரயோகிப்பது என்ற ஒரு மறு சிந்தனை தமிழ் நாட்டில் கூட பிறந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதிகூட, இலங்கைப் பிரஜைகள் தொடர்பில் தமிழகத்தில் இடம்பெற்ற அண்மைக்கால நிகழ்வுகளில்



டில்லி டயறி

இருந்து தன்னைத் தூர விலக்கிக் கொண்டார். விளையாட்டு வீரர்களை திருப்பியனுப்பியதை கருணாநிதி கண்டிக்கவும் செய்தார். எவ்வாறெனினும் தமிழர்களின் வாக்குகளை வேட்டையாடும் போட்டா போட்டியில், அதுவும் குறிப்பாக உணர்ச்சிகளைக் கிளறி வாக்குகளை அள்ளிக்கொள்ளும் விடயத்தில் திராவிடக் கட்சிகளின் போக்கில் மாறுதல் எதுவும் பெரிதாக ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்தக் கட்சிகளில் சிலவற்றுடன் சேர்ந்தே மத்தியில் கூட்டாட்சி நடைபெற்றுவருகின்ற பின்புலத்தில் நோக்குகையில் சுயாதீனமானதும் பகுத்தறிவு பூர்வமானதுமான வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு இருக்கின்ற ஆபத்து தற்போதைக்கு பெரும்பாலும் நிரந்தரமானதாகிவிட்டது என்றே தோன்றுகிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில் நோக்குகையில், மத்தியப் பிரதேச மாநிலத்தில் மதரீதியான வைபவமொன்றில் கலந்து கொள்வதாக ராஜபக்ஷ வந்திருந்தாலும் கூட, அவரது விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே அமைந்தது. மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் அதன் பங்காளிக் கட்சியான தி.மு.க.வின் எச்சரிக்கைகளை அலட்சியம் செய்து, ராஜபக்ஷவின் வருகையை நான்கு நாள் (செப்டெம்பர் 19-22) உத்தியோகபூர்வ விஜயமாக மாற்றியது. இந்த விஜயத்தின்போது இலங்கையின் நல்ல நண்பர் என்று கருதப்படும் இந்திய ஜனாதிபதி பிரணாப்முகர்ஜியுடனும் பிரதமர் மன்மோகன்சிங்குடனும் ராஜபக்ஷ முக்கியமான சந்திப்புகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பொதுநலவரசு விளையாட்டுப்போட்டிகளின் நிறைவு வைபவத்தில் கலந்து கொள்வதற்கு 2010 இல் ராஜபக்ஷ டில்லிக்கு வந்திருந்தார். உலகக் கிண்ணக் கிரிக்கெட்போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான போட்டியைப் பார்வையிட 2011 இல் மும்பைக்கும் அவர் வந்திருந்தார். அவரின் அந்த வருகைகளுக்குப் பின்னரான காலகட்டத்தில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் கசப்பு ஏற்பட்டுவிட்டது. இதற்குப் பிரதான காரணம் தமிழகக் கட்சிகளின் நெருக்குதல்களின் கீழ், இந்தியா ஜெனீவாவில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்ததேயாகும். மன்மோகன் சிங்கின் அரசாங்கம் அவ்வாறு செயற்படுமென்று இலங்கை எதிர்பார்க்கவேயில்லை. கூட்டரசாங்க நெருக்குதல்களின் விளைவாக அவ்வாறு செயற்பட்ட மன்மோகன்சிங் பின்னர் இலங்கையுடனான உறவுகளில் ஏற்பட்டிருக்கும் கசப்புணர்வுகளைப் போக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கினார்.

டில்லியில் ராஷ்டிரபதி பவனுக்குச் சென்று பிரணாப் முகர்ஜியை ராஜபக்ஷ சந்தித்தார். அவர் இந்தியாவின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதை முன்னிட்டு தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்ட ராஜபக்ஷ, அமைச்சர் என்றவகையில் குறிப்பாக நிதியமைச்சராகவும் வெளியுறவு அமைச்சராகவும் பதவிவகித்த நீண்ட கால கட்டங்களில் பிரணாப்முகர்ஜி இலங்கை-இந்திய உறவுகளை மேம்படுத்துவதற்குச் செய்த பங்களிப்புகளை ராஜபக்ஷ அந்தச் சந்திப்பின்போது நினைவுகூர்ந்தார். இருதரப்பு உறவுகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்ந்த இரு ஜனாதிபதிகளும் நட்புறவை மேலும் வலுப்படுத்திக்கொள்வதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினர்.

ஜெனீவாவுக்கு பிறகு இலங்கைக்கு இந்தியா மீது ஏற்பட்ட வெறுப்புணர்வின் பின்புலத்தில் நோக்கும் போது ராஜபக்ஷவின் இந்த வருகைக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது





வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சகிதம் பல உறுப்பினர்கள் கொண்ட தூதுக்குழுவுடன் இந்தியா வந்திருந்த ராஜபக்ஷ பிரதமர் மன்மோகன்சிங்குடன் உத்தியோக பூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இலங்கை ஜனாதிபதியைக் கௌரவித்து மன்மோகன்சிங் இரவு விருந்துபசாரமொன்றையும் ஏற்பாடு செய்திருந்தார். பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் உட்பட இருதரப்பு உறவுகளுடன் சம்பந்தப்பட்ட முழு விவகாரங்களையும் ஆராய்வதற்கும் பரஸ்பரம் பயனளிக்கக்கூடிய முறையில் உறவுகளை விஸ்தரிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்கும் இந்தியாவுடனான செயற்திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து புரிந்துணர்ந்து கொள்வதற்கும் இருதலைவர்களுக்கும் ஒரு நல்வாய்ப்பாக இவ்விஜயம் அமைந்தது. 2010 நடுப்பகுதிக்குப் பிறகு இவர்கள் சந்திக்கவில்லை.

அத்துடன் இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கு வருவதற்கு முன்பதாக அவரது அரசாங்கம் சீனாவுடனும் பாகிஸ்தானுடம் மேலும் கூடுதலாக நெருங்குவதுபோன்று காண்பிக்கும் சில செயற்பாடுகளிலும் இறங்கியிருந்தது. இந்தியாவிற்கு நடுக்கத்தை கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே இலங்கை இதைச் செய்தது. அண்மையில் இலங்கை ஜனாதிபதி விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கு பாகிஸ்தான் உதவியமைக்காக நன்றியையும் பிரத்தியேகமாகத் தெரிவித்திருந்தார். அதுபோதாதென்று புலிகளுடனான போரின் போது சீனா

வழங்கிய உதவிகளுக்காகவும் ராஜபக்ஷ நன்றி கூறினார்.

இதேவேளை இன்னொரு முக்கிய விடயத்தைக் கவனிக்க வேண்டும். இலங்கைக்கு வருமாறு கடந்த வருட ஆரம்பத்தில் ராஜபக்ஷ விடுத்த அழைப்பை யதுமான, எதிர்காலத்தில் நம்பிக்கை வைப்பதற்கு அதிகாரப் பரவலாக்கலை செய்யவேண்டுமென்ற கருத்தையும் மன்மோகன் சிங்கும் ராஜபக்ஷவுக்கு மீண்டும் வலியுறுத்திக் கூறினார். மூன்று மாகாணங்களில் தேர்தல் நடைபெற



ஏற்றுக்கொண்ட போதிலும் கூட 2008 இற்குப் பிறகு மன்மோகன் சிங் இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை.

எவ்வாறெனினும் டில்லியில் அண்மைய சந்திப்புகள் நல்ல சூழ்நிலையிலேயே இடம்பெற்றன. கௌதம புத்தர் பரிநிர்வாணம் அடைந்த 2600ஆவது ஆண்டு கொண்டாட்டங்களை இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காகவும் கபிலவஸ்து புனித சின்னங்களை இலங்கையில் மக்களின் தரிசனத்திற்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்தமைக்காகவும் இந்திய பிரதமருக்கு ராஜபக்ஷநன்றி தெரிவித்துக்கொண்டார். வடக்கு, கிழக்கில் இடம்பெறுகின்ற புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கை தொடர்பிலான முன்னேற்றங்கள் குறித்தும் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பிலான செயற்பாடுகள் குறித்தும் மன்மோகன் சிங்கிற்கு ஜனாதிபதி விளக்கிக் கூறினார். இந்த விவகாரங்கள் இருதரப்பு உறவுகளில் சிறிது பாதிப்பை ஏற்படுத்துபவையாக இருந்து வருகின்றன. பேச்சுவார்த்தைகளின் போது நல்லிணக்க முயற்சிகள் பற்றியும் குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான முன்னேற்றங்கள் பற்றியும் இருவரும் ஆராய்ந்தனர்.

இலங்கைத் தமிழர்கள் கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழக்கூடிய

றதைச்சுட்டிக்காட்டிய ராஜபக்ஷ, வடமாகாணத்திலும் தேர்தல்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்தார். தமிழர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் தனது அரசாங்கம் மேற்கொள்கின்ற பல்வேறு நடவடிக்கை குறித்தும் ராஜபக்ஷ விளக்கமளித்தார். தமிழர்களுக்கானபுனர்வாழ்வு செயன்முறைகள் மற்றும் மீனவர் குறித்து ஜனாதிபதி முகர்ஜி இலங்கை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரத் தவறவில்லை.

ராஜபக்ஷவின் இந்த இந்திய விஜயத்தின்போது 2ஆவது கட்டத்திலே பிரச்சினை கிளம்பியது. அதாவது செப்டெம்பர் 21ஆம் திகதி மத்திய பிரதேசத்தின் சாஞ்சிக்கு அவர் வருவதை எதிர்த்து தென்மாநிலமான தமிழகத்தில் எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன. ராஜபக்ஷவின் விஜயம் பற்றிய அறிவிப்பு வெளியான உடனேயே மறுமலர்ச்சி திராவிட



**தமிழ் நாட்டிற்கு வெளியே பெரிய அளவில் ஆர்ப்பாட்டத்தை செய்வதில் வைகோவினால் வெற்றி பெற முடியாமல் போனாலும் கடும் போக்குடைய தமிழர்களின் உணர்வுகளை இலங்கை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதில் அவர் வெற்றிகண்டிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்**

முன்னேற்றக்கழகத் தலைவர் வைகோ எதிர்ப்பியக்கங்களை திட்டமிடத்தொடங்கினார். தமிழகத்தைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஏனைய திராவிடக் கட்சிகளை விடவும் தீவிரமான நிலைப்பாட்டைக் கொண்டவர் வைகோ. சாஞ்சியில் ராஜபக்ஷவுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை செய்வதற்கென நூற்றுக்கணக்கான தனது ஆதரவாளர் சகிதம் மத்தியப்பிரதேசத்தை அவர் சென்றடைந்தார். வைகோவை தனது மாநிலத்தில் எந்த ஆர்ப்பாட்டத்தையும் செய்ய வேண்டாமென்றும் சட்டம் ஒழுங்கிற்கு குந்தகம் விளைவிக்க வேண்டாம் என்றும் மத்தியப்பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சவ்கான் கேட்டுக்கொண்ட போதிலும் அதற்கு அவர் இணங்கவில்லை. ஏனென்றால், இந்த எதிர்ப்பியக்கங்களைக் கைவிடுவது வைகோவைப்

பொறுத்தவரை அரசியல் ரீதியில் நஷ்டத்தை தரக்கூடியதாகும்.

ராஜபக்ஷகலந்துகொள்ளும்வைபவம் இடம்பெறுகின்ற தலத்திலிருந்து வெகு தொலைவிலேயே வைகோவினால் ஆர்ப்பாட்டத்தை நடத்தக்கூடியதாக இருந்தது. வைகோவின் சுமார் 1000 ஆதரவாளர்கள் ராஜபக்ஷவின் போஸ்டர்களை துவம்சம் செய்து தீ வைத்துக்கொளுத்தினர். முன்னதாக மத்தியப் பிரதேசத்தின் தலைநகர் போபாலில் ராஜபக்ஷவின் கொடும்பாவியை மறுமலர்ச்சி தி.மு.கா. வினர்கொளுத்தினர். போபாலில்இருந்து தான் இலங்கை ஜனாதிபதி சாஞ்சிக்கு புறப்பட்டிருந்தார். சாஞ்சி நகரம் அமைந்திருக்கும் ரெய்ஷன் மாவட்டத்தில் பெருவாரியான ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். சாஞ்சி பாதுகாப்புக் கொத்தளம் போன்றே காட்சி தந்தது. பௌத்த மற்றும் இந்து பல்கலைக் கழகத்திற்கென அடிக்கல்லை நாட்டிய ராஜபக்ஷ மீண்டும் டில்லிக்கு பறந்து சென்றார். அதேவேளை மூன்று நாட்களுக்கு முன்னதாக நாக்பூரிலிருந்து கிழக்கு மத்திய பிரதேசத்திற்குள் பிரவேசித்திருந்த வைகோவும் ஆதரவாளர்களும் அங்குமறியல்போராட்டத்தில்ஈடுபட்டனர். இலங்கை ஜனாதிபதியைக் கண்டித்து கோஷம்எழுப்பிய அவர்கள் கொடும்பாவி ஒன்றையும் எரித்தனர்.

தடையுத்தரவு மீறியமைக்காக பொலிஸார் வைகோவையும் ஆதரவாளர்களையும்கைதுசெய்தனர். முதலமைச்சர் சிவராஜ்சிங் சவ்கானையும் அவரது பாரதிய ஜனதாக் கட்சியையும் வைகோ கடுமையாகக் கண்டித்தார். மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களை துரோகிகள் என்று அவர் வர்ணித்தார். தமிழ்நாட்டிலிருந்து வாகனப் பேரணியாக புறப்படுவதற்கு முன்னதாக சவ்கானுக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் சாஞ்சியில் தாங்கள் அமைதியான ஒரு எதிர்ப்பியக்கத்தையே நடத்துவதற்கு திட்டமிட்டதாகத் தெரிவித்திருந்ததாகவும் அதற்கு அவர் மதிப்பளிக்கவில்லை என்றும் வைகோ குற்றம் சாட்டினார். மத்திய பிரதேசத்திற்குள் தாங்கள் பிரவேசித்த தருணம் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதாகவும் ஆனால், சாஞ்சிக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் வைகோ குறிப்பிட்டார்.

இலங்கை ஜனாதிபதிக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்தும் திட்டம் பயனளிக்காமல் போனதையடுத்து சென்னைக்கு திரும்பிய வைகோ அடுத்த தடவை இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கு விஜயம் செய்வாராக இருந்தால் பிரதமர் மன்மோன் சிங்கின் அலுவலகத்தை முற்றுகையிடப்போவதாக எச்சரிக்கை செய்தார். முடியுமானால் மீண்டும் வருமாறு ராஜபக்ஷவுக்கு மன்மோகன் சிங் அழைப்பை விடுக்கட்டும் பார்க்கலாமென்றும் அவர் சவால் விடுத்தார். சகல மாநிலங்களின் தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு திட்டங்களை தீட்டிக்கொண்டிருப்பதாகவும் இந்த ஆர்ப்பாட்டங்களில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளில் அக்கறையுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் பங்கேற்பார்கள் என்றும் அவர் அறிவித்திருக்கிறார். விடுதலைச் சிறுத்தைகள் போன்ற ஏனைய தமிழ்க்குழுக்களும் இலங்கை ஜனாதிபதியின் விஜயத்தை கண்டித்திருந்தது.

தமிழ் நாட்டிற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தைச் செய்வதில் வைகோ வெற்றி பெற முடியாமல் போய்விட்டாலும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக குரலெழுப்புவதில் அவர் வெற்றி கண்டிருக்கிறார். உண்மையில் இன்னொரு மாநிலத்தில் வைகோவினால் அவ்வாறு செயற்பட முடியாது. ஆனால் அதே வேளை கடும்போக்குத் தமிழர்களின் உணர்வுகளை இலங்கை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதில் அவர் வெற்றிகண்டிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

## மமதாவின் சிலிர்ப்பிலிருந்து தப்பிய மன்மோகன் அரசு


ஒரு சிறிய அரசியல் நில நடுக்கத்திலிருந்து மன்மோகன் சிங் அரசாங்கம் தப்பிப் பிழைத்திருக்கிறது. பல்வேறு பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மும்முரமாக இருக்கும் அரசாங்கம் மமதா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸின் நடவடிக்கையால் சற்று தடுமாற்றம் அடைந்தது. லோக்சபாவில் 19 உறுப்பினர்களைக் கொண்ட திரிணாமுல் காங்கிரஸ் மன்மோகன்சிங் அரசாங்கம் முன்னெடுக்கும் பொருளாதார சீர்திருத்தங்களை கடுமையாக எதிர்க்கிறது. இதன் விளைவாக 15 மாத காலமாக சீர்திருத்த நடவடிக்கைகளை பிற்போட்டு வந்தது. டீசல் விலை அதிகரிப்பும் சில்லறை வியாபாரத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கு அனுமதியும் முக்கியமான இரு சீர்திருத்தங்களுமாகும். இந்த இரு நடவடிக்கைகளையும் அரசாங்கம் அறிவித்த போது அவற்றை மீளப்பெறுமாறு மம்தா பானர்ஜி கோரினார். ஆனால், தனது தீர்மானத்தில் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியாக இருந்தார். காங்கிரஸும் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்கியது. இதையடுத்து மத்திய அரசாங்கத்திலிருந்து வெளியேறப்போவதாக விடுத்த எச்சரிக்கையை பானர்ஜி நடைமுறையில் காட்டவேண்டிய தாயிற்று. அவரது கட்சியைச் சேர்ந்த 6 அமைச்சர்கள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் பதவிவிலகல் கடிதங்களை கையளித்தனர்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சி விலகியதையடுத்து ஐக்கிய முற்போக்கு கூட்டணியினதும் அதன் நேச அணிகளினதும்லோக்சபாபலம்254ஆககுறைந்தது. லோக்சபாவில் சாதாரண பெரும்பான்மைக்குத் தேவைப்படும் 273 ஆசனங்களுக்கு இது 19 குறைவாகும். ஆனால், ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு வெளியே இருக்கும் சமாஜ்வாதிக் கட்சி (22) மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி (21) போன்ற கட்சிகளின் ஆதரவுடன் கூட்டரசாங்கத்திற்கு 300க்கும் அதிகமான உறுப்பினர்களின் ஆதரவு தற்போது கிடைக்கிறது. பானர்ஜியின் நடவடிக்கைக்குபதில்நடவடிக்கையாகமேற்குவங்காள மாநிலத்தில் பானர்ஜி தலைமையிலான அரசாங்கத்திடம் இருந்து காங்கிரஸ் அதன் அமைச்சர்களை விலக்கிக் கொண்டது.

தனது நடவடிக்கை மன்மோகன் சிங் அரசாங்கத்தை நிலை குலையச் செய்யக் கூடுமென்ற பானர்ஜியின் நினைப்பு பிழைத்துப்போய்விட்டது. ஜனாதிபதித் தேர்தலின் போது நடந்துகொண்டதைப் போன்று பானர்ஜியை காங்கிரஸ் கட்சி தந்திரமாக விஞ்சிவிட்டது. மீண்டும் முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாதிக் கட்சியே மன்மோகன் சிங் அரசாங்கத்தைப் பாதுகாக்க ஓடோடி வந்திருக்கிறது. எதிர்க்கட்சிகளை உள்ளடக்கிய மூன்றாவது அணியொன்றின் ஊடாக அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு பிரதமராக வருவதற்கு கனவுகண்டு கொண்டிருக்கும் முலாயம் சிங் தற்போதைய அரசாங்கம் வீழ்ச்சி காண்பதைத் தான் விரும்பவில்லை என்று அறிவித்தார். குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி தலைமையிலான இனவாதக் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு உதவக்கூடிய எந்த நடவடிக்கைகளிலும் தான் இறங்கப் போவதில்லை என்று முலாயம் சிங் தனது செயற்பாட்டிற்கு நியாயம் கற்பித்தார்.

ஆனால் முலாயம் சிங் யாதவிற்கும் பகுஜன் சமாஜ் கட்சியின் மாயாவதிக்கும் எதிராக இருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் மத்திய புலனாய்வுப் பணியகத்தினை (சி.பி.ஐ) பயன்படுத்தி அவர்களை அச்சுறுத்தியே காங்கிரஸ் ஆதரவைப் பெற்றுக்கொண்டதாக அவதானிகள் பேசிக்கொள்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலின் போதும் காங்கிரஸுக்கு தொல்லை கொடுப்பதற்காக பானர்ஜியுடன் சேர்ந்து எதிர்த்திசையிலேயே சென்ற யாதவ் பிறகு இறுதியில் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவளிப்பதாக அறிவிக்க வேண்டியிருந்தது. அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்றபோதிலும் கூட யாதவ் டீசல் விலை அதிகரிப்பு, சில்லறை வியாபாரத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கு அனுமதி போன்ற நடவடிக்கைகளுக்கெதிராக எதிர்க்கட்சிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் கலந்து கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று அதாவது எந்தவொரு கட்சியுமே தற்போது பொதுத்தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க விரும்புவதாகத் தெரியவில்லை. சகல தேசியக் கட்சிகளும் உட்பிரச்சினைகளால் அல்லாடிக் கொண்டிருக்கின்றன. ஆனால், தற்போதைய ஏற்பாடு எவ்வளவு காலத்திற்கு தொடருமென்பது ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும். இடதுசாரிப் போக்கான ஒரு அரசியல்வாதியாக தன்னை முன்னிறுத்தும் யாதவ் சாதாரண மக்களைப் பாதிக்கும் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் அரசாங்கத்தை எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து ஆதரிக்கக் கூடியதாக இருக்கும். ஏற்கனவே வாழ்க்கைச் செலவு படுமோசமாக அதிகரித்ததால் மக்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாகிறார்கள்.



**தனது நடவடிக்கை மன்மோகன் சிங் அரசாங்கத்தை நிலைகுலையச்செய்யும் என்ற மமதா பானர்ஜியின் நினைப்பு பிழைத்துப்போய் விட்டது**

திரிணாமுல் காங்கிரஸின் விலகலையடுத்து சோனியாகாந்தி தலைமையில் காரியக் கமிட்டியை கூட்டிய காங்கிரஸ் முக்கியமான பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் அரசாங்கத்திற்கு முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதாக தீர்மானம் நிறைவேற்றியது. அத்துடன் தற்போதைய அரசியல் சூழ்நிலையை கவனத்தில் எடுக்க காரிய கமிட்டி தவறவில்லை.

சில தினங்கள் கழித்து பாரதிய ஜனதாக் கட்சியின் மத்திய தலைமைத்துவம் டில்லிக்கு அண்மையாகக் கூடி அதன் தந்திரோபாயங்களை வகுத்தது. தற்போதைய தலைவர் நிதின் கட்காரி இன்னொரு மூன்று வருடங்களுக்கு தலைவராக இருப்பதற்கு வகைசெய்யக் கூடியதாக கட்சியின் யாப்பை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதே வேளை, நரேந்திரமோடி, முன்னாள் கர்நாடக முதலமைச்சர் பி.எஸ்.எடியூரப்பா போன்ற பிராந்தியத் தலைவர்கள் இந்தக் கூட்டத்தை பகிஷ்கரித்தார்கள். கட்சிக்குள் நடப்பவை குறித்து அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் போல் தெரிகிறது.

## 42 வருடங்களாக மாதச்சம்பளம் 15 ரூபா



அரசாங்க அதிகாரிகளின் அக்கிரமத்துக்கு ஒரு பிரகாசமான உதாரணம் இவ்விரு பெண் மணிகளினதும் கதை.

அக்கு, லீலா என்ற பெயர்களைக்கொண்ட இந்த தலித் பெண் மணிகள் தென்னிந்திய கர்நாடக மாநிலத்தின் உடுப்பியில் அரசாங்க ஆசிரியைகள் பயிற்சி நிறுவனத்தில் சுத்திகரிப்பு ஊழியர்களாக 42 வருடங்களாக மாதாந்தம் வெறுமனே 15 ரூபா சம்பளத்துக்கு வேலை செய்திருக்கிறார்கள். இவர்களது சேவைகள் ஒழுங்கமைக்கப்படுமென்று உறுதியளிக்கப் பட்டபோதிலும்கூட 42 வருடங்களாகியும் எதுவித பயனையும் இவர்களால் பெறமுடியவில்லை.


அதனால் கர்நாடக நிருவாக விசாரணை மன்றத்தை நாடி நிவாரணம் பெற அக்குவும் லீலாவும் 2001 இல் முயன்றனர். இதையடுத்து கல்வி இலாகா ஏற்கனவே வழங்கிவந்த அற்பமான 15 ரூபா சம்பளத்தையும் கூட நிறுத்திவிட்டது.

உடுப்பியை மையமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவர் ரவீந்திரநாத் இந்த இரு பெண்மணிகளின் விவகாரத்தை உச்ச நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றார். அக்குவுக்கும் லீலாவுக்கும் சார்பாக உச்ச நீதிமன்றமும் கர்நாடக மேல் நீதிமன்றமும் கர்நாடக நிருவாக விசாரணை மன்றமும் தீர்ப்புக் கூறிய பிறகும் கூட அவர்களின் சேவைகள் ஒழுங்கமைக்கப்படவில்லை. நீதிமன்றங்களின் தீர்ப்பை மாநில அரசாங்கம் இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், அதேவேளை எந்தவொரு வேதனமும் இல்லாமலேயே ஆசிரியைகள் பயிற்சி நிறுவனத்தில் உள்ள 21 மலசலகூடங்களையும் தொடர்ந்து துப்புரவு செய்துகொண்டேயிருக்கிறார்கள்.

# பல்கலைக்கழக ஆசிரியர்களின் பொதுக்கல்வியின் எதிர்காலமும் -

> இந்த போராட்டத்திற்குப் பொது மக்களினதும் தொழிற்சங்கங்களினதும் ஆதரவு பெருகி வருவதால் அது பரந்த அளவிலான வெகுஜன இயக்கமாக மாறுவதற்குரிய ஆற்றலை கொண்டிருக்கிறது

அறிவுத் தொழிலாளர்களை அரசாங்கம் நசுக்குவதை அவமதிக்கும் எந்தவொரு தேசமும் தொடர்ந்து மாளாது வாழமுடியாது. இலங்கையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் முன்னெடுத்துவரும் வேலை நிறுத்தப்போராட்டம் இனிமேலும் கூட கல்விமான்களின் சம்பளத்தைப்பற்றிய பிரச்சினையில்லை. அது எப்போதோ சம்பளப் பிரச்சினைக்கு அப்பாலானதாக உருமாறிவிட்டது. அத்து





டன் நாட்டின் சிறுவர்களுக்கான கல்வி வசதிகளைப் பெருக்கிக் கொள்வதைப் பற்றிய பிரச்சினையாகவும் அது இல்லை. அந்த எல்லைக் கோட்டையும் அது கடந்து சென்றுவிட்டது. பிழைத்து எஞ்சி நிற்கும் ஜனநாயகத்தின் இரு இறுதிக் காவல் அரண்களான-நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கு கல்விமான்களுக்கு இருக்கும் உரிமை ஆகியவை தொடர்ந்தும் நிலைத்திருக்க முடியுமா அல்லது அழிந்து போவதா என்பதே தற்போது எழுந்துள்ள முக்கியமான கேள்வியாகும்.

நிகர தேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தைக் கல்வித்துறைக்கென ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையுடன் நீங்கள் இணங்கிக் கொள்கிறீர்களா, இல்லையா என்பதைப் பற்றிய விவகாரமாகவும் தற்போதைய நெருக்கடி இல்லை. அது பேராபத்துடைய விலங்குகளைப் பற்றியதாகும். கொயபெல்ஸின் ஒத்தாசையுடன் நாஜி மாணவர் அமைப்புகளினால் பரப்பப்பட்ட விசர்த்தனம் 1933 மே 10 ஆம் திகதி ஒரு உச்சக்கட்டத்தை



# போராட்டமும்

குமார் டேவிட்



எட்டியபோது ஜேர்மனியின் மகத்தான நூலகங்களில் இருந்து முற்போக்கான, சோசலிசவாத மற்றும் சமாதானம் விரும்பும் கொள்கைகளைப் போதிக்கும் நூல்களும் வேற்றுக் கலாசாரங்களைச் சேர்ந்த குறிப்பாக யூத நூல்களும் அகற்றப்பட்டு தீயில் பொசுக்கப்பட்டன, அடுத்து கொண்டுவரப்பட்ட கலாசாரக் கட்டுப்பாடுகளும் தணிக்கைகளும் இறுதியில் அப்பட்டமான சர்வாதிகாரத்துக்கே வழிவகுத்தன. அதேபாதையில் நாமும் அரைவாசித் தூரத்துக்கு வந்துவிட்டோம்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் வேலை நிறுத்தப் போராட்டம் ஒடுக்கப்படுமேயானால், அது 1980 ஜுலையில் தொழிலாளர் வர்க்கத்தின் மீதும் சுதந்திரமான அரசியல் செயற்பாடுகள் மீதும் தொடுத்த நாசகாரத்தனமான தாக்குதலை ஒத்ததாக இருக்கும். மிகைப்படுத்திக் கூற நான் விரும்பவில்லை. ஆனால், பின்னோக்கிப் பார்ப்பதன் மூலம் மாத்திரமே உறுதியான, சரித்திரரீதியான மதிப்பீடுகளைச் செய்யக் கூடியதாக இருக்கும். நிறைவேற்று அதிகாரத்தின் ஏதேச்சாதிகார பேராபத்தைத் தூக்கியெறிவதற்கு நாடு தயாராவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கக் கூடிய சில வாய்ப்புகளில் ஒன்றாக இது மாறக்கூடிய சாத்தியம் இருக்கிறது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் வேலை நிறுத்தப் போராட்டம் இனிமேலும் கூட அந்தச் சம்மேளனத்தைப் பற்றியதல்ல, அது என்னைப் பற்றியதும் உங்களைப் பற்றியதும். பொதுவாழ்வின் முழுக் கட்டுப்பாட்டையும் தன் கையில் எடுத்துக் கொள்வதில் ஒரே குறியாக இருக்கும் அரச வாகனம் உறுமிக் கொண்டுவருவதற்கு ஒருமுடிவைக் கட்டுவதற்கு நாம் என்ன செய்கிறோம்என்பதைப்பற்றியதுமாகும். ஒட்டுமொத்த சர்வாதிபத்திய ஆட்சிமுறை ஏதேச்சாதிகார அரசின் இயற்கையான உச்சநிலையாகும்.




கிழக்கு மாகாணத்தில் தனது கட்டுப்பாட்டுக்கு வெளியே முஸ்லிம் - தமிழ் அதிகாரமையம் ஒன்று தோன்றுவதைக் குழப்பியடிப்பதற்கு இந்த ஏதேச்சாதிகார ஆட்சிமுறை தன்னாலான சகலதையும் செய்திருக்கிறது. பல தசாப்தங்களாகச் செய்துவந்ததைப் போன்றே முஸ்லிம் தலைவர்கள் மீண்டும் தங்கள் சமூகத்துக்கு துரோகம் செய்திருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. சர்வதேச நெருக்குதல் நிர்ப்பந்திக்கும் வரை வடமாகாணத்தில் மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற மாகாணசபை ஒன்று தோன்றுவதை இது அனுமதிக்கப்போவதில்லை. அத்துடன் நீதித்துறையின் வாயை அடக்கி வைத்திருக்கும் பொலிஸுக்கும் கடிவாளம் போடும்.

பிரதம நீதியரசரை அகற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக வதந்திகள் அடிபட்டன. நீதிச்சேவை ஆணைக் குழுவில் முன்னென்றுமில்லாத வகையில் தலையீடுகள் செய்யப்படுகின்றன.


இவையெல்லாம் வரும் நாட்களில் நிகழப்போகின்றவற்றுக்கு கட்டியம் கூறி நிற்கின்றன. சண்டேலீடர் பத்திரிகையின் பக்கங்களில் நாட்டின் முதற் குடும்பத்தை விமர்சித்து எதுவும் எழுதப்படக்கூடாது என்ற அறிவுறுத்தலுடன் பிரட்ரிக்கா ஜான்ஸ் பிரதம ஆசிரியர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறார். இப்பத்திரிகை நிறுவனத்தைக்கொள்வனவுசெய்வதற்கு நிறைவேற்று அதிகாரபீடம் நிதியை ஏற்பாடு செய்ததாகக் கூறப்படுகின்றமை தங்கள் விருப்பப்படி ஆட்சி செய்ய விரும்புகிறவர்கள் மாற்றுக்கருத்துக்களையோ கருத்து வேறுபாடுகளையோ பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதற்கு இன்னுமொரு சான்றாகும்.

சுருக்கமாகச் சொல்வதானால், ராஜபக்ஷ ஆட்சி எதிர்ப்புணர்வுகளையோ வேறு செல்வாக்கு மையங்களையோ நொருக்குவதிலேயே நாட்டம் காட்டும். இது சர்வாதிகாரிகளின் இயல்பானசுபாவமாகும். ஏனென்றால், எதிர்க்கருத்துகளுடனும் பல்வகைமையுடனும் உருண்டு புரளுவதே ஜனநாயகத்தின் இயல்பாக இருக்கிறதென்றால், அதற்கு எதிர்மாறா சூழ்நிலையே ஏதேச்சாதிகாரத்தின் பிழைப்புக்குஅவசியமானநிபந்தனையாகிறது. ஒன்றை அகற்றினால்க்கூட, முழு கடதாசிக் கூட்டமும் ஒன்றுமேல் ஒன்றாக சரிந்துவிழுந்துவிடும்.

## கல்வியின் கழுத்து நெரிக்கப்படுகிறது

தேசிய வருமானத்தில் அதாவது நாட்டின் நிகர உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்வித்துறைக்கென ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று பல்கலைக்கழகஆசிரியர்சங்கங்களின்சம்மேளனத்தின் கோரிக்கைக்கு பொதுமக்களின் ஆதரவு இல்லையென்றால் அது எப்போதோ மறைந்துபோயிருக்கும். இப்போது அக்கோரிக்கையை சமுதாயம் அதன் கையிலெடுத்திருக்கிறது. அதனால், இனிமேலும் அதை பல்கலைக்கழகஆசிரியர்சங்கங்களின்சம்மேளனத்தின் கோரிக்கையென்று அழைத்தலாகாது. மக்களின் கோரிக்கையென்று, மக்களில் பல தரப்பினரதும் கோரிக்கையென்று அழைக்க வேண்டும்.

இக்கோரிக்கையை பேரம் பேசலுக்கான நிலைப்பாடாக மக்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு, பேரம் பேசலின் போது விட்டுக்கொடுப்புகளைச் செய்வது பற்றி யோசிக்கலாம் என்று பேசப்படுவதாக நான் கேள்விப்பட்டேன். அடுத்த கட்டத்தில் பேச்சுவார்த்தைகள் தவிர்க்க முடியாதவை. அத்தகைய பேச்சுவார்த்தைகளின் போது எவரினதும் கைகளையும் கட்டிப் போடுவதற்கு முயற்சிக்காமல், ஒரு விடயத்தைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். 6 சதவீத கோரிக்கை பேரம் பேசலுக்கான துருப்புச்சீட்டு அல்ல. அது மிகவும் வலுவானதும் கருத்தூன்றியதுமான யோசனையாகும்.





நிகர உள்நாட்டு உற்பத்தியில் இலங்கை அரசின் கல்விக்கான செலவீனம் சதவீதத்தில்
(2010 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வருடாந்த அறிக்கையிலிருந்து) படம் 01




நிகர உள்நாட்டு உற்பத்தியில் இலங்கை அரசு பல்கலைக்கழகங்களுக்கு செலவிடும் தொகை சதவீதத்தில்
(2010 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வருடாந்த அறிக்கையிலிருந்து) படம் 02

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் சார்பில் செப்டெம்பர் 19 ஆம் திகதி பேராசிரியை திலீபா விதாரண அனுபவரீதியான சான்றுகளுடன் வெளியிட்ட அறிக்கையொன்றில் சுமார் 60 நாடுகள் தேசிய வருமானத்தில் 5 சதவீதத்தை அல்லது கூடுதலான சதவீதத்தை கல்விக்கென்று ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்திருக்கிறார். இந்த நாடுகள் அபிவிருத்தியைப் பொறுத்தவரை குறிப்பிட்டதொரு கட்டத்தில் இருப்பவை என்றோ அல்லது குறிப்பிட்ட பிராந்தியமொன்றைச் சேர்ந்தவை என்றோ வகைப்படுத்தப்படவில்லை. அவற்றில் உயர்ந்த, நடுத்தர, குறைந்த, மிகவும் குறைந்த வருமானத்தைக் கொண்ட நாடுகள் அடங்குகின்றன. பல கண்டங்களைச் சேர்ந்தவையாகவும் அவை காணப்படுகின்றன. சகல அபிவிருத்திக்கு முக்கியமானது மனித அபிவிருத்தி என்பது பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மனித அபிவிருத்தியென்பது கூடுதலான அளவுக்கு விழிப்புணர்வும் கற்பனைத் திறனும் பண்புகளும் கொண்ட மனிதர்களை பேணிவளர்ப்பதையும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய ஆற்றல்களை இளையவர்களுக்கு பயிற்றுவிக்கும் மனிதவள அபிவிருத்தியையும் உள்ளடக்கியதாகும் என்று ஒரு விளக்கப்பாடு இருக்கிறது. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை, அரசும் ஒரு கணிசமான ளவுக்கு சமுதாயத்தின் பிரிவுகளும் இவ்விரு இலக்குகளையும் மறந்து விட்டன.

பிரச்சினைகள் சகல பக்கங்களிலும் தலைகாட்டுகின்றன. கிராமப்பாடசாலைகள் வளங்கள் இல்லாமற் கிடக்கின்றன. மாணவர்கள் பெரிதாகப்படிப்பதில்லை. வெறுமனே காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்க





மூலம்: இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2010. கல்வி புள்ளிவிபரவியல் மற்றும் உலக அபிவிருத்தி குறிகாட்டிகள் (உலக வங்கி)

தேசிய வருமானத்தில் கல்வித்துறையில் செய்யப்படும் பொது முதலீடு தொகை சதவீதத்தில்
(2010 அல்லது அண்மைய காலம்) படம் 03

ளில் விசர்த்தனமாக நடந்துகொள்கிறார்கள். கிராமப்புறப் பாடசாலைகள் பொறியியல் மற்றும் மருத்துவத்துறைகளைக் கற்பதற்கு மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு அனுப்புவதற்கு தயார் செய்வதில்லை. தேசிய ரீதியில் வெறுமனே 10 சதவீதமான பாடசாலைகள் (அநேகமாகசகலதும்நகர்ப்புறங்களைச் சேர்ந்தவை) தான் அவ்வாறு பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தயார் செய்கின்றன. பாடசாலை ஆசிரியர்கள் தங்களது சமூகத்தில் மதிப்பை இழந்து விட்டார்கள். ரியூசன் வகுப்புகளிலேயே உண்மையான கல்வி இடம்பெறுகிறது. அந்த ரியூசன் வகுப்புகளுக்கு தங்களைத் தயார் செய்வதற்காக பகல் வேளைகளில் பாடசாலைகளின் வகுப்பறைகளில் மாணவர்கள்நேரத்தைக்கடத்துகிறார்கள் என்று தான் கூறவேண்டியிருக்கிறது. கிராமப் பாடசாலைகளில் ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்ற இலட்சணத்தைப்பற்றி கொஞ்சமாகச் சொல்வது நல்லது. ஏனென்றால் சொல்வதற்கு ஒன்றுமில்லை, அது ஒரு பரிதாபகரமான வெற்றிடமாகும். உயர் வர்க்கத்தவர்களின் பாடசாலைகள் என்று அழைக்கப்படுகின்றவற்றில் இருந்து வெளியேறுகின்ற இளைஞர்கள் மத்தியில் காணப்படும் ஆங்கிலத் தகுதியும் கூட மட்டமானதாகவே இருக்கிறது.


பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்ட வரைபடங்களும் அட்டவணைகளும் பல விடயங்களைத் தெளிவுபடுத்துகின்றன. 1980 தொடக்கம் 2010வரை நிகர உள்நாட்டு உற்பத்தியில் எத்தனை சதவீதத்தை கல்வித்துறைக் கென அரசாங்கம் செலவு செய்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தின்போது கூட செலவினம் 2.8 சதவீதத்துக்கும் கூடுதலானதாக இருந்தது. ஆனால், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியின் போதே செலவீனம் செங்குத்தான வீழ்ச்சி கண்டது. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிறகு மேலும் அது கீழ் நோக்கியே சென்று கொண்டிருந்தது. இந்த அரசாங்கம் மக்கள் நேச ஆட்சியாக இருப்பதற்குப் பதிலாக, மக்களின் நல்வாழ்வுக்கு விரோதமானதாக இருந்துவருகிறது.




ராஜபக்ஷ ஆட்சியின் போது பல்கலைக்கழகங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதை இரண்டாவது படம் பிரத்தியேகமாக காண்பிக்கிறது. இந்த அரசாங்கம் பல்கலைக்கழகங்களை மிகவும் மோசமான நிலைக்குட்படுத்தியது. கல்வித்துறைக்கென ஒட்டுமொத்தமாக இப்போது கஞ்சத்தனமாகச் செலவிடப்படுகின்ற 8 சதவீதத்தில் வெறுமனே 1.2 சதவீதமே பல்கலைக்கழகங்களைச் சென்றடைகிறது என்பதை வரைபடம் காண்பிக்கிறது. பல்கலைக்கழகக் கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கும் அரசாங்கம்இப்போதுதயாராயிருக்கிறது. அறிவு ஜீவிகள் மற்றும் மாணவர் சமூகத்தை கிளர்ச்சி செய்வதற்கு அரசாங்கம் தூண்டுகிறது. அது இன்னொரு சந்ததி விஜேவீராக்களையும் பிரபாகரன்களையும் வளர்க்க முயற்சிக்கின்றதா?

### சர்வதேச, பிராந்திய ஒப்பீடுகள்

வருமானமட்டத்தை அடிப்படையாகக் கொண்டு படிநிலையாக வகைப்படுத்தப்பட்ட ஒரு தொகுதி நாடுகளுடன் இலங்கையின் கல்விக்கான செலவினத்தை ஒப்பீடு செய்யும் தரவுகள் பலவிடயங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வருகின்றன. மூன்றாவது, நான்காவது படங்களிலும் அட்டவணையிலும் உள்ள தரவுகள் இலங்கை (2009 தரவு) நிகர தேசியஉற்பத்தியில் 2.06 சதவீதத்தையே கல்விக்காக ஒதுக்கீடுசெய்ததைக் காண்பிக்கின்றன. படத்தில் குறித்துக்காட்டப்பட்ட எந்தவொரு நாட்டையும் விட இலங்கையின் ஒதுக்கீடு மிகவும் குறைந்ததாகவே இருக்கிறது. அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கென இலங்கை ஒதுக்கீடு செய்யும் 8.08 சதவீதமும் மீண்டும் குறைந்த மட்டத்திலானதாகவே இருக்கிறது. 2011 அளவில் முதலாவது இலக்கம் நிகர தேசிய உற்பத்தியில் 1.9 சதவீதத்துக்கு வீழ்ச்சி




மூலம்: இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2010. கல்வி புள்ளிவிபரவியல் மற்றும் உலக அபிவிருத்தி குறிகாட்டிகள் (உலக வங்கி)

அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டத்தில் கல்வித்துறையில் செய்யப்படும் முதலீடு தொகை சதவீதத்தில் (2010 அல்லது அண்மைய காலம்) படம் 04

| Income Level | % of GDP | % of Govt. Expenditure |
|---|---|---|
| High income | 5.26 | 11.60 |
| High income: OECD | 5.67 | 11.53 |
| High income: Non-OECD | 3.14 | 17.40 |
| Upper middle income | 5.29 | 16.20 |
| Middle income | 4.39 | 15.53 |
| Lower middle income | 4.03 | n.a |
| Low & middle income | 4.02 | 17.40 |
| Low income | 3.78 | 18.08 |
| Least developed countries | 3.81 | 16.43 |
| Heavily indebted poor countries (HIPC) | 3.82 | 18.15 |
| OECD members | 5.52 | 11.53 |
| Sri Lanka | 2.06 | 8.08 |

கண்டிருக்கிறது. 2012 இல் இதை விடவும் கீழ்மட்டத்துக்குப் போகவும் கூடும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையைப் பொறுத்தவரை, அதி குறைந்தவருமானமுடைய நாடுகளுக்கும் நடுத்தர வருமானமுடைய நாடுகளுக்கும் இடைப்பட்ட நாடுகளின் வரிசையிலேயே அடங்குகிறது. அத்தகைய ஏனைய நாடுகளில் கல்விக்கான சராசரி செலவினம் 4சதவீதமாக இருக்கிறது. ஆனால், இலங்கையின் நிலை என்ன? எனவே மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்ததிலிருந்து கல்விக்கான செலவினம் தொடர்பில் வரவு-செலவுத் திட்டங்களில் செய்யப்பட்டு வந்திருக்கும் குறைப்பின் விளைவான தொடர்ச்சியான பாதிப்பைச் சீர்செய்வதற்கு கல்விக்கு நிகரதேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தை குறைந்தது ஐந்துவருடங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். பின்னர் படிப்படியாக அந்த ஒதுக்கீட்டை 4.5 சதவீதமாக்குவதற்கேதுவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

தெற்காசியாவைப் பொறுத்தவரை இலங்கையைவிட ஏனைய நாடுகள் கல்விக்கு அவற்றின் நிகரதேசிய உற்பத்தியில் கூடுதல் சதவீதத்தை ஒதுக்கீடு செய்கின்றன. பங்களாதேஷ் - 2.23 சதவீதம், பூட்டான் - 4.63 சதவீதம், இந்தியா - 3.09சதவீதம், மாலைதீவு - 8.71 சதவீதம், நேபாளம் - 4.66சதவீதம், பாகிஸ்தான் 2.69 சதவீதம், இலங்கை - 1.9 சதவீதம் அரசாங்க செலவீனத்திலும் இந்த நாடுகள் இலங்கையைவிட கூடுதலான சதவீதத்தை கல்விக்கென்று ஒதுக்குகின்றன. நேபாளம் - 19 சதவீதம், இந்தியா - 11சதவீதம். இலங்கை வெறுமனே8சதவீதத்துடன்பின்தங்கிநிற்கிறது.

பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்ற அற்பமான தொகையில் குறைப்பைச் செய்து பல்லைக்கழகங்களுக்கென ஒதுக்கப்படும் நிதியில் அதிகரிப்பைச் செய்யலாம் என்று சரியாகச் சிந்திக்கக் கூடிய எவரும் யோசனை கூறமாட்டார். அரசாங்க பல்கலைக்கழக முறைக்கு முழுக்குப் போடுவதற்கு ராஜபக்ஷ - எஸ்.பி.திசாநாயக்க-சர்வதேச நாணய நிதிய கூட்டு எவ்வளவு காலமாக திட்டம் தீட்டிக் கொண்டுவந்தது என்று எனக்குத் தெரியவில்லை. அரசாங்க பல்கலைக்கழகமுறையைவறுமைப்பட்ட வர்க்கத்தவர்களுக்கான ஒரு மூன்றாந்தர நிறுவனமாக்கிவிட்டு உயர்கல்விக்கு நிதி அறவிடும் நிறுவனங்களுக்கானறோயல் பாதையைத் திறந்துவிடுவதற்கே இக் கூட்டுச் சதி செய்து கொண்டுவந்தது. ராஜபக்ஷவின் முதலாவது பதவிக்காலத்தின் ஆரம்ப வருடங்களிலேயே இச்சதி கருக்கட்ட ஆரம்பித்திருக்கிறது என்பதை உணர்த்துபவையாக வரை படங்கள் அமைந்திருக்கின்றன.

## சீர்திருத்தம் கல்வியுடன் நிற்கப்போவதில்லை

கூடுதலான அளவுக்கு அர்த்த புஷ்டியான விளைவுகளைக் கொண்டுவரக் கூடியதாக கல்விக்கான செலவினத்தை அதிகரித்து, கல்விச் செயற்பாடுகளில் சீர்திருத்தங்களைச் செய்வதென்பது கல்வியுடன் மாத்திரம் நின்றுவிட முடியாது; நின்றுவிடவும் போவதில்லை. நிதிப்பாய்ச்சல் பிறகு பொதுச் சுகாதாரம், போக்குவரத்து, சக்தி மற்றும் ஊடகம் ஆகிய துறைகளுக்கும் திசைதிரும்பும், பிறகு விவகாரம் வெறுமனே வரவு-செலவுத் திட்டத்தின் 20சதவீதத்தைப் பற்றியதாக இருக்காது, முழு 100 வீதத்தையும் பயன்படுத்துகிற முறையைப் பற்றியதாக மாற்றமடையும். 2012 வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின்படி ஐந்து அமைச்சுகள் மிகவும் கூடுதலான நிதியைப் பெறுகின்றன. அவையாவன; நிதி, திட்டமிடல் (47சதவீதம்), பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அதிகார சபை (10.5 சதவீதம்), துறைமுகங்கள், பெருந் தெருக்கள் (6.6 சதவீதம்), பொது நிருவாகம் (6.3 சதவீதம்), உள்ளூராட்சி, மாகாணசபைகள் (5.9சதவீதம்).

நிதியமைச்சு விழுங்குகிற 47சதவீதத்தில் சுமார் 40சதவீதம் கடன் மீள் செலுத்துகைக்கே போகிறது. நாளுக்குநாள் ஆழமாகிக்கொண்டிருக்கும் கடன் பிரச்சினையால் அரசாங்கம் படுமோசமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது. அரசின் வீண் விரையங்கள் மேலும் பிரச்சினைகளை சிக்கலாக்குகின்றன. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, சக்தி, வலு போன்ற பொது நன்மைக்கான துறைகளை மேம்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் விரும்பாமல் இருப்பது மாத்திரமல்ல, தோன்றுகின்ற எதிர்ப்புகளை நசுக்குவதற்கும் தயாராகியிருக்கிறது. அதுவே சர்வாதிகாரிகளுக்கு தெரிந்த ஒரே மொழியாகும். அரசாங்கம் பெரிய திரிசங்கு நிலையில் இருக்கிறது. பொதுக் கல்விக்கு கூடுதல் நிதியை ஒதுக்கவேண்டுமென்றமக்களின் கோரிக்கையின் முன்னால் திணறும் அரசாங்கம் அக்கோரிக்கையை நிறைவேற்றுவதானால், அதன் முழு நவதாராளவாத பொருளாதார நிகழ்ச்சி நிரலை தகர்க்காமல் எதையும் செய்ய முடியாது. இதன் காரணத்தினால் தான் கல்விக்கும் நலன்புரி திட்டங்களுக்குமான செலவினங்களை அதிகரிப்பதில்லை என்று அரசாங்கம் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறது. இது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களிற்கும் ஒரு திரிசங்கு நிலை தான்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் போராட்டத்திற்கு பொது மக்களினதும் தொழிற்சங்கங்களினதும் ஆதரவு பெருகி வருவதால், அந்தப் போராட்டம் பரந்தளவிலான வெகுஜன இயக்கமாக மாறுவதற்குரிய வாய்ப்பு வளத்தையும் உள்ளார்ந்த ஆற்றலையும் கொண்டிருக்கிறது. அடுத்த இரண்டு, மூன்று வாரங்களில் நிகழ்வுப்போக்குகள் எத்தகைய மாறுதல்களுக்குள்ளாகும் என்பதை எதிர்வுகூறுவது கஷ்டமானதாகும். எமக்கு ஜனநாயக உரிமைகள் வேண்டுமானால், நாமே அதற்கு துணிச்சலைக்காட்டிப் போராட வேண்டும். இது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்திற்கு கொந்தராத்துக் கொடுக்கக்கூடிய ஒரு விவகாரம் அல்ல, சர்வாதிகாரிகளைஅப்புறப்படுத்துவதென்பது பெருங்கடு முயற்சியாகும். இந்த இலக்கு பற்றி தேசிய ரீதியில் பொதுமக்களின் அபிப்பிராயம் இப்போது அக்கறையுடன் கிளம்ப ஆரம்பித்திருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.






சிந்தாமணி மகாபத்ரா

# இந்திய வெளியுறவுக்கொள்கையில் மாநிலங்களின் செல்வாக்கு

## மத்திய அரசின் பிரத்தியேக செயற்களமாக வெளியுறவுக் கொள்கையும் இராஜதந்திரமும் இனிமேலும் விளங்கக்கூடிய சூழ்நிலை இல்லை

காலப்போக்கில் இந்தியாவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மாநில அரசுகள் கூடுதலான அளவுக்கு சுறுசுறுப்பான பாத்திரத்தை வகிக்கக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. உலகமயமாக்கல் யுகத்திலும் இந்தியா வின் சிக்கல்கள் மிகுந்த கூட்டரசாங்க அரசியல் சூழ்நிலையிலும் வெளியுறவுக் கொள்கையை வகுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் மத்திய அரசாங்கத்தின் பாத்திரம் விரைவாக மாறிக்கொண்டு வருகிறது. இந்திய அரசாங் கத்தின் பிரத்தியேக செயற்களமாக வெளியுறவுக் கொள்கையும் இராஜதந்திரமும் விளங்கிய நாட்கள் அநேகமாகப் போய்விட்டன என்றுதான் கூற வேண்டும்.

அண்மைக்காலமாக வெளி நாடுகள் இந்தியாவின் பல்வேறு மாநில அரசுகள் மீது அவற்றின் கவனத்தைத் திசை திருப்பத்தொடங்கியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. சில மாநில மட்டத் தலைவர்கள் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் நேரடியாக ஊடாட்டங்களைச் செய்வதில் அக்கறையை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்போலத் தோன்றுகிறது. வெளிநாட்டுக் கொள்கையை வகுக்கும்போது தங்களது கருத்துக்களையும் கருத்திலெடுக்குமாறும் தங்களது நலன்களைப் பாதுகாக்கக்கூடிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் சில மாநிலங்கள் மத்திய அரசாங்கத்துக்குநெருக்குதல்களைக்கொடுக்கும் போக்கு அதிகரித்துக்கொண்டு வருகிறது. இடம்பெற்றிருக்கக்கூடிய பல நிகழ்வுப் போக்குகள் இதுவிடயத்தில் கவனத்தை ஈர்ப்பனவாக அமைந்திருக்கின்றன.

முதல் உதாரணமாக, பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது 2000 மார்ச்சில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போதான நிகழ்வுகளை எடுத்துக் கொள்ளலாம். இந்தியாவில் பல்வேறு இடங்களுக்கான அவரின் பயணத்திட்டத்தில் ஹைதராபாத்தும் உள்ளடங்கியிருந்தது. அப்போது ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராக இருந்த சந்திரபாபுநாயுடு தனது மாநிலத்தின்தலைநகரை வளர்ந்துவரும் ஒரு உயர்தொழில்நுட்ப நகரத்துக்கான காட்சியமாக காண்பிப்பதில் மிகுந்த அக்கறைகொண்டு செயற்பட்டார்.

புஷ் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் பிரபலமான அமெரிக்க இராஜதந்திரியான ஹென்றி கீஸிங்கர் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சிவிலியன் அணு ஒத்துழைப்பு உடன்படிக்கையின் விளைவாக













ஏற்படக்கூடிய பயன்கள் குறித்து மேற்கு வங்காள முதலமைச்சராக அப்போது பதவிவகித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான புத்தாதெப் பட்டாச் சாரியாவுக்குநம்பிக்கையைஏற்படுத்துவ தற்காககொல்கத்தாவில்வந்திறங்கினார். 2010 நவம்பரில் மேற்கொண்ட விஜ யத்தின் போது பராக் ஒபாமா இந்திய மத்திய அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக டில்லிக்கு வருவதற்கு முன்னதாக இந்தியாவின் வர்த்தகத் தலைநகர் என்று வர்ணிக்கப்படுகின்ற மும்பையில்தான் முதலில் வந்திறங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தனது இராஜதந்திர நடவடிக்கைகளின் அங்கமாக மும்பை, சென்னை, கொல்கத்தா ஆகிய நகரங் களுக்குவிஜயம்செய்தார். சென்னையில் அவர் ஆசிய -பசுபிக் பிராந்தியம் தொடர் பிலான அமெரிக்காவின் கொள்கை தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த அறி விப்பைச் செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது. சில்லறை வியாபாரத்துறை யில் வெளிநாட்டு முதலீடுகளைச் செய் யும் யோசனைக்கு மேற்குவங்காள முதலமைச்சர்மமதாபானர்ஜிகாட்டிவரும் எதிர்ப்பைத் தணிவிப்பதற்காக அவருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் நோக் குடன் ஹிலாரி கிளின்டன் கொல்கத்தா வுக்கு விஜயம் மேற்கொண்டதாகக் கூறப் பட்டது.

இரண்டாவதாக, சீனா, ஜப்பான் போன்றநாடுகள்தங்களதுபொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் சில மாநில அரசுகளுடன் தொடர்புகளை வளர்த்துக்கொள்வதில் கணிசமான அக்கறை காட்டிவந்திருக் கின்றன. சீனா 2011 இலும் 2012இலும் குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு செங்கம்பள வரவேற்பு

**இந்திய மாநிலங்களின் தலைவர்களுக்கும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும் இடையேயான ஊடாட்டம் இந்திய வெளியுறவுக்கொள்கையிலும் இராஜதந்திரத்திலும் வெளிக்கிளம்ப ஆரம்பித்திருக்கின்ற புதிய பக்கம் ஒன்றுக்கான எடுத்துக்காட்டு**

அளித்துக் கௌரவித்தது. இருமாதங் களுக்கு முன்னர் ஜப்பானும் மோடிக்கு செங்கம்பள வரவேற்பு அளித்தது. அங்கு அவர் உயர்மட்டத் தலைவர்களையும் தொழிலதிபர்களையும் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்தினார். சமஷ்டிக் கட்டமைப்பைக்கொண்ட நாடொன்றின் மாநிலத்தலைவர் ஒருவர் ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து இத்தகைய அமோக வரவேற்பைப் பெற்றிருக்கின் றார் என்றால் அது நரேந்திர மோடி யாகத்தான் இருக்க முடியும். முன்னாள் கர்நாடக மாநில முதலமைச்சர் பி.எஸ். எடியூரப்பா, தற்போதைய மத்தியப் பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் ஆகியோரும் தங்களது மாநிலங்களின் பொருளாதார நலன் களை மேம்படுத்துவதற்காக வெளிநாடு களுக்குச் சென்று வந்திருக்கிறார்கள்.

இந்திய மாநிலங்களின் தலைவர்களு க்கும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும் இடையேயான ஊடாட்டம் இந்திய வெளி யுறவுக் கொள்கையிலும் இராஜதந் திரத்திலும் வெளிக்கிளம்ப ஆரம்பித்தி ருக்கின்ற புதிய பக்கமொன்றிற்கான எடுத்துக்காட்டாகவிளங்குகிறது எனலாம். இந்தியாவின் மாநிலங்கள் சிலவற்றில் காணக்கூடியதாக இருக்கும் மனித உரி மைகள் மற்றும் மதச்சுதந்திரம் தொடர்பி லான நிலைவரங்கள் குறித்து அமெரிக்க அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருக் கக்கூடிய அறிக்கைகளுக்கு இந்திய அர சாங்கம் எந்தவிதமான கண்டனக் குறிப்பையும் தெரிவிக்கவில்லை. ஏன் அதன் அக்கறைக்குரிய கவனத்தையும் கூட ஈர்க்கவில்லை. நரேந்திரமோடிக்கு விசா வழங்குவதற்கு மறுத்த அமெ ரிக்காவின் செயல் குறித்து இந்திய அர சாங்கம் கருத்தூன்றிக் கவனம் செலுத்த வில்லை. ஆனால், சீனாவுடனும் ஜப்பா னுடனும் நெருக்கமான உறவுகளை வளர்த்துக்கொள்வதன் மூலமாக சர்வ தேச ரீதியில் தன்னைப்பற்றிய எண்ணப் பதிவை மேம்படுத்துவதற்குத் தானாகவே நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார்.

**உள்நோக்கமுடைய மௌனம்**

மோடியின் விசாவிண்ணப்பத்தை நிராகரித்த அமெரிக்காவின் செயலுக்கும் அவருக்கு செங்கம்பளவரவேற்பு அளித்த சீனாவினதும் ஜப்பானினதும் செயலுக் கும் இடையே தொடர்பேதும் இருக்கிறதா என்பது விவாதத்துக்குரிய விடயமாகும். ஆனால், சீனாவுக்கும் ஜப்பானுக்கும் மோடி மேற்கொண்ட விஜயங்களுக்கு வெறுமனே பொருளாதார விவகாரங்க எல்ல, வேறு காரணிகளும் இருக்கின்றன என்று பொதுவில் ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. ஆனால், இந்திய மத்திய அரசாங்கம் உள்நோக்கத்துடனான ஒரு மௌனத்தைச் சாதிக்கிறது.

காலப்போக்கில் வெளியுறவு விவ காரங்கள்மற்றும்பாதுகாப்புடன்தொடர்பு டைய விவகாரங்களில் இந்திய மாநிலங் கள் கூடுதலான அளவுக்கு சுறுசுறுப்பான பாத்திரத்தை வகிக்கக்கூடிய சாத்தியங் கள் இருக்கின்றன. அதற்கான அறிகுறி கள் தாராளமாகத் தெரிகின்றன. உதார

ணத்துக்கு சென்னையில் இலங்கை விமானப்படை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டமைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா காட்டிய எதிர்ப்பைக் கூற முடியும். சம்பந்தப்பட்ட அந்த இலங்கை அதிகாரிகள் உடனடியாகவே பெங்களூருக்கு மாற்றப்பட்டனர். இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான உறவுகளைப் பொறுத்தவரை, குறிப்பாக, டீஸ்டா ஆறு தொடர்பான தகராறில் மேற்குவங்காள மாநில முதலமைச்சர் செலுத்திய செல்வாக்கு நன்கு தெரிந்ததேயாகும்.

1991ஆம் ஆண்டிலிருந்து இந்தியப் பொருளாதாரக் கொள்கை தாராளமயமாக்கப்பட்டதிலிருந்து உலக மயமாக்கலின் துரித வேகமும் உலகளாவிய பொருளாதாரத்துடன் இந்திய பொருளாதாரம் ஒன்றிணைக்கப்படுகின்ற வேகத்தின் அதிகரிப்பும் தவிர்க்க முடியாத வகையில் நாட்டின் வெளியுறவுக் கொள்கையை உருவகப்படுத்துவதில் மேலும் கூடுதலான பாத்திரத்தை வகிப்பதற்கு பல்வேறு மாநிலங்களை அனுமதிப்பதாக வழி வகுக்கும். கூட்டணி அரசியல் இந்திய வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் செயன்முறைகளை மேலும் சிக்கலாக்கும்.

தமிழ் நாட்டின் உள் அரசியலும் மத்திய அரசாங்கத்துடனான அந்த மாநில அரசாங்கத்தின் சமன்பாடும் எதிர்காலத்தில் இந்தியாவின் இலங்கைக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தக்கூடும். கேரளாவைப் பொறுத்தவரை, அந்த மாநிலம் இந்தியாவின் கொள்கையை பாரசீக வளைகுடா பக்கவாட்டாக இழுத்துச் செல்வதும் சாத்தியம். மேற்குவங்காளமும் வடகிழக்கு இந்திய மாநிலங்களில் சிலவும் அவற்றின் அருகாயமைந்திருக்கும் நாடுகள் தொடர்பிலான இந்தியக் கொள்கையைத் தீர்மானிப்பதில் பாத்திரமொன்றைப் பெறுவதற்கு நாட்டம் காட்டக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

சீனா அல்லது பாகிஸ்தான் தொடர்பான இந்தியாவின் கொள்கையினால் ஜம்மு காஷ்மீர் நிச்சயமாகப் பாதிக்கப்படுகிறது என்றபோதிலும் அந்தக் கொள்கையில் அந்த மாநிலம் எந்தப்பாத்திரத்தையும் தற்போது வகிப்பதில்லை. சீனாவின் விசா கொள்கை தொடர்பில் அருணாச்சலப் பிரதேஷ் மாநில அரசாங்கம் எந்தக் கருத்தையும் தெரிவிப்பதில்லை. ஆனால், எதிர்காலத்தில் இந்த விவகாரங்களில் தீர்மானம் மேற்கொள்வதில் புதிய பாத்திரங்களாக இந்த மாநிலங்கள் மாறினால் ஆச்சரியப்படுத்துவதற்கொன்று மில்லை.

மறுவார்த்தைகளில் சொல்வதானால், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் செயன்முறைகள் வருங்காலத்தில் மிகவும் கூடுதலான அளவுக்கு தொந்தரவானவையாக, (மிகவும் கூடுதலான அளவுக்கு ஜனநாயக ரீதியானவையாக என்றும் கூறலாம்) ஆனால், அதேவேளை கூடுதலான அளவுக்கு சவால் மிக்கவையாக அமையும் என்பதையே அண்மைக்கால நிகழ்வுப் போக்குகள் உணர்த்துகின்றன. வெளிவிவகார அமைச்சு பொது இராஜ தந்திரப் பிரிவு (Public diplomacy) ஒன்றைக் கொண்டிருக்கிறது. வெளியுறவுக் கொள்கை விவகாரங்கள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை மேம்படுத்துவதற்கு அண்மைய வருடங்களில் இந்தப் பிரிவு மிகவும் ஊக்கமுடையதாக மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், இந்திய அரசியலின் இயல்பை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, மாநில மற்றும் தேசிய அரசியலின் இயக்க ஆற்றல் வருங்காலத்தில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளின் பணிகளை மேலும் கஷ்டமானதாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சிந்தாமணி மகாபத்ரா, புதுடில்லி
ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக
பேராசிரியர்

**டெக்கான் ஹெரால்ட்**



*(கடைசிப் பக்கத்தொடர்ச்சி)*

சிறிய பின்னடைவுகளுக்கும் காரணமாய் விட்டனர் என்ற விமர்சனத்துக்கு மட்டுமே ஆட்படுகின்றனர்; இவர்கள் தலைவர்கள் எனக்கொள்ளத்தக்க எந்தத் தகுதியும் அற்றவர்களாயே உள்ளனர். எங்கிருக்கிறோம் என்பதுபற்றிய புரிதல் இல்லாமல் மட்டுமல்ல, தலைமையும் சரியான அமைப்பும் இல்லாமலே எமது மக்கள் உள்ளனர். நாற்பது வருடங்களுக்கு முன்னர் பசுபதி என்ற கவிஞர் "அடிமைகளை அடிமைகளே அடிமைகொள்ளும் நாடு'' என்று எமக்கான இருப்பை உணர்த்தியிருந்தார். பேரினவாதத்தால் அடிமைப்படுத்தப்பட இடமளியோம் என்கிறவர்கள் தமக்குள் அடிமைப்படும் சாதிகள், பிரதேசங்கள், இனங்கள் இருக்கவேண்டும் என அவாவுகின்றனர். ஆதிக்கம் பெற்றுள்ள பேரினவாதமும் இறைமையை பிராந்திய மற்றும் உலக மேலாதிக்கத்திடம் தாரைவார்த்து அடிமைப்பட்டேயுள்ளது.


ஆக, எமது பிரச்சினை வெறும் சுற்று மதில்களுக்குள்ளேயோ பிராந்தியத்துக்குள்ளேயோ மட்டுப்பட்டதாய் இல்லை. எமது பிராந்திய மேலாதிக்கம் என்கிறவகையில் இந்தியா எம்மை அடிமைகொண்டிருப்பது வேறெதையும்விட வலிமையானது. பிரதானமாக தமிழகம் எம்மீது கொண்டிருக்கும் கருத்தியல் ஆக்கிரமிப்பு மலினப்பட்ட சினிமா-சஞ்சிகைகள் வாயிலாக மட்டுமானதாய் இல்லை; சுதந்திரம் தறிக்கெட்டுத் தலைமையும் அற்றுள்ள எமக்கு தலைமைதாங்க முன்வரும் "உலகத் தமிழ்த் தலைவர்கள்'' அங்கிருந்து கிளம்பும் அபாயமும் மேற்கிளம்பி வருகிறது. இதனைத் தொடர்ந்து அனுமதிப்பது மேலும் பன்மடங்கு நெடுக்கடிகளை எமக்கு வழங்குவதாய் அமையும். இவ்வகையில் நாம் அடிமைப்படுவது தமிழக கருத்தியல் ஆக்கிரமிப்பாளர்களால் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிவிட்டதோடும் தொடர்புடையது.

அந்தவகையில், எமக்கான விடுதலையின் முதல் தேவையாக பரந்துபட்ட பண்பாட்டு இயக்கத்தை முன்னெடுப்பது உடனடி அவசியமாகியுள்ளது. பல்வேறு அடிமைத்தனங்களைக் கொண்டுள்ள பாரம்பரியப் பண்பாட்டைப் பேணுவதற்கானதாக அது அமையக் கூடாது; உழைப்பவர் நலனோடு ஊடாட்டம் உடைய புதிய பண்பாட்டு இயக்கமாக அது அமைய வேண்டும். அதன் தொடர் வளர்ச்சி சரியான இலக்கை வகுத்து பொருத்தமிக்க மார்க்கத்தில் ஏற்ற வேலைத்திட்டத்தோடு சரியான மூல உபாயம்-தந்திரோபாயங்களோடு முன்னேறும் போது வலிமையான தலைமையைக் கட்டமைக்க இயலும். கூட்டுத் தலைமை மக்களிடமிருந்து மக்களுக்கு என்ற பாணியில் அத்தகைய புதிய பண்பாட்டு இயக்கத்தை முன்னெடுப்பதற்கு அமைவாக இன்று காலம் கனிந்துள்ளது.


கர்நாடக முதல்வர் ஷெட்டர்

தென்னிந்திய விவகாரம்

# காவிரிக்



இந்தியாவில் நதிநீர்ப் பிரச்சினைகள் இரு மாநிலங்களுக்குள் எப்போதுமே "வெட்டுக் குத்து" என்பது போல் காரசாரமாகவே நடந்து கொண்டிருக்கும். குறிப்பாக தென் மாநிலங்களில் தமிழகத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் "காவிரி நதிநீர் பிரச்சினை". கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் "முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை". மூன்றாவதாக ஆந்திர மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் "பாலாறு பிரச்சினை". இப்படி தமிழகத்திற்கு அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகம், ஆந்திர பிரதேசம் எல்லாமே நதி நீர் பிரச்சினையை மையமாக வைத்து அவ்வப்போது போர்க்குரல் எழுந்து கொண்டுதான் இருக்கும். இதில் அடிக்கடி பிரச்சினையாவது தமிழகத்திற்கும், கர்நாடகமாநிலத்திற்கும் இடையிலான "காவிரி நதி நீர் பிரச்சினை" தான்.

காவிரி நதியில் இரு மாநிலங்களுக்கும் தண்ணீர் பகிர்வுக்கு ஆதாரமாக அமைந்தது 1924-ஆம் ஆண்டு சென்னை ராஜதானிக்கும், மைசூர் அரசுக்கும் இடையே போடப்பட்ட ஒப்பந்தம். கிட்டத்தட்ட 88 வருடங்கள் பழைமையான இந்த ஒப்பந்தப்படி தமிழ்நாட்டிற்கு 575.68 டி.எம்.சி. தண்ணீர் கர்நாடகம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதேபோல் கர்நாடக மாநிலத்திற்கு தேவையான 45 டி.எம்.சி. தண்ணீரை அம்மாநிலம் தேக்கி வைத்துக் கொள்ளலாம் என்று முடிவானது. இந்த ஒப்பந்தம் 50 வருடங்களுக்குப் பிறகு புதுப்பிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்ததால் 1974ல் அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க



சென்னையிலிருந்து
முத்தையா காசிநாதன்


வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. தமிழ்நாட்டிற்கு மேட்டூர் அணை கட்டிக் கொள்ளலாம். கர்நாடகம் கிருஷ்ண சாகர் அணையை கட்டிக் கொள்ளலாம்- இது பழைய ஒப்பந்தத்தின் ஏற்பாடு. ஆனால் தமிழக ஒப்பந்தப்படி மேட்டூர் அணையை மட்டும் கட்டி விட்டு அமைதி காத்தது. ஆனால், கர்நாடக மாநிலமோ கிருஷ்ண சாகர், ஹேமாவதி, ஹாரங்கி, கபினி, சரஸ்வதி, குண்டல், தார்கா என்று ஏழு அணைகளைக் கட்டிக்கொண்டது. அன்றிலிருந்தே கர்நாடக மாநிலம் தமிழ்நாட்டுடன் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தை மீறிக் கொண்டேதான் இருந்தது.

விவசாயிகளின் வாழ்வாதாரமாக இருக்கிறது காவிரி நதி நீர். குறிப்பாக தமிழகத்தில்காவிரிடெல்டாமாவட்டங்கள் என்று கூறப்படும் தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம்தவிரதிருச்சி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களிலும் விவசாயிகளின் உயிர் நாடிப் பிரச்சினை காவிரி நதி

# கலாட்டா



தமிழக முதல்வர் ஜெயலலிதா



நீர்தான். காவிரி நீரைப் பகிர்ந்து கொடுப்பதில் கர்நாடக மாநிலம் செய்த கூத்துகளால் தமிழகத்தில் 1972ம் வருடம் வாக்கில் 28.20 இலட்சம் ஏக்கராக இருந்த பாசனப்பரப்பு இன்றைக்கும் 18 லட்சம் ஏக்கருக்கும் குறைவாகி விட்டது. ஒரு காலத்தில் குறுவை, தாளடி, சம்பா என்று மூன்று போகம் விவசாயம் இருந்தது. இன்று இரண்டிற்கே தடுமாற்றம் என்ற நிலை வந்துவிட்டது. ஆனால், இதே 1970களில் கர்நாடகாவின் பாசனப் பரப்பு வெறும் 3.50 லட்சம் ஏக்கர்தான். ஆனால், இன்றோ அது 15 லட்சம் ஏக்கரைத் தொட்டு விட்டது. அந்த அளவிற்கு நதிநீர் ஒப்பந்தத்தை மீறி, பல அணைகளை கட்டி, தமிழகத்திற்கு வரும் நீரை தடுத்து வருகிறது கர்நாடக மாநிலம்.

இரு மாநில முதல்வர்கள், அதிகாரிகள், பொதுப்பணித்துறை அமைச்சர்கள் ஆகியோருக்கு இடையே எத்தனையோ பேச்சுவார்த்தைகள் நடைபெற்றாலும் நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை தி.மு.க. ஆட்சியிலிருந்த போது 1970 வாக்கில் அன்றைய முதலமைச்சர் கருணாநிதியால் எழுப்பப்பட்டது. ''இனி பேசிப் பயனில்லை'' என்ற முடிவிற்கு வந்தவர் 1986ல் அ.தி.மு.க. ஆட்சியில் அன்று முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். காவிரி டெல்டா விவசாயிகளும் 1983ல் நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து இந்திய சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்கள். இந்நிலையில் சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி காவிரி நடுவர் மன்றம் 1990 ஜுன் மாதம் 2ம் தேதி அமைக்கப்பட்டது. அப்போது வி.பி. சிங் இந்தியப் பிரதமர். உடனே அந்த நடுவர் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெற்றது. அதிலேயே தமிழக அரசின் சார்பில் அப்போதிருந்த முதல்வர் கருணாநிதி இடைக்காலத் தீர்ப்பு ஒன்றை வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. இதை கோர்ட் மூலம் கர்நாடகம் தடுக்கப்பார்த்தாலும், இறுதியில் 1991 ஜுன் 25-ஆம் திகதி இடைக்கால ஆணையை காவிரி நடுவர் மன்றம் வழங்கியது. அதன்படி தமிழகத்திற்கு ஜுன் மாதம் முதல் மே மாதம் வரையிலான 12 மாதங்களில் மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் வந்து சேரும்படி கர்நாடகம் காவிரி நீரை ரிலீஸ் பண்ண வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. 1924 ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட 575.68 டி.எம்.சி., 1991 நடுவர் மன்றத் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி.யாக குறைந்தது. அதிலும் கூட ஆறு டி.எம்.சி. தண்ணீரை பாண்டிச்சேரி மாநிலத்திற்கு கொடுக்க வேண்டும். ஒரு காலத்தில் அதாவது 1980 வாக்கில் மேட்டூரில் 623 டி.எம்.சி வரை காவிரி நீர் வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இந்த இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டு 21 வருடங்கள் ஆகியும், இன்றுவரை ஒரு வருடம் கூட நடுவர் மன்ற உத்தரவினை

மதித்துகர்நாடகம்தமிழகத்திற்குதண்ணீர் கொடுக்கவில்லை. ஆனால் இந்த இடைக் கால உத்தரவைத் தொடர்ந்து கர்நாடகா வில்வாழும்தமிழர்கள்தாக்கப்பட்டார்கள். ஏறக்குறைய ஒன்றரை லட்சம் தமிழர்கள் தமிழகம் நோக்கி ஓடி வந்தார்கள் என்று ஒரு புள்ளிவிவரம் அப்போதே கூறியது. பெங்களூரில் வாழும் தமிழர்களுக்கு எதிரான பெரும் தாக்குதலுக்கு இந்த இடைக்கால உத்தரவை கர்நாடகத்தில் உள்ளவர்கள் பயன்படுத்தினார்கள். இந்நிலையில் நடுவர் மன்ற ஆணையை நிறைவேற்ற கர்நாடக அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்து அன்று முதலமைச்ச ராக இருந்த ஜெயலலிதா 84 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தார். இந்தக் காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மறைந்த பி.வி நரசிம்மராவ் இந்திய பிரதமராக இருந்தார்.

பிறகு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நிறைவேற்ற உச்சநீதி மன்றமே "காவிரி நதி நீர் ஆணையம்" அமைக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. அதன்படி தி.மு.க. தலைவர் கருணாநிதி முதலமைச்சராக இருந்த போதும், மத்தியில் குஜ்ரால் பிரதமராக இருந்த போதும் "காவிரி நதி நீர் ஆணையம்" அமைப்பதற்கு ஒரு வரைவுத்திட்டம் உரு வாக்கப்பட்டது. அதை "காவிரி வரைவுத் திட்டம்" என்றே அழைத்தார்கள். ஆனால் கர்நாடகமோ "காவிரி நதிநீர் ஆணையம் என்று இருக்கக்கூடாது. அதற்குப் பதில் அது காவிரி நதிநீர் கமிட்டி என்றே இருக்க வேண்டும்" என்று வாதிட்டது. வழக்கு ஆடியது. இந்த ஆணையம் அமைக்கும் வரைவுத் திட்டத்தில் ஒரு முக்கிய ஷரத்து இருந்தது. அதாவது, "நடுவர் மன்றத்தின் ஆணையை எந்த மாநிலம் செயல் படுத்தாவிட்டாலும், அந்தப்பகுதியில் உள்ள காவிரி நீர்த்தேக்கங்களின் இயக் கத்தையும், பராமரிப்பையும் ஆணை யமே தன்வசம் எடுத்துக் கொள்வது" என்பதாகும். ஆனால் இந்த பிரிவை கேரளமும், கர்நாடகமும் அப்போது எதிர்த்தது. தமிழகமும் "மாநில சுயாட்சி" என்பதை முன்னிறுத்தி, "பரவாயில்லை அந்தப் பிரிவை விட்டு விடலாம்" என்று அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டியே அன்று தமிழகம் முடிவு செய்தது. இப்படித்தான் காவிரி நதி நீர் ஆணையம் 1998 ஆகஸ்ட் 11-ஆம் திகதி அமைக்கப் பட்டது. அதன் தலைவர் இந்தியப் பிரதமர். நதிநீர் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நான்கு முதல்வர்கள் உறுப்பினர்கள்.

# 'நெருக்கடி நீடித்தால் காவிரி உற்பத்தியாகும் குடகுவை தனி மாநிலமாக அறிவிக்க வேண்டும்'

காவிரி நதி நீர் பிரச்சினை பற்றி தமிழகத்தின் காவிரி டெல்டா மாவட்டங்களில் இதற்காக பல வருடங்களாக குரல் எழுப்பி வரும் விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலப் பொதுச் செயலா ளர் ஆறுபதி கல்யாணத்திடம் பேசி னோம். அவர், "ஒன்றுபட்ட நாட்டிற்குள் ஒரு மாநிலம் இன்னொரு மாநிலத் திற்கு நதி நீர் கொடுக்க மாட்டேன் என்று அடம்பிடிப்பது ஆபத்தான போக்கு. ஜுன் மாதம் முதல் செப்டம்பர் 19ஆம் திகதி வரை கர்நாடக அணைகளில் 144 டி.எம்.சி. தண்ணீரை அம்மாநிலம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழகத்திற்கு வெறும் 19 டி.எம்.சி.தான் கொடுத்திருக்கிறது. செப்டம்பர் மாதம் வரை நியாயப்படி தமிழகத்திற்கு 122 டி.எம்.சி. தண்ணீர் வந்திருக்க வேண்டும். ஆனால், இன்னமும் 103 டி.எம்.சி.தண்ணீரை நமக்கு கர்நாடகம் கொடுக்கவில்லை. அதைக்கூட தமிழகம் கேட்கவில்லை. "இடர்க்கால பகிர்வு" அடிப்படையில் வரவேண்டிய 48 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம். இன்றைய திகதியில் அவர்களின் புள்ளிவிவரப் படியே கர்நாடக அணை களில் 80 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. கிருஷ்ணசாகர் அணை தவிர அனைத்து அணைகளும் நிரம்பி விட்டன. சொல்லப்போனால் அணையின் கொள்ளளவில் 75 முதல் 80 சதவீத தண்ணீர் அணைகளில் இருக்கின்றன. சுப்ரீம் கோர்ட் 10,000 கன அடியை ரிலீஸ் பண்ணுங்கள் என்று கூறியது. அதையும் கேட்கவில்லை. இப்போது காவிரி நதி நீர் ஆணையம் சொல் வதையும் கேட்கவில்லை. அங்குள்ள விவசாயிகள் அல்ல- இனவெறியர்கள், கபினி, கிருஷ்ணசாகர் அணை போன்ற வற்றை கைப்பற்றுவோம் என்று ஒப்ப னாக அறிவித்து போராட்டம் நடத்து கிறார்கள். உருவபொம்மையில் "தமிழ்நாடு" என்று எழுதி அங்குள்ள இனவெறியர் வாட்டல் நாகராஜ் கொழுத்துகிறார். கர்நாடகா இந் தியாவில்தான் இருக்கிறதா அல்லது தனி நாடா என்ற கேள்வி எழுகிறது. இந்திய இறையாண்மைக்கு கர்நாடக மாநிலம் கட்டுப்பட்டதா, இல்லையா? என்ற கேள்வியும் எழுகிறது.

மாநிலங்களில் போராட்டம் நடக்கும் போது மத்திய அரசு இராணுவத்தை அனுப்பி கட்டுப்படுத்துகிறது. உதாரண மாக ஆந்திர மாநிலத்தில் நடைபெறும் தெலுங்கானா மாநிலம் உருவாக்கும் பிரச்சினையில் இப்படிச் செய்கிறது. அதே போல் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கொடுக்க மறுக்கும் கர்நாடகாவிற்கு இராணுவத்தை அனுப்பி அணைகளை திறந்து விட வேண்டும். நதி நீர் தேசியச் சொத்து என்று தேசியக் கட்சிகளாக இருக்கும் காங்கிரஸும், பாரதீய ஜனதா கட்சியும் சட்டம் கொண்டு வர வேண்டும். ஏனென்றால் தேசிய கட்சிகளுக்குக் கூட தேசியப் பார்வை இருக்கக்கூடாதா? (கர்நாடக மாநிலத்தில் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது). நாற்பது வருடங்களாக இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் தவிக்கிறோம். 1934 முதல் 1970 வரை தமிழகத்திற்கு 378 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்தின் பங்காக இருந்தது. நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பின் மூலம் இது 205 டி.எம்.சி.யாக குறைந்தது. பிறகு வந்த நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மூலம் 192 டி.எம்.சி.யாக தேய்ந்து விட்டது. அதைப் பெறவும் போராட வேண்டியிருக்கிறது. சாகுபடிகள் வறண்டு கிடக்கின்றன. விவ சாயிகளின் முகங்களில் கவலை ரேகைகள் குடிகொண்டிருக்கின்றன. தண்ணீரை வைத்துக் கொண்டு கர் நாடக மாநிலம் தர மறுக்கிறது. இதே நிலை நீடித்தால் காவிரி உற்பத்தியாகும் குடகு முன்பு தமிழகத்தில் இருந்தது தான். அதைத்திரும்பப்பெற வேண்டும். இல்லையென்றால் குடகுவை தனி மாநிலமாக அறிவிக்க வேண்டும். ●

மத்திய நீர்வளத்துறையின் செயலாளர் இந்த ஆணையத்தின் செயலாளராகவும் இருப்பார்.

இந்த ஆணையம் அமைக்கப்பட்டவுடன் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா, "பிரதமர் தலைமையில், நான்கு மாநில முதல்வர்களும் (தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், பாண்டிச்சேரி) கூடிக் கலைகிற ஒரு அரசியல்வாதிகளின் சங்கம்- (கிளப்) ஆகத்தான் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையத்தில் உள்ள நான்கு மாநில முதல்வர்களில் ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்தால் கூட, எந்தவொரு முடிவையும் பிரதமர் தலைமையிலான ஆணையம் எடுக்கவே முடியாது" என்று ஆணித்தரமாக வாதிட்டார். இன்னும் சொல்லப்போனால், அக் கட்சியின் சார்பில் 15.9.98 அன்று நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவில் இந்தக் கருத்தை ஆவேச உரையாகவே நிகழ்த்தினார். அவர் சொன்னது போலவே இப்போது நடக்கிறது. காவிரி நதி நீர் ஆணையத்தால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது. இதுவரை காவிரி நதி நீர் ஆணையம் அளித்த தீர்ப்பை கர்நாடக மாநிலம் ஏற்றுக் கொண்டதே இல்லை. இன்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சராக இருக்கும் எஸ்.எம். கிருஷ்ணா கர்நாடக மாநில முதல்வராக முன்பிருந்த போது காவிரி நதி நீர் ஆணைய உத்தரவை மதிக்காததற்காக சுப்ரீம் கோர்ட்டிடம் குட்டு வாங்கிக் கொண்டவர். அதே நிலைப்பாட்டை இப்போதும் கர்நாடகம் எடுக்கிறது. முதலில் உச்ச நீதிமன்றம் தினமும் 10,000 கன அடி தண்ணீர் திறந்து விட வேண்டும் என்றும் காவிரி நதி நீர் ஆணையம் உடனே கூட்டப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது. அதை மதிப்பது போல் நாடகமாடிய கர்நாடக அரசு, காவிரி நதி நீர் ஆணைய கூட்ட அறிவிப்பு வந்ததும் கொடுத்த தண்ணீரையும் நிறுத்தியது. பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர், தமிழக முதல்வர் ஜெயலலிதா அனைவரும் அக் கூட்டத்தில் பங்கேற்றனர். 9000 கன அடி தண்ணீரை திறந்து விட வேண்டும் என்று பிரதமர் தலைமையிலான காவிரி ஆணையம் உத்தரவிட்டது. அதையும் கொடுக்க மறுத்து இப்போது உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்தைப் பெற்றாலும், இன்னும் கோர்ட்டில் "ரிவியூவ் பெட்டிஷன்" போடுவேன் என்று கச்சை கட்டிக் கொண்டு நிற்கிறது கர்நாடக அரசு. இந்தச் சூட்டில் கர்நாடக மாநிலத்தில் உள்ள சில அமைப்புகள் தீவிர போராட்டத்தில் குதித்துள்ளன. இது இரு மாநில உறவுகளையும் பாதிக்கும் நிலைக்கு கொண்டு போய்க் கொண்டிருக்கிறது. தஞ்சையிலோ சம்பா சாகுபடிக்கு பாசன நீர் கிடைக்காமல் விவசாயிகள் உருக் குலைந்து போய் நிற்கிறார்கள். கர்நாடகமோ போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது.

இடைக்காலத் தீர்ப்பில் 205 டி.எம்.சி. வழங்கப்பட்டது. பிறகு 2007ல் காவிரி நடுவர் மன்றத் தலைவராக இருந்த என்.பி.சிங் காலத்தில் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட போது தமிழ்நாட்டிற்கு 419 டி.எம்.சி.யும், பாண்டிச்சேரிக்கு 7 டி. எம்.சி.யும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. "நான் கர்நாடகத்தில் உள்ள 11 முதல்வர்களுடன் இது பற்றி பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேன். இந்த இறுதித் தீர்ப்பு வரவேற்க வேண்டியது" என்றார் அப்போது முதல்வராகஇருந்தகருணாநிதி.அதேநேரத்தில் கர்நாடக மாநிலத்தில் இருந்த முதல்வர் குமாரசாமி, "இறுதித் தீர்ப்பு வந்த திங்கட்கிழமை எங்களுக்கு கறுப்பு திங்கள்" என்றார். காவிரி நடுவர் மன்றம் அமைத்தது, காவிரி வரைவுத் திட்டம் உருவானது, காவிரி நதி நீர் ஆணையம் அமைத்தது எல்லாம் முதல்வராக கருணாநிதி இருந்த காலத்தில் நடந்தது. அதே சமயத்தில் காவிரி நடுவர் மன்ற இடைக்காலத்தீர்ப்பு வந்தது, அதைஅரசுஇதழில்வெளியிட்டது எல்லாம் முதல்வராக ஜெயலலிதா இருந்த காலத்தில் நடந்தது. அதே போல் சுப்ரீம் கோர்ட் மூலம் கர்நாடகம் தண்ணீர் திறந்துவிட கட்டாயம் உருவானதும் முதல்வராக ஜெயலலிதா இருந்த போதுதான். இப்போதும் அவர் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனதால்தான் தமிழகத்திற்கு காவிரியிலிருந்து முதல் ரவுண்டில் தண்ணீர் வந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதேநிலைதான் தொடர்கிறது. கடந்த 30ஆம் திகதி உயர் நீதிமன்றின் உத்தரவுக்கு அடிபணிந்தே கர்நாடக அரசாங்கம் 3 நாட்களுக்கு தமிழகத்துக்கு தண்ணீரை விடுவித்தது. காவிரிப் பிரச்சினை துவங்கியது என்றால் முதல் ஒப்பந்தம் வெளியான 1892லிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியென்றால், 120 வருடங்களாக காவிரி நதி நீர் பிரச்சினையால் தமிழகம் மற்றும் கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களின் உறவுகள் அடிக்கடி சர்ச்சைக்குள்ளாகின்றன. எல்லா விடயங்களிலுமே இந்தப் பிரச்சினையில் நீதிமன்றம்தான் ஏதாவது ஒரு தீர்வைக் கொடுத்துள்ளது. பிரதமரோ, காவிரி நதி நீர் ஆணையமோ, இரு மாநில முதல்வர்களிடையே நடைபெற்ற 60 ரவுண்டிற்கும் மேற்பட்ட பேச்சுவார்த்தைகளோ அல்ல! கூட்டாட்சி தத்துவத்தைப் போற்றும் இந்தியா போன்ற பெரிய ஜனநாயக நாட்டில் இப்படி ஒரு மாநிலம் இன்னொரு மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இவ்வளவு வீண் பிடிவாதம் பிடிப்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கே சவாலாக அமைந்திருக்கிறது.

### சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடும்- சலசலப்பும்!

சில்லறை வணிகத்தின் அந்நிய முதலீடு இந்தியாவில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. காங்கிரஸ் தவிர அனைத்துக் கட்சிகளும் போர்க்கொடி தூக்கிப் பிடிக்கின்றன. தேசியக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியே இதை எதிர்த்ததோடு மட்டுமன்றி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதை ரத்துச் செய்வோம் என்று அறிவித்து வெளிநாட்டு முதலீட்டாளர்களை அச்சுறுத்துகிறது. திரிணாமூல் காங்கிரஸ் தலைவர் மமதா பானர்ஜி ஏற்கனவே மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் வாங்கி விட்டார். அவருக்கு மேற்கு வங்க மாநிலத்தில் தன் கட்சியினர் தாய்க் கட்சியான காங்கிரஸுடன் ஐக்கியமாகிவிடுவார்களோ என்ற அச்சமே இந்த "ஆதரவு வாபஸ் வாங்கும் படலத்திற்கு" முழு முதற் காரணம். தேசிய அளவில் இவ்வளவு சர்ச்சைகளைக் கிளப்பிய சில்லறை வணிகத்தில் 51 சதவீதம் வெளிநாட்டு முதலீட்டிற்கு அனுமதி என்பதை ஏன் அரசு மும்முரமாக எடுத்துச் செல்கிறது. "கோல்கேட்" விவகாரத்தில் அரசின் மீது படிந்த கறையைப் போக்க எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கையா அல்லது எனக்கு என்று இருக்கின்ற "பொருளாதார சீர்திருத்தவாதி நான்" என்ற முகத்தை பறிகொடுக்கத் தயாராக இல்லை என்று பிரதமர் மன்மோகன்சிங் செய்த பிரகடனமா என்று அரசியல் பார்வையாளர்கள் திணறித்தான் போயிருக்கிறார்கள்.


சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு ஏதோ திடீரென்று வந்த அறிவிப்பல்ல. ரொக்க அடிப்படையில் செய்யப்படும் மொத்த வியாபாரத்தில் 1997 வாக்கிலேயே முதன் முதலில் அந்நிய முதலீடு நூறு சதவீதம் அறிமுகப்படுத்தப்பட்டது.

"சிங்கிள் பிராண்டில்" 51 சதவீத அந்நிய முதலீடு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் முதல் ரவுண்டில் அதாவது 2006ல் அனுமதி அளிக்கப்பட்டது. அதனால்தான் இன்று எங்கு பார்த்தாலும் ரிலையன்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் காய்கறிக் கடைகளையும், பழக்கடைகளையும் இந்தியாவில் எங்கும் பார்க்கிறோம். இந்நிலையில், சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டைக் கொண்டு வர முக்கிய காரணம் இது விவசாயத்திற்கு அடுத்தாற்போல் அதிகப் பணியாளர்களை உருவாக்கும் இரண்டாவது துறை. அதாவது விவசாயத்தை நம்பியிருப்போர் முதல் ரகம் என்றால், சில்லறை வணிகத்தை நம்பியிருப்போர்தான் நாட்டில் இரண்டாவது லெவலில் அதிகமாக இருக்கிறார்கள். அதேநேரத்தில் காய்கறிகள், பழங்கள் உற்பத்தியில் இந்தியா உலகத்திலேயே இரண்டாவது பெரிய உற்பத்தியாளர். ஆனால், அதைப் பதப்படுத்தி, பக்குவப்படுத்தி வைத்துக் கொள்ள ஸ்டோரேஜ் வசதிகள் இல்லை. குறிப்பாக 180 மில்லியன் மெட்ரிக் தொன் உற்பத்தி என்றால், சுமார் 24 மில்லியன் மெட்ரிக் தொன் அளவிற்குத்தான் ஸ்டோரேஜ் பண்ணும் வசதி இந்தியாவில் இருக்கிறது. இதனால் விரைவில் கெட்டுப் போகும் தோட்டப் பொருள்கள் தொலைதூர மார்க்கெட்டுகளுக்குச் செல்ல முடியவில்லை. வருடம் முழுவதும் அவற்றை விற்கவும் முடியவில்லை. இதனால் சுமார் 30 சதவீதத்திற்கும் மேலான காய்கறிகள், பழங்கள் வீணாகிப் போகின்றன. உணவுத் தானியங்கள் வகையிலேயே சுமார் 7 சதவீதம் வரை நாசமாகிப் போகின்றன.

இது ஒரு வகை பிரச்சினையென்றால், விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு ஏற்ற விலை கிடைக்காமல் இந்திய விவசாயிகள் அல்லல்படுகிறார்கள். சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு ஊக்கப்படுத்தப்படும் நாடுகளில் இறுதியாக பொருளை வாங்கும் நுகர்வோர் கொடுக்கும் விலையில் மூன்றில் இரண்டு பங்கு விவசாயிகளுக்குப் போய்ச்சேருகிறது. ஆனால், இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு விலை மட்டுமே விவசாயிக்கு கிடைக்கிறது. இப்படி பல்வேறு வசதிகள் அந்நிய முதலீட்டால் வர வாய்ப்பு இருக்கிறது என்று கூறித்தான் மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதித்து அமைச்சரவை முடிவை எடுத்தது. ஆனால் கடும் போராட்டங்கள் எழுந்தது. கூட்டணிக் கட்சிகளே எதிர்த்தன. அதனால் அந்த முடிவை அமுல்படுத்துவதை அப்போதைக்கு தள்ளி வைத்தது. இதன் பிறகு மத்திய அரசு பெரிய "கன்ஸல்ட்டேஷன் பிராஸஸை"த் துவக்கியது. மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசித்தது. வணிக நிறுவனங்களின் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு மட்டத்தில் இந்த ஆலோசனை தொடர்ந்தது. எட்டு மாநில முதல்வர்கள் இதற்கு ஒப்புதல் அளித்தார்கள். பீஹார், கர்நாடகா, கேரளா, மத்திய பிரதேசம், திரிபுரா, ஒடிஸா உள்ளிட்ட மாநில முதல்வர்கள் இந்த முடிவுக்கு தங்கள் எதிர்ப்புக் கருத்துகளை தெரிவித்தனர். இந்நிலையில்தான் கடந்த செப்டம்பர் 14ஆம் திகதி சில்லறை வணிகத்தில் 51 சதவீதம் அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் முடிவை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் அமைச்சரவை எடுத்தது. சில்லறை வணிகத்தை நம்பியிருக்கும் வியாபாரிகள், அவர்களை நம்பியிருக்கும் தொழிலாளிகள் வேலை இழக்கும் ஆபத்து வந்து விட்டது என்றே அனைவரும் இதை எதிர்க்கிறார்கள்.

ஆனால், இந்த முடிவை எல்லா மாநிலங்களும் அமுல்படுத்த வேண்டியதில்லை. விருப்பம் உள்ள மாநிலங்கள் அமுல்படுத்தலாம் என்ற உரிமையை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கே இந்திய அரசு வழங்கியிருக்கிறது. அதே நேரத்தில் சில்லறை வணிகத்தில் வரும் அந்நிய கம்பெனிகள் குறைந்தபட்சம் 30 சதவீத கொள்முதலை இந்தியாவில் உள்ள சிறு தொழில் செய்வோரிடமிருந்து செய்ய வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் குக்கிராமங்

## 'சிறு வியாபாரிகள் சகலருக்குமே பாதிப்பு வரும்'



சில்லறை வணிகத்தில் 51 சதவீத அந்நிய முதலீடு பற்றி தமிழ்நாடு வியாபாரிகள் சங்கத்தலைவர் வெள்ளையனிடம் கருத்துக் கேட்டோம். அவர், "இதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். சில்லறை வணிகம் மிகப்பெரிய சுயவேலை வாய்ப்பு கேந்திரம். விவசாய உற்பத்திப் பொருள்கள் மற்றும் சிறிய தயாரிப்பு பொருள்கள் போன்றவற்றின் சந்தையே சில்லறை வணிகம் தான். பொருளாதார அடிப்படையில் இதில் அந்நிய முதலீட்டாளர்களை அனுமதிப்பது சட்டவிரோதம்.

அரசியல் சட்ட விரோதம். அதை யார் செய்தாலும் தண்டனைக் குரிய குற்றம். இந்த முதலீட்டால் விலைவாசி குறையும் என்றார்கள். பெப்சி, கொக்கோ கோலா போன்றவை முதலில் இப்படித்தான் சொல்லி குறைந்த விலையில் புகுந்தார்கள். இப்போது சிறு வியாபாரிகளை அழித்து விட்டு அதிக விலைக்கு விற்கிறார்கள். தரமான பொருளைக் கொடுப்போம் என்றார்கள். அதுவும் காலப்போக்கில் காற்றில் பறந்து விட்டது. சமையலுக்கு பயன்படுத்தும் புளியை பேஸ்ட்டாகக் கொடுப்போம் என்கிறார்கள். அதை இந்தியாவில் உள்ள தொழிலதிபரே செய்ய வேண்டியதுதானே. ஏன் வெளிநாட்டு கம்பெனிக்கு கொடுக்க வேண்டும்? ஒரு காலத்தில் பிரிட்டிஷ்காரன் இந்தியாவிற்கு வர்த்தக ரீதியில்தான் வந்தான். நாம் அவர்களுக்கு அடிமையானோம். இப்போது வெளிநாட்டு முதலீட்டு வழியில் அமெரிக்காக்காரன் வருகிறான். நாம் நாளைக்கு அமெரிக்காவிற்கு அடிமையாகப் போகிறோம். இதெல்லாம் உலக வர்த்தக ஒப்பந்தத்தால் ஏற்பட்ட ஆபத்து.

நமக்குத் தேவை தொழில்நுட்பம். அதை இந்த உலக வர்த்தக ஒப்பந்தம் கொடுப்பதில்லை. பிறகு எதற்காக நாம் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். சில்லறை வணிகத்தில் வெளிநாட்டு முதலீடு அனுமதிக்கப்பட்டிருப்பது பதுக்கலுக்கு வழி வகுக்கும். இதைத்தான் வெளிநாட்டு கம்பெனிகள் செய்யப் போகின்றன. பொருளை வாங்கி பதுக்கி வைத்துவிட்டு வருடம் முழுவதும் அதிக விலைக்கு விற்கப் போகிறார்கள். இதனால் விவசாயிகள், சிறு வியாபாரிகள் எல்லாருமே பாதிக்கப்படுவார்கள்.

களில் எல்லாம் கடை திறக்கக்கூடாது. பத்துலட்சம் மக்கள் தொகைக்கும் அதிகமாக உள்ள நகரங்களில் மட்டுமே அந்நிய கம்பெனிகள் கடை திறக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

இவ்வளவு சீரியஸான விடயத்தை தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தவிர அனைத்துக் கட்சிகளுமே எதிர்க்கின்றன. ஏற்கனவே மத்திய அரசுடன் பல மனக் கசப்புகளிலும், மாச்சரியங்களிலும் மாட்டிக் கொண்டிருக்கும் தி.மு.க. இதை முதலில் எதிர்க்கிறது. குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சிகள் நடத்திய நாடு தழுவிய பந்திற்கு ஆதரவு அளித்தது. அக்கட்சியின் தொழிலாளர்முன்னேற்றசங்கப்பேரவை அதில் பங்கேற்றது. நாடு தழுவிய பந்த் தினத்தில் பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை என்று முதலில் அறிவித்த ஆளும்அ.தி.மு.க. அரசுபிறகுதி.மு.க.வும் எதிர்ப்பதால், அந்த விடுமுறையை ரத்துச் செய்தது. ஆனாலும் சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டை தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும் எதிர்க்கின்றன. காரணம் வியாபாரத்தையே நம்பியிருக்கும் மக்களின் வாக்கு வங்கி. அது பொதுவாக காங்கிரஸின் வாக்கு வங்கியாக இருந்து பிறகு பா.ஜ.க.விற்குப் போனது. அங்கிருந்து எம்.ஜி.ஆர் காலத்தில் அந்த வாக்கு வங்கி அ.தி.மு.க. பக்கம் திரும்பியது. இப்போது அது தி.மு.க., அ.தி.மு.க. இரு கட்சிகளுக்குமே பெருமளவு சொந்தம் என்ற பீதியில் இருக்கிறது. ஆகவே தமிழகக் கட்சிகளை "அந்நிய முதலீடு" தங்களின் வாக்கு வங்கியான "உள்ளூர் முதலீட்டை" கெடுத்து விடும் என்ற பயத்தில் இதைக் கடுமையாகவே எதிர்க்கிறார்கள் என்பதே நிலைமை.

## கூடங்குளத்தில் கொழுந்து விட்டு எரியும் போராட்டம்!

இந்தியாவின் மின் பற்றாக்குறை ஏறக்குறைய 46,000மெகாவாட். இதைச் சமாளிக்கவே அமெரிக்காவுடன் அணு சக்தி ஒப்பந்தத்தை பெரும் போராட்டத்திற்குப் பிறகு கையெழுத்திட்டார் பிரதமர் மன்மோகன்சிங். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்மோகன்சிங்கை விட்டு விலகியகம்யூனிஸ்ட்கட்சியினர்இதுவரை அவர் பக்கம் மீண்டும் திரும்பவில்லை. இதுவரை 20 அணுஉலைகள் இந்தியாவில் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இதன் மூலம் குறைந்த விலையில் மின்சாரம் கொடுக்க முடியும் என்று நம்புகிறது இந்திய அரசு. தமிழகத்தின் தென்கோடியான திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிறது கூடங்குளம் அணுமின் நிலையம். 2001-ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. 1988இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், சோவியத் அதிபர் மிகேல் கோர்ப்பச்சேவுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம் இது. ஏறக்குறைய 13,000 கோடி ரூபா முதலீடு. 2000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்ற எதிர்பார்ப்பு. இது மட்டுமன்றி கூடங்குளத்தில் மேலும் 7000 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்ய திட்டங்கள் கைவசம் உள்ளன. இந்தத் திட்டம் செயல்பட்டால் சுமார் 1000 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்கு கிடைக்கும். இப்போது தமிழகத்தின் பல பகுதிகளில் நிலவும் ஒரு மணி நேரம் முதல் 14 மணி நேரம் வரை உள்ள மின்வெட்டைச்சமாளிக்கஇந்தமின்சாரம் ஓரளவு உதவும் என்ற நிலையில், கூடங்குளம் அணுமின் நிலயத்திற்கு எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. ஜப்பானில் உள்ள புகுஷிமாஅணுஉலைவிபத்தேமக்களின் அச்சத்திற்கு காரணம் என்றாலும், ரஷ்ய தொழில் நுட்பத்துடன் கூடிய இந்த அணு உலைக்கு இவ்வளவு பெரிய எதிர்ப்பு இந்த ஆலைக்காக சோதனை ஓட்டம் நடைபெற்ற பிறகுதான் ஏற்பட்டது.

இத்தனைக்கும் இப்போது போராடிக் கொண்டிருக்கும் உதயகுமாரை 2007 வாக்கில் அணுமின் நிலையம் அமைந்துள்ள பகுதிக்கே அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பணிகள் பற்றிய அனைத்து விவரங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. குறிப்பாக செர்னோபில் அணு உலை விபத்திற்குப் பிறகு உலையில் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக் கூறப்பட்டன. அது மட்டுமன்றி, சுனாமி, பூகம்பத்தால் பாதிப்பு வராமல் இருக்க எடுக்கப்பட்ட முன்னேற்பாடுகளையும் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும் அணு உலைக்காக நடத்தப்பட்ட சோதனை ஓட்டத்தின் போதே மக்கள் அச்சத்தின் விளிம்பிற்குப் போனார்கள். இதனால் அன்று துவங்கிய கூடங்குளம் தீவிர போராட்டம் செப்டம்பர் 30ம் திகதியுடன் 412 நாளைத் தொட்டிருக்கிறது. இந்த 412 நாளும் உண்ணாவிரதம், வெவ்வேறு போராட்டங்கள் என்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் முதலில் அணு உலையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சம் சரியானதே என்ற ரீதியில் அமைச்சரவைக் கூட்டத்தைப் போட்டு தீர்மானம் நிறைவேற்றினார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. அது போராட்டக்காரர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. போராட்டமும் தொடர்ந்தது. ஆனால் காலப்போக்கில் தமிழகத்தில் ஏற்பட்ட கடும் மின்வெட்டு அரசு தன் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்கியது. பொறியியலாளர்கள் மற்றும் அணு விஞ்ஞானிகள் கொடுத்த அறிக்கையின் படி, "அணு உலை மிகவும் பாதுகாப்பாக இருக்கிறது. இதனால் ஆபத்து இல்லை. பூகம்பம் ஏற்படும் பகுதியில் உலை இல்லை. அதனால் மக்கள் அச்சப்படத் தேவையில்லை" என்றுதமிழக முதல்வர் அறிவித்தார். அரசின் சார்பில் அணு உலையைச் சுற்றியுள்ள 45 கிராமங்களுக்கு 500 கோடி ரூபா நிதி ஒதுக்கி வளர்ச்சித்திட்டங்கள் செய்யப்படும் என்று அறிவித்து, "உங்கள்உண்ணாவிரதத்தை



கைவிட்டு ஒத்துழைப்புத் தாருங்கள்'' என்று கோரிக்கை விடுத்தார் முதல்வர். ஆனால் அதற்கெல்லாம் போராட்டக் காரர்கள் செவி சாய்க்கவில்லை. கடலில் இறங்கிப் போராட்டம், கழுத்தளவு தண்ணீரில் மூழ்கிப்போராட்டம், மண்ணில் புதைந்து கிடந்து போராட்டம் என்று நாளுக்கு நாள் தீவிரமாகிக் கொண்டே யிருக்கிறது. அப்போராட்டத்திற்கு அரசியல் கட்சித் தலைவர்களும் விரைந்து சென்று ஆதரவு கொடுக்கிறார்கள்.

குறிப்பாக வைகோ போன்றவர்கள் அடிக்கடி மக்கள் போராடும் இடிந்தகரைப் பகுதிக்குச் சென்று அவர்களுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். முதல் முறையாக அரசியல் கட்சியின் சார்பில் ம.தி.மு.க. தான் அங்கு போராடும் மக்களுக்கு மருத்துவமுகாமை நடத்தியிருக்கிறது. ''தமிழர்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும் நான் வருவேன். ஓட்டு அரசியலுக்காக நான் வரவில்லை'' என்றே வைகோ அம்மக்களிடம் பேசியிருக்கிறார். போராட்டக்குழுத் தலைவர் உதயகுமாரும், ''உங்கள் போன்றவர்கள்தான் இந்த மாநிலத்திற்கு முதல்வராக வர வேண்டும்'' என்று வைகோவிடம் கூறியிருக்கிறார். போராட்டக்குழுச் செயலாளராக இருக்கும் புஷ்பராயன், ''போராடுவது என்று முடிவு எடுத்த போதே, அதனால் ஏற்படும் விளைவுகளை எதிர்பார்த்தே களம் இறங்கியுள்ளோம். போராட்டக் காரனுக்கு ஓய்வில்லை. எங்கள் போராட்டம் தொடரும்'' என்று அறிவித்துள்ளார். அங்கு வீடு வீடாகத் தேடுதல் வேட்டை நடத்திய பொலிஸ் மீது அப்பகுதி மக்கள் மிகுந்த ஆவேசத்தில் இருக்கிறார்கள். போராட்டத்தை ஒடுக்கவும், கூடங்குளம் அணு உலை முற்றுகையைத் தடுக்கவும் பொலிஸ் நடத்திய லத்தி சார்ஜ் அம் மக்களிடத்தில் மாறாத வடுவை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் போராட்டத்திற்கு ஆரம்பத்தில் முழு ஆதரவளித்த தமிழக முதல்வர் இப்போது தங்களை கைவிட்டு விட்டார் என்பது போராட்டக்குழுவின் உதயகுமார் போன்றோரின் குரலாக இருக்கிறது. தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் போராட்டக்காரர்கள் மீது ''தேசத்துரோக வழக்கு'' பதிவு செய்யப்பட்டது கூடங்குளம் போராட்டமாகத் தான் இருக்கும். அந்த அளவிற்கு போராட்டக்காரர்கள் மீது எண்ணற்ற வழக்குகள். ஆனால், இதுவரை போராட்டக்குழுவின் தலைவர் உதயகுமாரை பொலிஸால் பிடிக்க முடியவில்லை. ஏனென்றால் அவர் குழந்தைகள், பெண்கள், மீனவ மக்கள் ஆகியோரை முன்னிறுத்தி போராட்டம் நடத்தி வருவதே. அவரைப் பிடிக்கப் போனால் பொலிஸ் துப்பாக்கிச் சூடு வரை நிலைமை சீரியஸாகிவிடும் என்ற நிலையில் அரசு தரப்பில் இப்பிரச்சினையை கவனமாகக் கையாளுகிறார்கள். தமிழகத்தில் சுமார் 25க்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் மீனவ சமுதாய வாக்குகள் வெற்றி - தோல்வியை முடிவு செய்யும் வகையில் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாக துவங்கிய இப்போராட்டம் இப்போது கிறிஸ்தவ மைனாரிட்டி சமுதாயத்தினரின் போராட்டமாக மாறிவிட்டது. கிறிஸ்தவ தேவாலய பாதிரியார்கள் தலைமையிலேயே நெல்லையில் மெகா உண்ணாவிரதம் சமீபத்தில் நடந்து முடிந்தது என்பதே அதற்குச் சாட்சி.

தமிழகத்தில் கூடங்குளம் போராட்டம் நீண்ட நெடிய போராட்டமாக உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தல் எந்நேரத்திலும் வரலாம் என்பதால் போராட்டக்காரர்களிடம் தங்கள் அணுகுமுறையை ''கடினமாக்க'' முடியாமல் பொலிஸ் தவிக்கிறது. தமிழக சட்டம் ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி.யாக இருந்த ஜோர்ஜ், திருநெல்வேலி சரக பொலிஸ் அதிகாரியாக இருந்த வரதராஜுலு போன்றோர் அங்கு இருந்த வரை போராட்டக் காரர்களை எப்படியாவது சமாதானப் படுத்தி விட வேண்டும் என்பதையே முதல் நோக்கமாகவைத்து இப்பிரச்சினையைக் கையாண்டார்கள். அதுதான் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நோக்கமும் கூட. ஆனால் அந்த இரு பொலிஸ் அதிகாரிகளுமே மாற்றப்பட்டு விட்ட நிலையில், கூடங்குளம் போராட்டம் இனி எந்தத் திசையில் போகும் என்பதை ''பிரிடிக்ட்'' பண்ண முடியாத சூழ்நிலையிலேயே இருக்கிறது. இந்திய அணுசக்தி ஆணைய முன்னாள் தலைவர் டாக்டர் எம்.ஆர்.சீனிவாசன் (தமிழக அரசு அமைத்த கூடங்குளம் ஆய்வு கமிட்டிக்குத் தலைமை தாங்கியவர்), ''இந்தியாவில் 20 அணுமின் நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றின் உற்பத்தித் திறன் மிகவும் குறைவு. சொல்லப் போனால் 220 மெகா வாட்தான். இந்நிலையில் 1000 மெகாவாட் வரை உற்பத்தி செய்யும் முதல் அணு உலை கூடங்குளத்தில் துவங்கும். எரிபொருள் நிரப்புவதைப் பொறுத்தவரை, இங்கு பயன்படுத்தப்பட்ட எரிபொருளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லத் தேவையில்லை. மறுசுழற்சி நடவடிக்கைகள் இதே இடத்தில் நிறைவேறுவதால், அதிக அளவிலான பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்'' என்று ஏற்கனவே அறிவித்துள்ளார். ஆனால், இந்த எரிபொருள் நிரப்பும் பணியை எதிர்த்துத்தான் போராட்டம் தீவிரமாகியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஊழல் ஒழிப்பு போராட்டக் குழு உறுப்பினர் அரவிந்த் கெஜ்ரிவாலே இடிந்தகரைக்கு வந்து போராட்டக்காரர்கள் மத்தியில் உரையாற்றி, போராட்டக் குழுத் தலைவர் உதயகுமார் பொலிஸில் சரணடையக்கூடாது என்று கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், ''சுத்தமான, பாதுகாப்பான மின் உற்பத்தித் திட்டங்களில் அணு மின் உற்பத்தித் திட்டமும் ஒன்று. அது தவிர்க்க முடியாதது. அணுமின் நிலையம் பாதுகாப்பானது என்பதை விஞ்ஞானிகளும், தொழில் நுட்ப நிபுணர்களும் உறுதி செய்ய வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அவர் தங்களைச்சந்திக்கவில்லை என்ற கருத்தைக் கூறி, அவரது வேண்டுகோளையும் ஏற்க மறுத்து விட்டார்கள் போராட்டக்காரர்கள். கூடங்குளம் போராட்டக்காரர்களின் நீண்ட நெடிய போராட்டம் தொடருகிறது. உதயகுமாருக்கு ஊழல் எதிர்ப்பு இயக்கம் ஆதரவு தெரிவிப்பதால், சுப்ரீம் கோர்ட்டில் அணு உலை பாதுகாப்பற்றது என்று வழக்குத் தாக்கல் செய்து பிரபல வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் வாதிட்டிருக்கிறார். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளும், ''மக்களின் பாதுகாப்பு மிக முக்கியம். அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிக்கையாக தாக்கல் செய்யுங்கள். இல்லையென்றால் அணுஉலைப் பணிகளை நிறுத்தி வைக்க வேண்டி வரும்'' என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். இந்த எச்சரிக்கை போராட்டக் காரர்களுக்கு புதிய தெம்பைக் கொடுத்திருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசின் அறிக்கை தாக்கலான பிறகுதான் கூடங்குளம் அணு மின் நிலையம் செயல்பட அனுமதிக்கப்படுமா அல்லது மக்களின் பாதுகாப்புக் காரணங்களை சுட்டிக்காட்டி அதிரடி உத்தரவை சுப்ரீம் கோர்ட் பிறப்பிக்குமா என்பது தெரிய வரும்.

வரலாற்றுக் குறிப்பு



# சே

## மறைந்து கடந்து விட்ட 45 வருடங்கள்

அரசியல் என்று வரும்போது அதுவும் குறிப்பாக, புரட்சிகர அரசியல் என்கிறபோது இருபதாம் நூற்சுறாண்டின் இலச்சினைகளில் ஒருவராக மிளிருபவர் சேகுவேரா.

அவர் பொலிவியாவின் காட்டுக்குள் சுட்டுக்கொலை செய்யப்பட்டு அக்டோபர் 9 ஆம் திகதியுடன் 45 வருடங்கள் சரியாக நிறைவுறுகின்றன. பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து அவர் வெற்றிகரமாக முன்னெடுத்த கியூபா புரட்சிக்குப் பிறகு அந்த நாட்டுக்கு எதிராக அமெரிக்கா விதித்த தடைகளுக்கு இவ்வருடம் 50 வயதாகிறது.

இந்நிலையில் “சே” என்று சொன்னாலே உலகில் எல்லோருக்கும் உடனே மனதில் வருகிற சேகுவேரா குறித்து நினைவு மீட்டிப்பார்ப்பது இச்சந்தர்ப்பத்தில் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

சேகுவேரா இரு தடவைகள் திருமணம் செய்தவர். அவரது இரண்டாவது மனைவிக்குப்பிறந்தவர்களில் ஒரு பெண்பிள்ளைதான் உலக அரங்கில் தனது தந்தையின் புரட்சிகரப் பாரம்பரியம் பற்றி நாமெல்லோரும் அறியக்கூடியதாக பகிரங்கமாகப் பேசி வருவதை காணக்கூடியதாக இருக்கிறது.

குழந்தை மருத்துவராக இருக்கும் 51 வயதான டாக்டர் அலெய்டா குவேரா அண்மையில் லண்டன் கார்டியன் பத்திரிகையின் செய்தியாளர் ரேசி மக்வீஹ்வுக்கு தெரிவித்த கருத்துகளை சமகாலம் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறது. தந்தையார் கொலைசெய்யப்பட்டு 45 வருடங்கள் நிறைவு பெறுவதையும், கியூபாவுக்கு எதிரான அமெரிக்கத் தடை



அல்பேர்ட்டோ கோர்டா எடுத்த இந்தப்படம் உலகில் மிகவும் கூடுதலான தடவைகள் மறு பிரசுரம் செய்யப்பட்டிருக்கக் கூடியது என்று சாதனை படைத்தது. அவமரியாதைக்குரிய முறையில் இப்படம் பயன்படுத்தப் படுவதை தடுப்பதற்கு முயற்சிக்கும் குடும்பத்தினர்

## சேயின் பிள்ளைகளாக வளருகின்ற பாக்கியம் கிடைக்கவில்லை என்று கவலைப்படும் ஒரு மகளின் உணர்வலைகள்

களுக்கு அரை நூற்றாண்டு கால வரலாறு பூர்த்தியாவதையும் முன்னிட்டு மாத்திர மல்ல, கியூபா சம்பந்தப்பட்ட இன்னொரு வரலாற்று முக்கியத்துவ சம்பவத்தின் 14 ஆவது வருடத்தையும் முன்னிட்டும் டாக்டர் அலெய்டா பிரிட்டனுக்குச் சென்றி ருந்த வேளையிலேயே சம்பாஷணை இடம்பெற்றிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

கியூபாவுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் அமெரிக்க மாநிலமான புளோறிடாவில்இருக்கக்கூடியகாஸ்ட்ரோ எதிர்ப்பு (பயங்கரவாதக்) குழுக்களுக் குள் ஊடுருவி அமெரிக்காவுக்கு எதிரான வேலைகளில் ஈடுபடுவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட ஐந்து கியூப புலனாய்வு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டதை நினைவு கூருவ தற்காக லண்டனில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வெளியே கடந்த மாதம் நான்காம் திகதி இடம்பெற்ற விழிப்புக் கூட்டத்தில் அலெய்டாகலந்துகொண்டார். இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த ஐக்கிய இராச்சியத்தின் கியூபா ஒருமைப் பாட்டு இயக்கத்தின் (UK Cuba solidarity campaign) செயற்பாடுகளுக்கு உத வுகின்ற பணிகளிலும் சேகுவேராவின் இந்த டாக்டர் மகள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

சேகுவேராவின் மரணத்துக்குப் பிறகு 45 வருடங்கள் கழித்து அவரது மகள் உலகப்புகழ்பெற்ற தந்தையின் நிழலில் வளர்ந்த கதைகளைக் கூறியிருக்கிறார். சேகுவேரா மாத்திரமல்ல, அவரது கூர்ந்து நோக்கும் பார்வையும் கூட, இருபதாம் நூற்றாண்டின் இலச்சினைகளில் ஒன் றாகிவிட்டது. இந்த நூற்றாண்டின் ஆரம் பத்தில் காலமான கியூபா புகைப்படப் பிடிப்பாளரான அல்பேர்ட்டா கோர்டா 1960ஆம் ஆண்டில் பிடித்த படத்தில் காணப்படக்கூடியதாக இருக்கும் சேகு வேராவின் அந்தப்பார்வையை இந்த மகளின் கண்களிலும் காணக்கூடியதாக இருக்கிறது. பார்வை மாத்திரமல்ல, அவரின் நோக்கும் கூட தந்தையைப் போன்றே சமூக அநீதிக்கு எதிரான ஆழமான வெறுப்புணர்வைக் கொண்ட தாகவே காணப்படுகிறது. எல்லாவற் றுக்கும் மேலாக, தந்தையைப் பற்றி உலகுடன் பகிர்ந்து கொள்வதிலேயே டாக்டர் அலெய்டாவின் அக்கறை கூடு தலாக இருக்கிறது.

அல்பேர்ட்டாகோர்டாஎடுத்தசேகுவேரா வின் புகைப்படம் உலகில் மிகவும் கூடுதலான தடவைகள் மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கக்கூடியது என்பதில் சந்தேகமில்லை. அந்தப்படம் சுவரொட்டி களிலோ, கொடிகளிலோ, தபாலட்டை களிலோ, சுவரோவியங்களிலோ அல் லது ரி.சேர்ட்டுகளிலோ பயன்படுத்தப் படுவதைப்பற்றி சேகுவேராவின் குடும் பத்தினர் குறிப்பாக, இந்த மகள் கவலைப் படவில்லை. ஆனால், அவமரியாதைக் குரிய முறையில் இந்த உலகப்புகழ்மிக்க புரட்சிவாதியின் உருவம் பயன்படுத்தப் படுவதைத் தடுப்பதற்கு குடும்பத்தினர் முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள்.

உருவம் பயன்படுத்தப்படுவதையோ அல்லது அதன் மூலம் யாருமே சம்பாத் தியத்தைத் தேடிக்கொள்வதையோ கட்டுப்படுத்த நாம் விரும்பவில்லை. ஆனால், எவரினதும் சுயநல நோக்கங் களுக்காக அந்த உருவம் பயன்படுத்தப் படும்போது எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. எமது தந்தையார் எந்த இலட்சியங்களுக்காக வாழ்ந்தார், இறந்தார் என்பதை சில சந்தர்ப்பங்களில் மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால், சில சந்தர்ப்பங்களில் அதை உணராதவர்களாக மக்கள் நடந்து கொள்கிறார்கள். பெரும்பாலும் தந்தை யாரின் உருவம் ஒடுக்குமுறைக்கு எதிரான சின்னமாகவே பயன்படுத்தப்பட்டிருக் கிறது என்று நினைக்கிறேன் என்று டாக்டர் அலெய்டா கூறுகிறார்.

இரு துண்டுகளைக் கொண்ட பெண் களின் நீச்சல் உடைகளில் "சே"யின் படம் பொறிக்கப்படுவதைத் தடுக்க முடி யாமற் போயிருக்கலாம். அது வேறு விடயம். ஆனால், மது அருந்தாதவரான அவரின்படத்தை "வொட்கா" போத்தலில் எவ்வாறு பதிக்க முடியும்? அதைத் தடுத்து நிறுத்துவதில் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள கியூபா ஒருமைப்பாட்டு இயக்கத் தின் உதவியுடன் அவரது குடும்பம் வெற்றி கண்டிருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

கியூபாவின் புரட்சிக்கு தலைமை தாங்குவதில் முன்னின்று உதவியதன் மூலமாக அநியாயங்களுக்கு எதிரான கிளர்ச்சிகளின் திருவுருவாக மாறிய சே குவேராவின் மறைவின் 45ஆவது வருட நிறைவை நினைவு கூருகின்ற அதே வேளையில், கியூபாவின் பொருளா தாரத்தை, நெரித்துக் கொண்டிருக்கும் அரை நூற்றாண்டுகால அமெரிக்காவின் வர்த்தக, பயணத் தடைகளையும் இக்கட் டத்தில் நினைத்துப்பார்க்க வேண்டியிருக் கிறது. இரண்டாவது உலக மகா யுத்தத்து க்குப் பின்னரான கெடுபிடி யுத்தகால (cold war) முறுகல் நிலையின் தொடர்ச் சியை அமெரிக்கா உலகின் பல பிராந் தியங்களைப் பொறுத்தவரை கைவிட்ட போதிலும், கியூபாவைப் பொறுத்தவரை இன்றும்கூடமுனைப்புடன்முன்னெடுத்து வருவதைக் காணக்கூடியதாக இருக் கிறது. கியூபா அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களை அந்நாட்டு மக்கள் கேட்க வும் பார்க்கவும் கூடியதாக மேற்கொள் ளப்பட்டுவருகின்ற ஒளி, ஒலி பரப்பு களுக்காக அமெரிக்க நிருவாகம் கோடி க்கணக்கானடொலர்களைத்தொடர்ந்தும் செலவழித்துக் கொண்டிருக்கிறது. கியூபா



*1963இல் பிடல் காஸ்ட்ரோவுடனும் தந்தையுடனும் சிறுமியாக அலெய்டா*

விலிருந்து செல்லக்கூடிய குடியேற்ற வாசிகளுக்கு மாத்திரமே அமெரிக்காவில் தன்னிச்சையாகவே பிரஜாவுரிமை வழங்கப்பட்டுவருகிறது. கியூபர்களை அமெரிக்காவுக்கு வரவழைத்து அந்நாட்டு அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு எவ்வளவு தொகைப் பணமும் செலவழிப்பதைப்பற்றி வெள்ளைமாளிகைக்குக் கவலையில்லை.

ஆனாலும் கூட, அபிவிருத்தி குன்றிய இந்தக் கியூபா உலகிலேயே தரமான கல்வியையும்சுகாதாரப்பராமரிப்பையும் சகல பிரஜைகளுக்கும்வழங்கிக்கொண்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் அரசாங்கத்துக்கு எதிரான கொள்கையுடையவர்களுக்கும் அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து இன்னமும் கூட கியூபா அதன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. இன்றைய சர்வதேச சூழ்நிலையில் இது கசப்பானதொரு விவகாரமேயாகும்.

பெரும் எண்ணிக்கையிலான அதிருப்தியாளர்கள் சிறையில் இருந்து கடந்த வருடம் விடுதலை செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் கூட, அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் நிறுவப்பட்டிருக்கக்கூடிய உத்தியோக பூர்வ வழிமுறைகளுக்கு அப்பால்,அரச கொள்கைகள் விமர்சனம் செய்யப்படுவதை கியூப அரசாங்கம் இன்னமும் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அரசாங்க எதிர்ப்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு "பொது குழப்ப நிலை", "பயங்கரமானதன்மை", "ஆக்கிரமிப்பு' போன்றவற்றுக்கு எதிரான சட்டங்கள் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசியல் அல்லது மனித உரிமைகள் அமைப்புகள் சட்ட ரீதியான அந்தஸ்தைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த நிலைவரங்களைப் பற்றிப் பெரிதாக எதையுமே கூறுவதற்கு முன்வராத சேகுவேராவின் டாக்டர் மகள் "நான் அரசியல் சார்ந்தவள் அல்ல. ஆனால், அநீதிகளைப் பற்றி அக்கறை கொண்டவள்" என்று கூறியிருக்கிறார்.

பொலிவியாவின் தொலைதூர குக்கிராமம் ஒன்றில் அந்நாட்டு இராணுவ வீரர்களினாலும் அமெரிக்க சி.ஐ.ஏ. உளவுப் பிரிவினராலும் சேகுவேரா கொல்லப்பட்ட வேளையில், அலெய்டாவுக்கு ஏழு வயது. தனது தந்தையாரைப் பற்றி தெளிவற்ற நினைவுகளை மாத்திரமே அலெய்டா, கொண்டிருக்கிறார். மற்றவர்கள் சேகுவேராவைப்பற்றி நினைவுகளை மீட்கும் போது கேட்டறிந்து கொண்டதகவல்கள்மூலமாகவும்அவரது டயறியில் உள்ள குறிப்புகளின் மூலமாகவுமே அவரைப்பற்றி அலெய்டா பெரிதும் தெரிந்து கொண்டார். இவர்களில் "மாமா" என்று இவர் அழைக்கிற பிடல் காஸ்ட்ரோவும் ஒருவர்.

"பிடெல் எனக்கு அப்பாவைப்பற்றி நிறைய அழகான கதைகளைக் கூறியிருக்கிறார். ஆனால், அவரிடம் எதையுமே பெரிதாக நான் கேட்கமாட்டேன். ஏனென்



றால் "சே' என்ற நினைவுவந்ததும் பிடல் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுவிடுவார். உதாரணத்துக்கு ஒன்றைக் கூறுகிறேன். எனது அப்பாவின் கையெழுத்து பயங்கரமானது. அதனால், அப்பா அன்றாடம் தனது நிகழ்வுகளைப்பற்றிக்கூறும்போது அம்மாவே டயறியில் எழுதிக்கொள்வார். கையெழுத்துப் பிரதிகளை எடுத்துக் கொள்வதற்காக ராவுல் காஸ்ட்ரோ (தற்போதைய ஜனாதிபதியும் பிடலின் இளையசகோதரரும்) எங்களது வீட்டுக்கு ஒருநாள் வந்தார். ராவுலும் பிடலும் கூட டயறிகளை எழுதும்பழக்கமுடையவர்கள் என்பது அம்மாவுக்குத் தெரியும். அதனால், டயறிகளில் தகவல்கள் ஏதாவது வேறுபாடாக அமைந்தால் "சே"யின் டயறியில் உள்ளவற்றையே சரியானதாக எடுத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் தன்னை நியாயப்படுத்துவதற்கோ பாதுகாத்துக்கொள்வதற்கோ அவர் உயிருடனில்லை என்று அம்மா ராவுவிடம் கூறினார். அதைக் கேட்டதும் ராவுலுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டுவந்தது. தானும் பிடலும் இருக்கும் வரை சே உயிர் வாழ்வார் என்றும் "சே" எப்போதும் தங்களுடனேயே இருக்கிறார்என்று அவர் கூறினார். இதைக் கூறிவிட்டு ராவுல் அழுதார். அம்மாவும் சேர்ந்து அழுதார் என்று அலெய்டா கூறினார்.

> நானும் பிடலும் இருக்கும்வரை சே உயிர் வாழ்வார். அவர் எப்போதும் எங்களுடனேயே இருக்கிறார்

"சே பொலிவியாவில் மரணமடையவில்லை என்றால், ஆர்ஜன்டனோவில் மாற்றத்தை கொண்டு வருவதற்காகப் போராடி அந்த நாட்டில் ஏதாவது பகுதியில் மரணத்தைத் தழுவியிருப்பார். இன்று தென்னமெரிக்கா முழுவதுமே வித்தி

யாசமான ஒரு கண்டமாக இருந்திருக்கும். எனது தந்தையார் உயிருடன் இருந்திருந்தால் நாமெல்லோரும் சிறப்பான மனிதப்பிறவிகளாக இருந்திருப்போமென்று தாயார் எப்போதுமே கூறுவார்'' என்று டாக்டர் அலெய்டா தெரிவித்தார்.

ஆர்ஜன்டனோவில் மருத்துவ மாணவனாக இருந்த போது 1952ஆம் ஆண்டு சே மோட்டார் சைக்கிளில் லத்தீன் அமெரிக்காவைச் சுற்றிப்பார்த்தார். எங்குமே நிலவிய வறுமையைக் கண்டு அவர் சினமடைந்தார். அரசியல் சிந்தனாவாதியாக மாறிய சே பிறகு ஆயுதத்தைத் கையிலெடுத்தார். கியூபாவில் பட்டிஸ்டாவின் ஆட்சியைத் தூக்கியெறிந்த புரட்சியில் இணைந்து கொண்டார்.

கியூபாவின்தனவந்தர்களும்மத்தியதர வர்க்கத்தவர்களும் அமெரிக்காவுக்கு அப்போது தப்பியோடிக்கொண்டிருந்ததையடுத்து இரு நாடுகளுக்குமிடையே பெரும் பிளவு ஏற்பட்டது. அமெரிக்காவில் அடுத்தடுத்து பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் இந்தப் பிளவைத் தொடர்ந்து அகலமாக்கிக்கொண்டேவந்தனர். கியூபா விவகாரத்தை புதிய அணுகுமுறையுடன் கையாளப்போவதாக பராக் ஒபாமா அளித்த உறுதிமொழியும் கூட மாற்றத்தைக் கொண்டுவரவில்லை. "நாம் பெரும் நம்பிக்கைகளைக் கொண்டிருந்தோம். ஆனால், ஒபாமாவில் நாம் ஏமாற்றத்தையே கண்டோம். நிலைவரங்கள் மேலும் மோசமாகியிருக்கின்றன என்று கூடக் கூறலாம்'' என்று சே யின் மகள் கவலை வெளியிட்டார்.

லத்தீன் அமெரிக்காவில் தனவந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையேயான பிளவு மேலும் அகலமாகிக் கொண்டிருக்கும் நிலையில், புரட்சி உள்ளுக்குள் குமுறத் தொடங்கியிருக்கிறது. லத்தீன் அமெரிக்காவின் வறுமை நிலைக்கு அமெரிக்கா தலைமையிலான கைத்தொழில்மயமாக்கலையே சே குற்றஞ்சாட்டினார். அதே குற்றச்சாட்டையே இன்று மகளும் முன்வைக்கிறார்.லத்தீன் அமெரிக்காவில் முன்னெப்போதையும் விட பொருளாதார நெருக்கடி தற்போது படுபயங்கரமானதாக இருக்கிறது. அது எண்ணெயைப் பற்றிய பிரச்சினை மாத்திரமல்ல, அமெரிக்காவுக்கு தண்ணீரும் கூடத்தேவைப்படுகிறது. இரும்பை அகழ்ந்தெடுப்பதற்காக பிரேசில் மலைக் காடுகளை நிர்மூலஞ்செய்து கொண்டிருக்கிறது. தேவையற்ற கழிவுப் பொருட்கள் கொட்டப்படுகின்ற இடமாக மெக்சிக்கோ மாறியிருக்கிறது. இப்போது நிலமும் கூட நிர்மூலம் செய்யப்படுகின்றது என்றுடாக்டர்அலெய்டா கூறியிருக்கிறார்.

சேயின் புரட்சியின் கொடூரத்துவத்தை ஒளிக்கும் வகையிலான கவிதைகளை அவர் எழுதியிருப்பதாகவும் அவரை கண்டன விமர்சனம் செய்பவர்கள் கூறுகிறார்கள். கொலைகளைப்பற்றி குவேராவுக்கு எந்த மனவருத்தமும் இல்லை. அது ஒரு புரட்சி. உண்மையிலேயே, இரத்தம் சிந்தாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் இரத்தம் சிந்துவது புரட்சியின் இயல்பு. உண்மையான புரட்சியொன்றிலே நாம் விரும்புவதை பலாத்காரமாக, வன்முறையூடாகவே பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் விரும்புவதை கொடுக்க விரும்பாத எதிரியுடன் எப்படி நடந்து கொள்வது? அத்தகைய எதிரியிடமிருந்து எமக்குரியதைப் பெறுவதில் உள்ள ஆபத்தை எனது தந்தையார் நன்கு தெரிந்தே இருந்தார். அவர் உயிரையே கொடுத்தார் என்று கூறும் மகள், தந்தை இல்லாமல் வளர்ந்தது தனக்கு பெரிய ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது என்கிறார்.

ஆனால், தந்தையாருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தால் நன்றாக இருந்திருக்குமென்று கூறும் மகள் 6 வயதாக இருந்தபோது இடம்பெற்ற சம்பவமொன்றை நினைவு கூர்ந்தார்.

"எனக்கு அப்போது 6 வயது. தந்தையாரிடமிருந்து எனக்கு கடிதமொன்று வந்தது. அம்மாவுக்கு வீட்டு வேலைகளில் உதவியாக இருக்கவேண்டுமென்றும் நல்ல பிள்ளையாக நடக்கவேண்டுமென்றும் எனக்கு கடிதத்தில் அவர் ஆலோசனை கூறியிருந்தார். எனது ஒரு சகோதரனுக்கு எழுதிய கடிதத்தில் அவர் அவனை சந்திரனுக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறியிருந்த அதேவேளை, இன்னொரு சகோதரனுக்கு ஏகாதிபத்தியத்துக்கு எதிராகச் சேர்ந்துபோராடப் போவோம் என்று அழைப்பு விடுத்திருந்தார். எனக்கு இது ஆத்திரத்தை ஏற்படுத்தியது. நானும் சந்திரனுக்குப் போகவிரும்பினேன். ஏன் நானும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடப் போகக் கூடாது.''


அல்பேர்ட்டோ கோர்டா

தந்தையார் எத்தகைய மனிதராக வாழ்ந்தார், இருந்தார் என்பதற்காகவே அவரை நேசியுங்கள் என்றே தங்களிடம் தாயார் எப்போதும் கூறுவாராம். அவர் மனித குலத்துக்குச் செய்ய வேண்டியதையே செய்தார். தனது இலட்சியங்களைப் பாதுகாப்பதிலேயே அவர் உயிரைக் கொடுத்தார். தான் நம்பிக்கை வைத்திருந்த கொள்கைக்கும் இலட்சியத்துக்கும் உண்மையானவராக இறுதி நிமிடம் வரை தந்தையார் இருந்ததை நினைத்து இந்த மகள் பெருமைப் படுகிறார்.

இந்த டாக்டர் மகள் சேகுவேராவின் இரண்டாவது மனைவி அலெய்டாவின் நான்கு பிள்ளைகளில் மூத்தவர். சேயின் பிள்ளைகளாக வளருகின்ற பாக்கியம் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்பது இவரது பெரிய கவலை. கியூபாதொலைக் காட்சியில் 1996 ஆம் ஆண்டு முதன் முதலாக தோன்றி உரையாற்றும் வரை இவரை சேயின் மகள் என்று நண்பர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ●




# ஒரு காதல் கட்டுக்கதை

மரியானா
பாபர்



பெனாசிர் பூட்டோ முதற் தடவையாக பாகிஸ்தானின் பிரதமராக பதவி வகித்தபோது (1988-1990) பாராளுமன்றத்தில் தனது இருக்கையில் இருந்து எழுந்து செல்கையில் முஸ்லிம் லீக் எம்.பி.யான. ஷேய்க் ரஷீட் அஹமட் “சபாநாயகர் அவர்களே இந்த மஞ்சள் டாக்ஸி சபையில் இருந்து வெளியேறுவதைத் தடுத்து நிறுத்துங்கள்” என்று சத்தமிட்டார். மஞ்சள் நிற சல்வார் காமிசையும் வெள்ளை நிறதுப்பட்டாவையும் (முக்காடு) அந்தக் காலகட்டத்தில் பெனாசிர் பூட்டோ அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் அந்த நிறங்களிலான ஆடை அவரின் அடையாளம் போன்றே ஆகிவிட்டிருந்தது. அதனால் தான் மஞ்சள் டாக்ஸி என்று அவரை அந்த எம்.பி.கிண்டல் செய்தார். ஆனால், அதற்குப் பதிலளிப்பதைப் பற்றி பொருட்படுத்தாமல் பெனாசிர் பூட்டோ சபையை விட்டு வெளியே சென்றார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தொண்டர்கள் தங்கள் தலைவியை எவராவது அவதூறு செய்தால் கொதித்தெழுவார்கள். மிகுந்த மரியாதையுடன் பெனாசிர் பூட்டோவை “பிபி” என்று அழைத்த அவர்கள் அவர் நடந்து சென்ற பாதையில் நிலத்தை வழிபட்டார்கள். ரஷீட் அஹமட் அனுமதியில்லாத ஆயுதங்களை வைத்திருந்தமைக்காக பிறகு ஒருதடவைசிறைக்குச்சென்றவர்என்பதுவேறுகதை. பாகிஸ்தான் மக்கள் கட்சியின் வெறித்தனமான ஆதரவாளர்களிடமிருந்து அவர் ஏதோ தப்பிவிட்டார்.

முன்னதாக தேர்தல் பிரசாரங்களின் போது பெனாசிருக்கும் தாயார் நுஸ்ரத்துக்கும் எதிராக முஸ்லிம் லீக் “கேவலமான உத்திகளை” எல்லாம் கையாண்டது. அவர்கள் இருவருடைய படங்களும் மிகவும் அருவருப்பான முறையில் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன. இத்தகைய அநாகரிகமான பிரசாரங்களைத் திட்டமிட்டு மேற்கொண்டவர் அமெரிக்காவுக்கான முன்னாள் பாகிஸ்தான் தூதுவர் ஹுசய்ன் ஹக்கானி.

பாகிஸ்தானின் தற்போதைய வெளியுறவு அமைச்சர் ஹினா ரபானி காரையும் பாகிஸ்தான்

மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரியையும் அவதூறு செய்வதற்கு கேவலமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவிடயத்தில் பொறுப்பற்ற சமூக ஊடகங்களே (Social Media) திட்டமிட்ட முறையில் பிரசாரங்களை மேற்கொள்கின்றன போலத் தெரிகிறது. பரப்பப்படுகின்ற அருவருப்பான கதைகளுக்கு முற்றிலும் மாறான செய்தியையே ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஜனாதிபதி அசீவ் அலி சர்தாரியும் வெளியுறவு அமைச்சர் காரும் ஆறுதலாக இருந்து உரையாடிக் கொண்டிருக்கும் காட்சி கூறுகிறது.

உண்மையான பிரச்சினை பூட்டோக்களைப் பற்றியதோ அல்லது கார்களைப் பற்றியதோ அல்ல, பாகிஸ்தானில் அழகிய இளம் பெண் அரசியல்வாதியாக இருந்தால், அதுவும் கவனத்தை ஈர்க்கக் கூடிய ஆளுமையையும் கொண்டிருந்தால் அவர் எப்போதுமே ''நல்ல மனமில்லாதவர்களின்'' சுலபமான இலக்காகி விடுவது வழமையாகிவிட்டது. அத்தகைய இளம் அழகிய அரசியல்வாதிகளுக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்காக கேவலமான உத்திகள் கையாளப்படும். வக்கிரத்தனமான வீண் பேச்சுகளை அவதூறுகளாக மாற்றி இணையத்தளங்களில் வலம் வரச்செய்வதில் சமூக ஊடகங்கள் பெரும் உதவி செய்துகொண்டிருக்கின்றன. இதுவிடயத்தில் திரைப்பட நடிகர், நடிகைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையே வேறுபாடு எதுவும் பார்க்கப்படுவதில்லை. இவர்களைப் பற்றிய ''கதைகள்'' சர்வதேச ரீதியில் நன்றாக விலை போகின்றன. ''அழகிய இளம் பெண் பாகிஸ்தானிய அரசியல்வாதிகளைப்'' பற்றிய தகவல்களை மாத்திரம் வெளியிடுவதற்கென்றே அர்ப்பணிக்கப்பட்ட சில இணையத்தளங்கள் கூட இருக்கின்றன.


பாகிஸ்தானில் கவர்ச்சியான இளம் பெண் அரசியல்வாதிகள் பல வருடங்களாக பெரும் தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். கடந்தகாலத்தில் பெனாசிர் பூட்டோ, இன்று வெளியுறவு அமைச்சர் கார் என்று மாத்திரமல்ல, தூதுவர் ஷெரி ரஹ்மான், பாராளுமன்ற உறுப்பினர் காஷ்மலா தாபீக், பாராளுமன்ற சபாநாயகர் பெஹ்மெடா மிர்சா மற்றும் பல பெண் அரசியல் முக்கியஸ்தர்களுக்கு எதிராக தேவையற்ற வம்புக் கதைகள் கட்டிவிடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பெண்கள் சகலருமே வதந்திகளை அலட்சியம் செய்து தங்கள் துறைகளில் வெற்றிகரமானவர்களாக தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையிலேயே ஹினா ரபானி கார் முதற்தடவையாக பாராளுமன்றத்துக்கு வந்தபோது பெண் உறுப்பினர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட விசேட பிரிவில் (சனானா டபா என்று உருதுமொழியில் கூறப்படுகிறது) உள்ள இருக்கையில் அமருவதற்கு மறுத்துவிட்டார். ''நியூஸ் லைன்' செய்தியாளர் காரைப் பார்த்து ''பெண்களின் உரிமைகளுக்காக நீங்கள் என்ன செய்வீர்கள்' என்று கேட்டபோது முன் அனுபவம் இல்லாத அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

ஒரு பொதுவான தொகுதியில் இருந்தே நான் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு எனது தந்தை வழி வகுத்தார். எமது நாட்டிலே, ஆண்களுக்கும் பெண்களுக்கும் (தீர்வு காணப்பட வேண்டிய) பல பிரச்சினைகள் இருக்கின்றன. அடிப்படை உரிமைகள் என்று கருதப்படக்கூடிய - அதாவது தூய்மையான குடிநீரைப் பெறுவதற்கான உரிமை, விவசாய நிலங்களுக்குப் பாய்ச்சக்கூடிய நீரைப் போதுமானளவில் பெறுவதற்கான உரிமை, அடிப்படை சுகாதார மற்றும் சௌக்கிய வசதிகளைப் பெறுவதற்கான உரிமை, கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை, மின்சார மற்றும் வீதிவசதிகளைப் பெறுவதற்கான உரிமை ஆகியவை ஆண்களுக்குமில்லை, பெண்களுக்குமில்லை. இந்த உரிமைகளை அவர்கள் பெறுவதற்கு முதலில் உதவுவதற்கு நாம் முயற்சிப் போம். அதற்குப் பிறகு ''பெண்களின் உரிமைகள்'', ''ஆண்களின் உரிமைகள் பற்றிப் பேசலாம்''- இதுவே ஹினா ரபானி கார் அளித்த பதிலாகும்.

இந்தப் பிராந்தியத்திலே பெண் தலைவர்கள் மீது நம்பிக்கையை வைத்திருக்கும் வாக்காளர்களில் பெரும்பான்மையானவர்கள் படிப்பறிவில்லாதவர்கள். ஆனால் அவர்கள் ஒருபோதுமே அந்தப் பெண் தலைவர்களுக்கு எதிராக அருவருப்பான வம்புக்கதைகளைக் கட்டிவிடுகின்ற அளவுக்கோ அவதூறுகளைப் பரப்புகின்ற அளவுக்கோ தங்களை தரந் தாழ்த்திக் கொண்டதில்லை. அத்தகைய வதந்திகளையோ அவதூறுகளையே அறிவதில் அவர்கள் நாட்டமும் காட்டியதில்லை.

''இன்றைய நவீன யுகத்திலே அதுவும் குறிப்பாக உயர்தொழில்நுட்ப சமூக ஊடகங்கள் செல்வாக்குச் செலுத்துகின்ற காலகட்டத்திலே அரசியல்துறையில் என்றாலும் சரி வேறு எந்தத்துறையில் என்றாலும் சரி பிரபல்யமாக இருக்கின்ற பெண்களை அவதூறு செய்யும் காரியங்களுக்கு படித்தவர்களும் லிபரல்கள் என்று சொல்லப்படுகின்றவர்களும் பெருமளவுக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். இத்தகைய சப்புச் சவறுக் கதைகளை பாகிஸ்தானில் சாதாரண கட்சித் தொண்டர்கள் பேசுவதில்லை. பெனாசிர் பூட்டோவாக இருந்தால் என்ன, இந்திராகாந்தியாக இருந்தால் என்ன, அல்லது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவாக இருந்தால் என்ன அவர்களின் ஆதரவாளர்களில் பெரும்பாலானவர்கள் படிப்பறி



வற்றவர்களேயாவர். ஆனால், இன்று படித்தவர்கள் என்று சொல்லப்படுகின்ற வர்க்கத்தவரை விடவும் கூடுதலான அளவிற்கு இவர்கள் பண்பானவர்களாக இருக்கிறார்கள்'' என்று பத்தி எழுத்தாளரும் தொலைக்காட்சி நிகழ்ச்சி நெறியாள்கையாளருமான நுஸ்ரத் யாவித் கூறுகிறார்.

அண்மையில் இன்னொரு இளம் அரசியல்வாதியான இமான் ஹசீர் மசாரி (இவர் நன்கு பிரபல்யமான டாக்டர் ஷிரீன் மசாரியின் புதல்வி) இம்ரான் கானின் தெஹ்பீக் ஈ-இன்சாவ் கட்சியை விட்டு விலகினார். சமூக ஊடகங்கள் இவரைப் பற்றி தொடர்ச்சியாக அவதூறுகள் அனுப்பப்பட்டு வந்ததே அவரின் விலகலுக்கான காரணம். அவருக்கு வயது 20 தான்.

''கடந்த 6 மாதங்களாக எனக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அவதூறுகளையும் எனது நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்குடனான வக்கிர செயற்பாடுகளையும் பெரும் மன வேதனை

யுடன் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது. என்னைத் தாங்குகின்ற ஒரு கட்சியையும் விட எனக்குச் சுயமரியாதையும் இலட்சியமுமே கூடுதல் முக்கியம் வாய்ந்தது. என்னைவிபசாரிஎன்றுஅழைப்பதை என்னால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். அது மாத்திரமல்ல காலஞ்சென்ற எனது பாட்டனாருக்கு எதிராக கட்சித் தொண்டர்கள் செய்கின்ற நிந்தனைகளையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் விரும்பிய ஆடையை அணிகிறேன். எனது தனிப்பட்ட வாழ்வில் நான் விரும்பியவாறு செயற்படுகிறேன். இது என்னுடன் மாத்திரம் சம்பந்தப்பட்ட விவகாரம். அதைப்பற்றி கருத்துச் சொல்

> ஹினா ரபானி கார் பாகிஸ்தானின் முதல் பெண் வெளியுறவு அமைச்சர் மாத்திரமல்ல, வெற்றிகரமாக செயற்படுகின்ற ஒருவருமாவார். அவர் தனது பொறுப்பை கையாளுகின்ற முறையையும் இராஜதந்திர விவேகத்தையும் பல நாடுகள் பாராட்டி இருக்கின்றன. ஆனால் பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சராக இருந்த எவருமே அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றம் வந்ததென்பது அபூர்வம்

வதற்கு வேறு எவருக்கும் உரிமை கிடையாது. எனது தனிப்பட்ட வாழ்வை நான் தெரிந்தெடுத்துக்கொண்ட விதத்தில் வாழ்வதற்காக எவரிடமும் ஒருபோதுமே மன்னிப்புக் கேட்கப்போவதில்லை'' என்று ஹசிர் மசாரி தனது இணையத்தளவலைப்பூக்களில் கூறியிருக்கிறார்.

வெளியுறவு அமைச்சருக்கும் பிலாவல் பூட்டோவுக்குமிடையே காதல் அரும்பி இருப்பதாக முதலில் ''கதை'' கட்டிவிட்டது பிரபல்யமில்லாத பங்களாதேஷ் சஞ்சிகை ஒன்றாகும். பத்திரிகைத்துறைக்குப் பொருத்தமில்லாத வகையில் வீண் வதந்திக்கு சோடனை செய்து இந்த சஞ்சிகை இவர்கள் இருவரையும் பற்றி கிசுகிசு வெளியிட்டது தான் என்று கூறவேண்டும். உண்மை நிலை என்னவென்று அறிவதற்கு அக்கறை காட்டப்படவே இல்லை. அந்தச் சஞ்சிகை பெருமளவுக்கு விலைப்பட்டிருக்கலாம். ஆனால் அதன் பிரசுர கர்த்தாக்கள் பத்திரிகைத்துறையில் சகல கோட்பாடுகளையும் துவம்சம் செய்திருக்கிறார்கள்.

எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே இந்தியச் சஞ்சிகைகள், பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளும் பங்களாதேஷ் சஞ்சிகையின் கதையைப் பெரிதாக தூக்கிப் பிடித்து பரப்பத் தொடங்கின. ஹினா ரபானி காரின் கவர்ச்சியான தோற்றத்தின் மீது இந்திய ஊடகங்கள் ஏற்கனவே கொண்டிருக்கும் மருட்சி எல்லோருக்கும் தெரிந்ததே. 2011 ஜூலையில் கார் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்ட போது அவரின் தோற்றம் பற்றியும் ஆடை அணிகலன்களைப் பற்றியும் இந்திய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் பாகிஸ்தானில் பிலாவல் – கார் காதல் கதை சுத்த அபத்தமானதென்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது. எந்தவொரு செய்திப் பத்திரிகையோ அல்லது தொலைக்காட்சி அலைவரிசையோ அந்த விடயத்தை தொடவேயில்லை. அந்தக்கதை வெறும் குப்பை என்பதை பாகிஸ்தான் ஊடகங்கள் அறிந்திருந்தன. அதனால் குப்பையை எவ்வாறு கையாள வேண்டுமோ அவ்வாறே அவை கையாண்டன. பாகிஸ்தான் அரசாங்கம் இதுவரை எந்தக் கருத்தையும் கூறி அந்தக் கதைக்கு வீணான முக்கியத்துவத்தை கொடுப்பதற்கு விரும்பவில்லை. கார் பாகிஸ்தானின் முதல் பெண் வெளியுறவு அமைச்சர் மாத்திரம் அல்ல, வெற்றிகரமாகச் செயற்படுகின்ற ஒருவருமாவார். அவர் தனது பொறுப்பைக் கையாளுகின்ற முறையையும் ராஜதந்திர விவேகத்தையும் பல்வேறு நாடுகள் வெகுவாகப் பாராட்டி இருக்கின்றன.

பாகிஸ்தானைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத் தொடரில் கார் கலந்துகொண்ட வேளையிலேயே இந்த ஊகங்கள் எல்லாம் வெளியாக ஆரம்பித்தன. அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி சர்தாரி நியூயோர்க்கில் இருந்த வேளையிலேயே அவர் மீதான கவன ஈர்ப்பைத் திசைதிருப்பும் நோக்குடனேயே இந்தக் காதல் கதை கட்டிவிடப்பட்டிருக்கிறது என்று நம்ப இடம் இருக்கிறது. பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் நெருக்கடியானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கட்டத்தில் இருக்கின்ற நிலையிலேயே வெளியுறவு அமைச்சர் அமெரிக்கா சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் தான் கார் பேர்லினுக்கு மிகவும் வெற்றிகரமான விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்பியிருந்தார். அத்துடன் கடந்தவார ஆரம்பத்தில் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின் போது இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா காரை மிகவும் பாராட்டியிருந்தார்.

பொதுத்தேர்தல்கள் வரவிருக்கும் நிலையில் காதல் கதைபோன்ற அவதூறுகள் காரின் செல்வாக்கிற்கு அவரது பழமைவாத சிந்தனைகொண்ட வாக்காளர்கள் மத்தியில் எந்தளவு தூரத்திற்கு சேதத்தை ஏற்படுத்தும் என்பதை அவரது அரசியல் எதிரிகள் நன்கறிவார்கள். பாகிஸ்தானில் வெளியுறவு அமைச்சர்களாக இருந்த எவருமே அடுத்த பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று மீண்டும் பாராளுமன்றத்திற்கு வந்ததென்பது அபூர்வமானதாகும். அவர்கள் தங்களது பதவிக்காலத்தில் தொடர்ச்சியாக வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொண்டதால் தங்களது தொகுதிகளில் வாக்காளர்களின் பிரச்சினைகளுடன் தொடர்பு அறுந்தவர்களாகப் போயிருந்தனர். தற்போதைய வெளியுறவு அமைச்சருக்கு அனுபவமிக்க ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அவரது தந்தையார் ஒரு பெரிய அனுகூலமாக விளங்கினார். காரின் தொகுதியில் மக்கள் மத்தியிலான பணிகளில் பெருமளவானவற்றை தந்தையாரே செய்துகொண்டிருந்தார்.

இஸ்லாமாபாத்தில் இந்திய செய்தி நிறுவனமான பி.ரி.ஐ.யின் செய்தியாளராக 5 வருடங்களாகப் பணியாற்றிய ரெசூல் ஹசன் லஸ்கார் சமூக ஊடகங்களில் வெளியான கார் – பிலாவல் காதல் கதை குறித்து தனது பிரதிபலிப்பை வெளியிடுகையில் தனக்கு இதில் எந்த அக்கறையும் இல்லை என்றும் எவருமே இது பற்றிய செய்தியை தனக்கு டுவிற்றரிலோ ஃபேஸ்புக்கிலோ ஈமெயிலிலோ அனுப்ப வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். இத்தகைய அபத்தங்களைப் பற்றிப்பேசி நேரத்தை வீணடிப்பதைப் போன்ற முட்டாள்தனம் வேறெதுவும் இல்லை என்பது அவரது அபிப்பிராயம். ஏனைய இந்திய ஊடகங்களும் அவரை பின்பற்றினால் என்ன?

***அவுட்லுக் இந்தியா***




# கோபாலன் கஸ்தூரி

## (1924-2012)

பத்திரிகைத்துறையில் தனிச்சிறப்பு வாய்ந்தவராக விளங்கிய ஜி. கஸ்தூரி சகல பத்திரிகையாளர்களுக்குமே முன் மாதிரியானவர். அவர் வகுத்த நியமங்கள் எவரினாலுமே செயலில் விஞ்ச முடியாத அளவுக்கு உயர்ந்தவையாகும். 2004 -2005 காலகட்டத்தில் சென்னை உயர் நீதிமன்ற பிரதம நிதியரசராக நான் பதவி வகித்த போது கஸ்தூரி அவர்களைச் சந்தித்துப் பேசக்கூடிய வரப்பிரசாதம் எனக்குக் கிடைத்தது. தனது சிறிய தந்தையாரான கஸ்தூரி சிறினிவாசன் ஜவஹர்லால் நேருவின் அமைச்சரவையில் உள்துறை, சட்டம், மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த எனது பாட்டனார் கைலாஷ்நாத் கட்ஜுவின் நெருங்கிய நண்பர் என்று கஸ்தூரி அவர்கள் என்னிடம் கூறியிருந்தார். பாட்டனார் மேற்குவங்காள மாநில ஆளுநராகவும் மத்திய பிரதேச மாநில முதலமைச்சராகவும் கூட பதவி வகித்தவர்.

பிரதம நீதியரசராக நான் ஆற்றிய பணிகளை கஸ்தூரி அவர்கள் பெரிதும் மதித்துப் பாராட்டி இருந்தார். அத்தகைய தொரு மேன்மைவாய்ந்த, பெருமதிப்பிற்குரிய மூத்த பத்திரிகையாளரிடமிருந்து பாராட்டைப் பெறுவதென்பது எனக்கு மிகப்பெரிய உற்சாகத்தைக் கொடுத்தது. இந்து பத்திரிகையின் ஆசிரியராக கஸ்தூரி அவர்கள் 1965ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அந்த வேளையில் இந்து வட இந்தியாவில் சொற்ப வாசகர்களையே கொண்டிருந்தது. பெரும்பாலும் தென்னிந்தியாவிற்குள் மட்டுப்படுத்தப்பட்டதொரு ஆங்கிலப் பத்திரிகையாகவே அது விளங்கியது. ஆசிரியர் பதவியில் இருந்து அவர் 1991 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற வேளையில் அவரது பத்திரிகை வட இந்தியாவிலும் மேற்கு மற்றும் கிழக்கு இந்தியாவிலும் பெரும் அளவில் வாசகர்களைக் கொண்ட ஒரு தேசியப் பத்திரிகையாக உண்மையில் வளர்ந்து விட்டது. அதற்கான பெருமை அவருக்கும் அவர் உருவாக்கிய குழுவினருக்குமே உரியதாகும். இந்துவில் கஸ்தூரி அவர்கள் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி இந்தியாவில் பெரிதும் மதிக்கப்படுகின்ற பத்திரிகைகளில் ஒன்றாக அதை மாற்றியமைத்தார்.

நான் இதைக் கூறும்போது பக்கச் சார்பானதாகத் தொனிக்கக்கூடும். ஆனால், வட இந்தியாவில் உள்ள பலர் ஏனைய சகல பத்திரிகைகளை விட இந்துவை விரும்புகிறார்கள். இதற்குக் காரணம் இந்து அதன் வாசகர்களுக்கு அகவுணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிகவும் தரமானதும் நடுநிலையானதுமான செய்திகளை வழங்குகிறது. நாடு எதிர்நோக்குகின்ற மெய்யான பிரச்சினைகளில் பொறுப்புணர்வுடன் இந்து கவனம் செலுத்துகிறது. வறுமை, வேலை இல்லாத் திண்டாட்டம், விலைவாசி அதிகரிப்பு,சுகாதார பராமரிப்பு, கல்வி மற்றும் அவை போன்ற முக்கியமான பிரச்சினைகளை இது விடயத்தில் குறிப்பிட முடியும். விதார்ப்பாவிலும் ஏனைய பகுதிகளிலும் விவசாயிகளின் தற்கொலைகளைப் பற்றிய செய்திகளுக்கு இந்து முக்கியத்துவம் கொடுத்து அந்த அனர்த்தத்தை நாட்டிற்கும் உலகிற்கும் வெளிச்சம் போட்டு இந்து காட்டியது. இவ்வாறாக இந்து செய்திருக்காவிட்டால் பெரும்பாலான மக்களுக்குஇந்தியாவின் விவசாயிகளின் தற்கொலை அனர்த்தம் தெரியவந்திருக்காது. இந்தியாவில் உள்ள சிறுவர்கள் மத்தியிலான ஊட்டச்சத்துக் குறைபாட்டை (47 சதவீதம்) அம்பலப்படுத்துவதில்

இந்து செய்துவந்திருக்கும் பணி அதன் பொறுப்புணர்ச்சியுடனான பத்திரிகைத் துறைச் சேவைக்கு இன்னொரு உதார ணமாகும்.

இந்தியா போன்ற வறியநாடொன்றிலே, பத்திரிகைகள் சினிமா நட்சத்திரங்களினதும் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களினதும் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும் பெண்களின் அரை நிர்வாண படங்களை காண்பிப்பதையும் மற்றும் அவைபோன்ற பொருத்தமில்லாத - அற்பத்தனமான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும் விடுத்து நாட்டின் சரித்திரத்தில் தற்போது இடம்பெறுகின்ற மாறுதல் காலகட்டத்தின் ஊடாகச் செல்கின்ற போது மக்கள் எதிர் நோக்குகின்ற சமூக - பொருளாதார இடர் பாடுகளைப் பற்றி சமூகத்திற்கு அறி விக்கும் கடமையைக் கொண்டிருக்கின்றன. இந்தக் கடமையை எத்தனை செய்திப் பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகள் செய்து கொண்டிருக்கின்றன?

> மக்களின் கீழ்த்தரமான ரசனைகளுக்கு இரைதேடிக் கொடுத்து துணை செய்வதில் நம்பிக்கைகொண்ட பத்திரிகையாளர் அல்ல அவர். பத்திரிகைகளின் கடமை மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய கீழ்த்தர அறிவு மட்டத்திற்கு தாழ்ந்து செல்லாமல், அவர்களின் அறிவு மட்டத்தை உயர்த்துவதும் தவறான நம்பிக்கைகளையும் பின்தங்கிய வழக்கங்களையும் அம்பலப்படுத்தி தாக்குவதே பத்திரிகைகளின் கடமையாக இருக்க வேண்டும் என்று நம்பியவர்தான் கஸ்தூரி


உண்மையான தகவல்கள் எவ்வளவு தான் அருவருப்பை அல்லது சோர்வைத் தருபவையாக இருந்தாலும், அவற்றை மக்களின் கவனத்திற்கு கொண்டுவருவதில் பத்திரிகைகள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டுமென்று கஸ்தூரி அவர்கள் எப்போதுமே வலியுறுத்துவார். மக்களின் கீழ்த்தரமான ரசனைகளுக்கு இரைதேடிக் கொடுத்து துணை செய்வதில் நம்பிக்கை கொண்ட பத்திரிகையாளர் அல்ல அவர். பத்திரிகைகளின்கடமைமக்கள்மத்தியில் இருக்கக்கூடிய கீழ்த்தர அறிவு மட்டத்திற்கு தாழ்ந்து செல்லாமல், அவர்களின் அறிவு மட்டத்தை உயர்த்துவதும் சாதி வாதம், இனவாதம், மற்றும் மூட நம்பிக்கைகள் போன்ற கெடுதியான சமூக நம்பிக்கைகளையும் நடைமுறை களையும்பின்தங்கிய வழக்கங்களையும் அம்பலப்படுத்தி தாக்குவதே பத்திரி கைகளின் கடமையாக இருக்க வேண்டும் என்று, (மகத்தான ஐரோப்பிய எழுத் தாளர்களான வோல்டயர், ரூசோ மற்றும் தோமஸ்பெயின்ஆகியோரைப்போன்று) நம்பியவர் தான் கஸ்தூரி அவர்கள். இந்திய மக்கள் மத்தியில் இந்து பத்திரிகை இன்று மிகவும் உயர்ந்த மதிப்பை பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் அவர்.

பத்திரிகைத்துறையில் தனிச்சிறப்பு வாய்ந்த இப்பெருமகனின் மறைவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.



**இந்தியாவின் பிரபல்யமான ஆங்கில நாளேடுகளில் ஒன்றான இந்துவின் பிரதம ஆசிரியராக 1965 -1991 கால கட்டத்தில் பணியாற்றிய கோபாலன் கஸ்தூரி சென்னையில் கடந்த மாதம் 21ஆம் திகதி 87 வயதில் காலமானார். இதைமுன்னிட்டுஇந்தியப்பத்திரிகைப் பேரவைத் தலைவரான நீதியரசர் மார்க்கண்டே கட்ஜூ இந்துவில் எழுதிய அஞ்சலிக் குறிப்பு இங்கு மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.**

## எரிக் ஹொப்ஸ்போம்
### (1917-2012)



இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சரித்திரவியலாளர்களில் ஒருவரும் மார்க்சிய அறிஞருமான எரிக் ஹொப்ஸ்போம் நீண்டகால சுகவீனத்துக்குப் பிறகு இம்மாதம் முதலாம் திகதி காலை லண்டனில் றோயல் ஃபிறீ வைத்தியசாலையில் தனது 95ஆவது வயதில் காலமானார்.

யூத தம்பதியரான லியோபோல்ட் பேர்சி ஒப்ஸ்ற் போமிற்கும் நெலி குருனிற்கும் மகனாக எகிப்தின்அலெக்சாண்ட்ராநகரில் 1917 ஆம் ஆண்டு பிறந்த எரிக் ஹொப்ஸ்போம் ஆஸ்திரியாவின் வியன்னா நகரிலும் ஜேர்மனியின் பேர்லின் நகரிலுமே வளர்ந்தார்.

சரித்திரவியலாளர் என்ற வகையில் அவரை உலகில் ஒரு சர்ச்சைக்குரிய பிர முகராக்கியது அவர் தன் வாழ்நாள் பூராவும் மார்க்சியத் தத்துவத்தில் கொண்டிருந்த பற்றுறுதியேயாகும். 1936ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்துகொண்ட எரிக் ஹொப்ஸ்போம் ஒருபோதுமே அதைவிட்டு விலகவில்லை. அந்தக் கம்யூனிஸ்ட்கட்சி 1991ஆம் ஆண்டில் கலைக்கப்படுவதற்கு சிலகாலம் முன்னதாக தனது உறுப்புரிமை இயல்பாகவே காலாவதியாவதற்கு அவர்விட்டுவிட்டார். இதைத் தனது சுயசரிதையான "இன்ர றெஸ்டிங் ரைம்ஸ்" நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

300க்கும் அதிகமான நூல்களை எழுதியிருக்கும் அவரின் "த ஏஜ் ஒஃப் றெவலூசன்", "த ஏஜ் ஒஃப் கபிட்டல் மற்றும் "த ஏஜ் ஒஃப் எம்பயர்" ஆகிய மூன்று தொகுதிகளும் மிகவும் பிரபல்யமான படைப்புகளாகும்.

தெற்காசியாவைப் பொறுத்தவரை இந்திய இடதுசாரி இயக்கத்தின் மீது மிகவும் ஆழமான செல்வாக்கைக் கொண்டிருந்த ஹொப்ஸ்போம் கம்யூனிஸத்துக்காகக் கொடி பிடிப்பதில் ஒருபோதுமே தவறையோ பச்சாதாபத்தையோ உணராத ஒருவராகவே தான் நினைவுகூரப்பட வேண்டுமென்று விரும்பினார்.

இருபதாம் நூற்றாண்டின் கம்யூனிசத்தின் தோல்வியை ஒப்புக்கொண்ட அதே வேளை, ஹொப்ஸ்போம் மார்க்சியக் கோட்பாடுகளை ஒருபோதும் கைவிடவில்லை.

அறிவியல் களரி

# அப்பாவாகப் போவது எப்போது?





வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

**ஒரு மனிதன் தந்தையாவதற்கு ஏற்ற வயது என்ன?**

எனது பாட்டா அப்பாவாகும்போது வயது 18 மட்டுமே. எனது அப்பா 23 வயதில் அப்பாவானார். அப்பாவாகும் போது எனக்கு 32 வயதாகிவிட்டது. இன்றைய இளைஞர்களுக்கு இன்னமும் அதிக காலம் தேவைப்படுகிறது. நல்ல கல்வி, போதிய வருவாயுள்ள வேலை, புதிய மணவாழ்வில் சற்றுக்காலம் தொல்லையின்றி உல்லாச வாழ்வு. இவற்றையெல்லாம் முடித்துக் கொண்டு குழந்தை பெறுவதையிட்டு சிந்திக்கத் தொடங்குவதற்கு காலதாமதமாகி விடுகிறது இன்றைய இளைஞர்களுக்கு.

வயது அதிகரிப்பும் அப்பாவாதலும் மேலும் முதிர்ந்த வயதில் அப்பாவாகும் பலர் மேலை நாடுகளில் இருக்கிறார்கள். வேலைப்பளு, இரண்டாவது தரம், மூன்றாவது தரம் என மணம்முடித்தல் போன்ற காரணங்களால் அங்கு தந்தையாவது தாமதமாகிறது பலருக்கு.

இருந்தபோதும் இன்னமும் பெரும்பாலானவர்கள் 20 முதல் 34 வயதிலேயே அங்கும் அப்பாவாகிறார்கள். ஆனால் 1980இற்கும் 2002 இற்கும் இடைப்பட்ட காலத்தில் முதிர்ந்தவர்கள் அப்பாவாகும் தொகை அதிகரிக்க ஆரம்பித்தது. 40 - 44 வயதிற்கும் இடையில் 32சதவிகிதத்தாலும், 45-49வயதிற்கும் இடையில் 21 சதவிகிதத்தாலும், 50 - 54 வயதிற்கும் இடையில் 9 சதவிகிதத்தாலும் அதிகரிப்பதாக அமெரிக்க National Vital Statistics Report கூறுகிறது. புதிய தரவுகள் மேலும் அதிகரித்திருக்கும் என நம்பலாம்.

என் பாட்டா செய்தது சரியா அல்லது இன்றைய தலைமுறையினர் செய்வது சரியா?

நவீன விஞ்ஞான ஆய்வுகள் பாட்டாக்களின் பக்கம் நிற்கிறது.

40 வயதுகளை எட்டும் ஒரு மனிதனது விந்துவின் தரமானது 20 வயதுகளில் இருந்ததைத் போலிருப்பதில்லை.

அவர்களது மரபணுக்களில் பிறழ்வுகள் (genetic mutations) ஏற்படுகின்றன. இவை அவரது வாரிசுகளைச் சென்றடையப் போகின்றது என்பதையிட்டு விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள். ஐஸ்லான்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இன்னமும் சற்று விபரமாகச் சொல்கிறார்கள். Autism or Schizophrenia ஆகிய பாதிப்புள்ள குழந்தைகள் உருவாவதற்கு 40 வயதுடைய ஒருவர் தன்னிலும் மடங்கு வயதுடையவரைவிட இரண்டு மடங்கு அதிகமாக காரணமாகிறார்கள் என்கிறது.

**ஒட்டிசம்**

ஒட்டிசம் என்பது குழந்தையை மட்டுமன்றி முழு குடும்பத்தின் நிம்மதியையும் தொலைக்கக்கூடிய சிக்கலான நோயாகும். இவர்கள் ஏனைய குழந்தைகள் போலவே பிறந்து வளர்வார்கள். இரண்டு மூன்று வயதாகும்போதே இக்குழந்தையில் ஏதோ பிரச்சினை உள்ளது என



# விஞ்ஞான முடிவுகளுடன் முரண்படும் சமூகக் கடப்பாடுகள்

பெற்றோருக்கு புரிய ஆரம்பிக்கும்.

இவர்கள் உள, மொழி மற்றும் செய லாற்றல் குறைந்த குழந்தைகளாகும்.

- கற்பனையுடன் விளையாடும் ஆற்றல் (Pretend play) குறைந்தவர்களாக இருப்பார்கள். உதாரணமாக ஒரு கரடிப் பொம்மையை அல்லது பிளேன் பொம்மையை வைத்து கற்பனைத் திறனுடன் விளையாடும் ஆற்றல் இருப்பதில்லை.
- தாய் - தந்தை, சகோதரங்கள் ஏனை யோருடன் ஊடாடும் திறன் (social interaction) இவர்களிடம் இருப்ப தில்லை.
- வாய் மொழியாலும், செய்கைகளா லும் தனது தேவைகளையும் உணர்வு களையும் மற்றவர்களுக்கு உணர்த் தும் திறன் (Verbal and nonverbal communication) இருப்பதில்லை.

இவற்றால் ஏற்படும் தனது இய லாமையால் முரட்டுக் கோபம், பொருட் களைப் போட்டு உடைத்தல், மற்றவர் களை அடித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். உண்மையில் குழந்தை யின் நிலையை விட இவர்களைப் பராமரிக்கும் பெற்றோர்களின் நிலையே பரிதாபமானது. இதைக் குணப்படுத்த மருந்துகள் இல்லாததால் அதற்கான விசேட பள்ளிகளில் சேர்த்தே அவர்களது நிலையை மேம்படுத்த முடியும்.

இத்தகைய பிள்ளைகள் பிறப்பது அண்மைக் காலமாக அதிகரித்து வருகி றது. அமெரிக்காவின் Centers for Disease Control and Prevention அறிக் கையின் பிரகாரம் பிறக்கும் 1000 பிள்ளைகளில் 11.3 பிள்ளைகள் ஓட்டிசம் தொடர்புடைய அறிகுறிகளுடன் இருப்ப தாகக் கணித்துள்ளார்கள். இலங்கை யிலும் அண்மைக்காலங்களில் இத்த கைய குழந்தைகளை முன்னரை விட அதிகம் காண முடிகிறது.

### மனப் பிறழ்வு Schizophrenia

மற்றொரு நோயான மனப் பிறழ்வு ஏற்படுவதற்கும் ஓட்டிசம் போலவே, வயது அதிகமான தந்தையர் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள் ஆய்வாளர் கள். சுழல், பரம்பரை அம்சங்களும் கார ணமாகலாம். மாயத் தோற்றங்கள், மாய ஒலிகள் உள்ளடங்கிய எண்ணம், செயல்களில் தெளிவற்ற தன்மையுடைய மனக்கோளாறு இதுவாகும்.

பதின்மங்களில் அல்லது கட்டிளம் பருவத்தின் ஆரம்பத்திலேயே இதன் அறிகுறிகள் வெளிப்பட ஆரம்பிக்கும். முற்றிலும்குணப்படுத்தமுடியாதபோதும் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக் கக்கூடிய மருந்துகள் தற்போது உள்ளன. இதனால் முன்னைய காலங்களில் தனக்குத்தானே பேசிக் கொண்டு அழுக்கு நிறைந்த உடைகளுடனும், குளித்து மாத க்கணக்கான நாற்றத்துடனும் வீதிகளில் "விசரன்" என்ற பெயரோடு அலைந்து திரிபவர்களைக் காண்பது குறைந்து போயிற்று.

நோயாளியை மட்டுமன்றி குடும் பத்தையும் சமூகத்தையும் அதிகளவில் பாதிக்கிற நோயாக இதுவும் இருக்கிறது.

### அம்மாக்கள்

அப்பாக்கள் இப்பொழுதுதான் இத்த கைய பிரச்சினைக்கு முகம் கொடுக்கி றார்கள். ஆனால் பெண்கள் பல கால மாகவே இளவயதில் தாய்மை எய்தா மைக்காக குற்றம் சாட்டப்படுகிறார்கள். காலம் தாழ்த்தி தாய்மை எய்தினால் Downsyndrome போன்ற குறைபாடுகள் உள்ள குழந்தைகள் உருவாகலாம் என்பது பலகாலமாக அறியப்பட்ட செய்தியாகும்.

### பெற்றோராகும் வயதை தீர்மானிப் பதில் சமூகத்தின் தாக்கங்கள்

இருந்தபோதும் இன்றைய சூழலில் பெண்கள் பிந்திய பதின்மங்களிலோ, 20களின் ஆரம்பங்களிலோ குழந்தை பெறுவது சாத்தியமற்றுப் போகிறது. ஏனெனில் இன்றைய பல பெண்களும் பொருளாதார ரீதியில் தமது காலில் நிற்பதையேவிரும்புகிறார்கள். கல்வியை முடித்து தொழில் தேட 30 வயதைத் தாண்டிவிடுகிறது.

"நேர காலத்தோடு பிள்ளையைப் பெறு இல்லையேல் குறைபாடுடைய குழந்தை கிடைக்கலாம்" என பெண்கள் மீது ஆண்கள் சுமத்திய அதே குற்றச் சாட்டை இன்று பெண்கள் ஆண்கள் மீது திருப்பியடிக்க முடிகிறது.

குற்றச்சாட்டுகளைப் புறந்தள்ளிவிட்டு உயிரியல் ரீதியாகச் சிந்தித்தால் ஆண்க ளும் சரி பெண்களும் சரி பிள்ளை பெறு வதை ஒரு தசாப்த காலம் முன்தள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது. மேலை நாடுகளில் இது பெண்களில் முப்பது களின் பிற்கூறும், ஆண்களில் 40க்கு மேலுமாகி விடுகிறது.


இருந்தபோதும் காலக் கடிகாரத்தின் டிக் டிக் ஓசை பெண்களையே அதிகமாக விரட்டித் தொலைக்கிறது. இதனால் பெண்களே அதிக மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இது அவர்களது கருத் தங்கும் ஆற்றலுடன் (fertility) சம்பந்தப் பட்டது. 30வயதின் எல்லையை அண் மித்து 40வயதை தாண்டும்போது அவர் களது கருத்தரிக்கும் ஆற்றல் நலிவ டையத் தொடங்குகிறது.

### ஆண்களின் முகத்தில் அடி

ஆனால் ஆண்கள் நிலை அவ்வா றில்லை. ஒரு குழந்தைக்கு அப்பனாகும் நேரத்தை அவனே தீர்மானிக்கக் கூடி யவனாக இருக்கிறான். அல்லது சூழலின் பாதிப்புகளால் அது நிகழலாம். ஆனால் உயிரியல் நியதியாக ( biological determinism) ஒருபோதும் இருப்பதில்லை. உதாரணங்கள் Rupert Murdoch had a

child at 72, Saul Bellow at 84, Les Colley, an Australian miner, at 92.

- "தன்னால் எப்பொழுதும் முடியும்" என இறுமாந்திருந்த ஆண்களுக்கு விஞ்ஞான உண்மைகள் முகத்தில் அடிப்பது போலானது என்பதில் சந்தேகம் இல்லை.
- அப்படியில்லாவிடினும் அவனது மனச்சாட்சியை உலுப்பக் கூடியதாகவே இருக்கிறது. "குழந்தைக்கு அப்பனாகும் காலத்தைத் தான் தள்ளிப் போடுதல் தன்னளவில் சௌகரியமானபோதும் அது தனக்குப் பிறக்கப் போகும் குழந்தையின் உடல்நலத்தை அதன் வாழ்நாள் முழுவதும் பாதிக்கலாம்" என்ற எண்ணம் மனித இனத்தின் சரித்திரத்தில் முதல் முதலாக அவன் முன் எழுந்து நிற்கிறது.



வயதான பெண்கள் அனைவரும் இப் பிரச்சினைக்கு ஏற்கனவே முகம் கொடுத்துக் கொண்டிருப்பது தெரிந்த விடயமே. அவர்கள் தமது வசதிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப விட்டுக் கொடுப்புகளுடன் சமாளிக்கத் தெரிந்திருக்கிறார்கள். இப்பொழுது ஆண்கள் அவர்களது பாதையைப் பின்பற்ற வேண்டியதுதான்.

### மாற்றுச் சிந்தனைகள்

விஞ்ஞான முடிவுகள் வேறுவிதமாக இருந்தபோதும், தந்தையாகும் காலத்தைப் பிற்போடுவதில் அனுகூலங்கள் இருக்கின்றனவா?

20 வயதில் இருந்ததைவிட 40 வயதாகும்போது மரபணுக்களில் பழுதுகள் ஏற்படக் கூடுமாயினும், ஆண்களின் வாழ்க்கை முறைகளில், பழக்கவழக்கங்களில், மற்றவர்களுடனான தொடர்பாடல் முறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவசரமும் பதற்றமும் அடங்கி அமைதி வருகிறது. கோபம், பொறாமை அடங்கிப் பொறுமை அதிகரிக்கின்றது. போட்டி வாழ்வின் வேகமும் அதீத எதிர்பார்ப்புகளும் தளர்கின்றன.இம் மாற்றங்கள்ஆண்மைவீரியத்தின்தளர்முகத்தைக் குறிக்கின்றபோதும், நல்ல தந்தைக்கு வேண்டிய குணாதிசயங்களுக்கும் வழி வகுக்கின்றன. அவசரக் கோபங்கள் அடங்கிப் புரிந்துணர்வு வளர்வதால் குழந்தையை ஆதரவோடு அணைத்து வளர்க்க முடிகிறது.

20களிலும் முப்பதுகளிலும் இருந்ததைவிட 40களை அணுகும்போது தந்தைத்துவப்பண்புகள்மெருகேறுகின்றன.

மற்றொரு விடயம் பொது நலம் சார்ந்தது.

நீங்கள் இளவயதில் தந்தையானால் உங்கள் வாரிசும் விரைவில் பெற்றோர் ஆவதற்கான சாத்தியம் அதிகம். நீங்கள் சற்றுக்காலம் தாழ்த்தி தந்தையானால் அவர்கள் பெற்றோராவது பிந்தும். சற்று விளக்கமாகச் சொன்னால்.

வயது 40 களில் இருக்கும் உங்களுக்கு மகன் ஆரம்பப் பள்ளியில் கற்கிறான் என வைப்போம், ஆனால் இன்றைய விஞ்ஞானிகள் சொல்வதுபோல நீங்கள் இள வயதிலேயே மணமுடித்திருந்தால் உங்கள் மகன் இப்பொழுது பிரசவ அறையில் மனைவிக்குதுணையாகநின்றிருப்பான். அதாவது உங்கள் குடும்பத்தில் அடுத்த தலைமுறையும் வந்திருக்கும்.

இன்று உலகில் சனத்தொகை பெருகும் வேகத்திற்கு உங்கள் பங்களிப்பும் இருந்திருக்கும். அந்த வகையிலும் பிந்திய வயதில் தந்தையாதல் சனத்தொகை வளர்வதை உலகளாவிய ரீதியில் கட்டுப்படுத்த முடியும்.


குழந்தையைப் பெறுவதிலும் வளர்ப்பதிலும் பழுதடைந்த மரபணுக்கள் என்பது தந்தையின் பங்களிப்பில் ஒரு சிறிய அம்சமே. இருந்தபோதும் மிகவும் முதிர்ந்த வயதில் தந்தையாவதும் நல்லதல்ல. ஏனெனில் குழந்தையின் தலையில் பழுதான மரபணுக்களைச் சுமத்துவது மாத்திரமன்றி, வளர்த்தெடுப்பதிலும் வழிநடத்துவதிலும் சிக்கல்கள் ஏற்படும்.

நோயும் பிணியும் ஏன் மரணமும் கூட தந்தையின் பங்களிப்பைத் தடுத்து நிறுத்தலாம்.

விஞ்ஞானமா சமூகக் கடப்பாடுகளா என்ற எதிர் முரணான தேர்வுகளுக்கு இடையில் மனிதன் சிக்கி நிற்கிறான்.

தெளிவான விடையில்லை.

பகுத்தறிவின் துணையோடு தனக்கு ஏற்ற தெரிவைத் தானே தேர்ந்தெடுக்கத்தான் இன்றைய நிலையில் முடியும்.



இலக்கிய உலகம்

# போருக்குப் பிந்திய கவிதைகள்

## வரைவுபடுத்தல் எல்லைகளின் தகர்ப்பு



சபா.ஜெயராசா

'போருக்குப் பிந்திய' என்ற தொடர் எண்ணக்கரு நிலையிலே இடர்பாடுகளைக் கொண்டது. வரலாறு என்பது ஆற்றொழுக்குப்போன்ற தொடர்ச்சியைக் கொண்டது. அதன் தொடர்ச்சியைப் பிரித்து எல்லைக்கோடிடுவதிலே ஆய்வாளர் இன்னமும் சிக்கல்களை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றனர்.

எல்லைக்கோடிடும்பொழுதும் ஒன்றுதிரட்டலை (TOTALISING) மேற்கொண்டு வரையறைகளைக் காட்டும் பொழுதும் சமகாலத்தைய போர் தொடர்பான மேலோங்கிய கருத்தே முன்னிலை பெறுகின்றது. உதிரியானவையும், எல்லை நிலையில் உள்ளவையும் விடுபட்டுப் போகின்றன.

போர் என்பது பல பரிமாணங்களைக் கொண்டது. தனித்து ஆயுதப் பிரயோகத்தை மட்டும் கொண்ட ஒற்றைப்பரிமாணத்தில் அதனை நோக்குதல் தவறு. போர் அறிவின் பிரயோகத்தோடு (APPLICATION OF KNOWLEDGE) இணைந்துள்ளமை பிரித்தானிய கலைக்களஞ்சியத்திலே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. பௌதீக விளைவுகளை ஏற்படுத்துவதற்கு குரூரமான அறிவின் பிரயோகம் நிகழ்த்தப்படுகின்றது. போர் தொடர்பான அறிவின் பிரயோகம் நின்றுவிட்டதா என்ற கேள்வியும் "போருக்குப் பிந்திய" என்ற தொடர் தொடர்பாக எழுகின்றது.

மேலும் போர் தொடர்பான "வடு" (TRAUMA) போர் நிகழும் பொழுதும் காணப்படும்,போர் முடிந்த பின்னரும் காணப்படும். உளவியல் நிலையில் அதிக தாக்கங்களினால் உருவாக்கம் பெற்ற விளைவே "வடு" என்று குறிப்பிடப்படும். முதலாம் உலகப்போரை அடியொற்றியே "போர் வடு" என்ற கருத்தாக்கம் உளவியலிலே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

போர் தொடர்பான மனப்பதிவுகளை "போருக்குப் பிந்திய" என்ற பிரிகோட்டினால் பிரிக்க முடியாது. ஏனெனில் மனப்பதிவுகள் தொடர்ச்சியானவை. தொடர்ச்சி என்பது கிளறும் தன்மை கொண்ட நீட்சியாக அமையும். காலம் செல்லச் செல்ல அது மேல்மனத்தை விட்டு அசைந்தாலும் ஆழ்மனதிலே உறைந்திருந்து தாக்கங்களை ஏற்படுத்த வல்லது. அந்நிலையிலேயே போர் தொடர்பான வெளிநிலைவரங்களோடு மனித உள்ளங்களில் அகநிலைவரங்களும் முக்கியமானவை என்பது உளவியலாளர் சுட்டிக்காட்டுவர்.

போர் இலக்கியம், போருக்குப் பிந்திய இலக்கியம் என்று கூறும்பொழுது எழுத்துவழியான இலக்கியங்களையே குவியப்படுத்துகிறோம். ஆனால் அதிக முக்கியத்துவம் பெறுவது எழுத்து வழி வராத இலக்கியங்களாகும்.

உலகஇலக்கியவரலாற்றிலேதோற்றம் பெற்ற பெரும் இலக்கியங்கள் போர் தொடர்பான வாய்மொழி இலக்கியங்களில் இருந்து தான் மேலெழுந்தன. மகாபாரதமும், இராமாயணமும் அவ்வகையிலே தான் தோற்றம் பெற்றன. தமிழ் வீரயுகப் பாடல்களும் அவ்வாறு தான் எழுகோலம் கொண்டன.

முதலாம், இரண்டாம் உலகப்போர்களைத் தொடர்ந்து பெருந்தொகையான வாய்மொழிக் கவிதைகள் உருவாக்கம் பெற்றன. அவற்றை அடியொற்றி எழுத்துவழியான இலக்கியங்களும் எழுச்சி கொண்டன.

போருக்குப் பின்னரான வாய்மொழி இலக்கியங்களைத் தேடிக் கண்டறியும் கள ஆய்வுகளை மேற்கொள்ளாது, தனித்து எழுத்துவழிமேலெழுந்த கவிதைகளை அடிப்படையாக வைத்து "கவிதைக் கோலங்கள்" பற்றிய தெளிவான புலக்காட்சியை ஏற்படுத்திவிட முடியாது. ஐரோப்பிய மரபில் வாய்மொழி இலக்கியம் பற்றிய தேடல் யுத்தங்களை மேலெழச்செய்தன என்பதை நினைவிற்கொள்ளவேண்டியுள்ளது. முகாம்களிலே தொழிலும் பொழுதுபோக்கும் அற்ற அவல நிலையில் நேரடி அனுபவங்களைத் தாங்கிய வாய்மொழிப் புலம்பல்கள் பெருமளவில் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

போரும் பின்னரான நிலைவரங்களும் தொடர்பான நினைவுப் பதிவுகள் முக்கியமானவை. அப்பதிவுகள் ஒரு புறம் ஆவணத்தன்மைகொண்டவையாக இருக்கும். ஆவண நிலைவரங்களுடன் மனவெழுச்சிகள் கலந்து செழுங்கலவையாகும்பொழுது அவை இலக்கிய வடிவங்களாகுகின்றன. அந்நிலையில் அனுபவப்பட்டவர்களில் மனப்பதிவுகளைத் தொகுத்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. அத்தகைய மனப்பதிவுகள் இலக்கிய வடிவை எடுக்கின்றன. உளமருத்துவர் டாக்டர் சிவதாசின் முயற்சிகள் உளவியல் நிலையில் மட்டுமன்றி கலைஇலக்கிய நிலையிலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

தாங்கமுடியாப் பேரவலம், அவலத்தோடு இணைந்த பதகளிப்பு, உளச்சம நிலையின் வீழ்ச்சி, அதீதபதற்றம், மனிதப்பண்புக்கும் எதிர் மனிதப்பண்புகளுக்குமிடையே நிகழும் மோதல், கிழித்தெறியப்படும் கடதாசிகளாய்க் கையில் எடுக்கப்பட்ட மனித உயிர்கள், அவற்றைக் கிழித்தெறிவதில் காணப்படும் இன்பவிகாரம், குழம்பிய உலகக்காட்சிகள், நம்பிக்கைகளின்கண்ணாடிச்சிதறல்கள், நடந்தவற்றை ஆறாதசூட்டுடன் நோக்கும் கற்பனைகள், கட்டவிழ்த்துவிடப்பட்ட காரணங்காணல் (RATIONALISATION) நடந்தவற்றுக்கும் கற்பனைகளுக்குமிடையே நிகழும் இடைவெளியற்ற போக்கு, குறியீடுகளும் அனுபவங்களும் நீக்கமற இணைந்துகொள்ளல், வடுக்களின் காட்சிப்படுத்தல், முதலிய பன்மைக்கோலங்களைப் போருக்குப்பிந்திய கவிதையாக்கங்களிலே காணமுடியும்.

சேரன், அகிலன்,ஜெயபாலன், தமிழ்நதி, மிதுனன், றஸ்மி,சத்தியபாலன், தீபச்செல்வன், கருணாகரன், சித்தார்த்தன், சிவசேகரம் போன்றோரின் கவிதைகளும், கவிதைத் தொகுப்புகளும், விரிந்துபரந்து பன்மைப்பட்டுச் செல்லும்

அனுபவங்களின் ஆற்ற முடியாத பதிவுகளாகின்றன. இத்துறையில் பல்வேறு கவிஞர்களின் ஆக்கங்கள் தொடர்ந்தும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

போரின் முடிவு போரிட முடியாத நீட்சியாக இருத்தலை சி.சிவசேகரம் அவர்களின் "முட்கம்பித் தீவு" பின்வருமாறு கவிதைப்படுத்துகின்றது.

"உண்பதற்கும்
உறக்கம் வரும்போது
கொட்டாவி விடுவதற்கும்
வாய்திறக்க அவர்கட்கு
அனுமதி உண்டு
இச்சிறிய கருணைகட்காக
அவர்களை உயிரோடு வைத்திருக்கும்
பெரிய தெய்வங்கட்கு
அவர்கள் நன்றியுடையோராய்
இருக்கிறார்கள்."

போரோடு தொடர்பான ஆக்கங்கள் கலை உளவியல் நோக்கிலே ஒரு முக்கியமான கருத்தை வெளிப்படுத்துகின்றன. அழகியல் நோக்கிலே அது விவாதத்துக்குரியதாகவும் அமைகின்றது. அதாவது போரின் அவலங்களும், கொடூரங்களும், சாதாரண வாழ்விலே காண முடியாதவை. கலை நோக்கிலே அவை "அழிவுநிலை விநோதமானவை" (DESTRUCTIVE WONDER) அந்நிலையில் குறித்த காட்சியில் நேரடியான இயம்பலை கலைத்துவ வீச்சுகள் வந்துவிடுகின்றன.

அதனை மேலும் விவரமாகக் கூறுவதானால், சாதாரண வாழ்க்கைக்கோலங்களை இலக்கியத்தளத்துக்கு உயர்த்துவதற்கு பல்வேறு கலை உபாயங்களைப் பயன்படுத்த வேண்டி நேரிடும். மரபு நிலையில் அவை அணிகள் என்றும் அலங்காரங்கள்என்றும்குறிப்பிடப்படும்.

தொன்மநுட்பங்களை எடுத்தாளல், படிமங்களைப் பதிப்பித்தல், மொழிக் கோலத் தொடர்புகளை இணைத்தல், முதலாம்கலைநுட்பங்கள்பயன்படுத்தப்பட்டு மனவெழுச்சி ஏற்றங்களும், கலை ஏற்றங்களும் சாதாரண வாழ்க்கைக் கோலங்களைஇலக்கியமாக்கும்பொழுது பயன்படுத்தப்படுகின்றன. அவற்றினூடாக விநோதப்பாடும், பரீச்சயமற்றதாக்குதலும் (DEFAMILIERISATION) உருவாக்கப்படுகின்றன.

ஆனால் கொடூரமான போர்க்காட்சிகளும், ஆற்ற முடியாத விளைவுகளும், சாதாரண வாழ்விலே காணமுடியாத காட்சிகளாகி அழிவு நிலை விநோதப்பாடுகளாய் நிற்கும் நிலையிலே மேலதிகமான சோடனைகள் அற்ற நேர்க்காட்சிகளே கலைத்துவ எல்லைக்குள் சென்று விடுகின்றன.

நிஜமான போர்க்காட்சிகளைக் காட்டும் ஆவணப்படங்கள் ஆவணம் என்ற எல்லையையும்கடந்துகலைவெளிக்குள் நுழைந்து விடுகின்றன. அத்தகைய நிலை போர் நிழற்படங்களிலும், போர் ஓவியங்களிலும் காணப்படுகின்றன. போருக்குப் பின்னரான மனிதவாழ்வின் அவலங்களைக் காட்டும் ஆவண நிலைப்பட்ட காட்சிகளைத்தந்த டாக்டர் சிவதாஸின் நிழற்படங்கள் கலை வெளிக்குள் வந்து விடுதலை காண்கின்றோம்.

மேலும் விரிவாகச் சொல்லப்போனால் ஆவணத்துக்கும் கலைக்குமிடையே



யுள்ள பிரிகோடானது பேரிலக்கியங்களிலே தகர்ந்து விடுகின்றன அல்லது அழிந்து விடுகின்றன.

சேரனுடைய கவிதைகளில் போரின் பேரவலங்களின்சித்திரிப்புக்கவிதையில் ஆவணத்தையும் அழகியலையும் பிரிக்கும் எல்லை சிதறி நிற்றல் பின்வரும் கவிதை வரிகள் வாயிலாகவே வெளிவருகின்றது. போர்க்கவிதைகளிலே சொற்களும், படிமங்களும் தொலைந்து போதல் சுட்டிக்காட்டப்படுகின்றன.

"பொய்மையும் வன்மம் சூழ்
மாயக்காட்சிகளும்
அவர்களுடையபடையெடுப்பில்
புகையுடன் சேர்ந்து மேலெழுந்தபோது
சொல் பிறந்தது
படிமங்கள் உடைந்தன"

எதுவிதக் கலையேற்றங்களும் இன்றி நேரடி நிகழ்ச்சியைக் கூறும் சேரனுடைய இரண்டு வரிகள் கலையேற்றம் பெறுதல் குறிப்பிடத்தக்கது.

"காயப்பட்ட இரண்டரை
வயதுக் குழந்தையின் கைகளை
மயக்கமருந்தின்றி
அறுக்கின்ற மருத்துவன்"

அதாவது, நேரியம்பலே கலைவெளிக்குள் வந்துவிடுகின்றது. விநோதங்களுக்கு பதில் ஈடு இல்லை. அவை தனித்தே இலக்கியப் பெறுமதியை எட்டி விடுகின்றன. (ROSE IS A ROSE) என்ற தொடர் விநோதமே. பிரதியீட்டில்லா தனித்துவமான அழகாவதை வெளிப்படுத்துகின்றது.

அவலங்களின் நேரியம்பல் இலக்கிய நிலையை எய்துதலின் போது உரையையும் கவிதையையும் பிரிக்கும் கோடுகளும் அழிந்துவிடுகின்றன. உரைநடை = தருக்க வடிவிலான ஆவணமாக்கலுக்குத் துணை நிற்பது. கவிதை= உணர்ச்சி வடிவான அகநிலைக் கவிப்புக்குத் துணைநிற்பது.

போரையும் அதன் பின்னரான அவலக் காட்சிகளையும் நேரியம்பல் செய்கையில் மேற்குறித்த இரு நிலை அடையாளங்களும் தகர்ந்து விடுகின்றன.

ஆவணவெளியும் கலைவெளியும் ஒன்றிணைதலை பா.அகிலனின் சரம கவி தொகுதியிலே கண்டுகொள்ள முடிகிறது. அவ்வாறே உரையும் செய்யுளும் ஒன்றிணைதலை தீபச்செல்வனின் பூதங்கள் புகுந்த தேசத்தில் (காலச்சுவடு,இதழ் 143) காணலாம்.

போர் தொடர்பான இலக்கியங்களின் பிறிதொரு பரிமாணம் நம்பிக்கையேற்றம் மற்றும் நம்பிக்கை வீழ்ச்சி ஆகிய இரண்டு வேறுபட்ட கறாரான மன அடையாளங்களின் பிரிகோடுகளிடையே நிகழும் எல்லையழிப்பாகும். பெரும் அழுத்தங்களிடையே மனஊசல் ஆட்டம் நிகழும்பொழுது நம்பிக்கையேற்றம் நோக்கியும் நம்பிக்கை வீழ்ச்சியும் நோக்கிய எதிர் எதிர் நீட்சிகள் ஏற்படுகின்றன. பேரவலத்தின் பொழுது அத்தகைய எதிர்எதிர் நீட்சிகள் தவிர்க்க முடியாதவை.

"இயலாமையின் கண்ணீரில் தீ வளரும்
நாடற்ற நாடு"

என்ற சேரனின் அடிகளில் அவ்வாறான இரு நிலை நீட்சிகளை வாசிக்கலாம். "இயலாமையின் கண்ணீர்" நம்பிக்கை வீழ்ச்சியாகின்றது.

மற்றும் "தீ வளர்தல்" அதன் எதிர் ஏற்றமாகின்றது.

போரின் போதும் அதன் பின்னரும் தோற்றம் பெற்ற கவிதைகள் இலக்கியத்தை வரைவுபடுத்தலிலும் வடிவ நிலைப்பிரிகோடிடுதலிலும் பல்வேறு அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளன.

கலையுலகம்

# தமிழ் சினிமா வரலாற்றில் இன்னொரு பரிணாமம்

விளிம்பு நிலை வாழ்வியலின் நுட்பமான துலக்கம்




மீனா

நூறாண்டுகாலத் தமிழ் சினிமா வரலாற்றில் ரொம்பவும் கவனமாய்க் கட்டமைக்கப்பட்டு வந்த காதலின் பரிணாமம் உடைந்து சிதறுவதோடு சமீபகால தமிழ்சினிமா கவனப்படுத்தும் விளிம்புநிலை வாழ்வியலும் “”அட்டகத்தி” திரைப்படத்தில் நுட்பமாகத் துலக்கம் பெறுகின்றன.

சென்னைப் புறநகரில் உள்ள ஒரு கிராமப்பகுதிதான் கதைக்களம். கிராமம், நகரம் என்னும் சூழல்கள் தமிழ் சினிமாவிற்குப் புதிதல்ல என்றபோதும் காலங்காலமான கிராமத்து, நகரத்துக்கதைகள் யாரையெல்லாம் மையப்படுத்தின என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ‘மண்வாசனை’, ‘தேவர் மகன்’, ‘சின்ன கவுண்டர்’, ‘நாட்டாமை’ உள்ளிட்ட திரைப்படங்கள் கிராமிய வாழ்வைப் படம் பிடிப்பவையாக மட்டும் இல்லாமல், நடுத்தரவர்க்கச் சாதிப் பெருமைகளை உயர்த்திப்பிடிப்பவையாக இருந்தன. நகர்ப்புற வாழ்வை மையப்படுத்திய பாலசந்தர் போன்றவர்களின் திரைப்படங்கள் மத்தியதர உயர்சாதி வாழ்வையே பேசுவதாக இருந்தன.

ஆனால், சமீபகாலத் தமிழ்சினிமா இந்த மையங்களைப் புறந்தள்ளி ஒடுக்கப்பட்டோர், விளிம்புநிலையினர், திருநங்கைகள் போன்ற வரலாறு மறுக்கப்பட்டவர்களின் வாழ்வியலையும் சொல்லத் தொடங்கியுள்ளது. நகர்ப்புற வாழ்வின் பன்மைத்தன்மைகள் கணக்கில் கொள்ளப்படுகின்றன. கிராமங்களிலிருந்து புலம்பெயர்ந்து வந்து சென்னையில் வதியும் தொழிலாளிகள் (அங்காடித் தெரு), பாலியல் தொழிலாளிகள் எல்லோருமே Zoom பண்ணப்படுகிறார்கள். சினிமாத்துறைக்குள் புதிய இளைஞர்களின் வரவு, அவர்களின் சமூகப்பின்புலம், வழமைகளைக் கட்டுடைப்பதில் அவர்களுக்கிருக்கும் வேட்கை ஆகியவையே இதனைச்சாத்தியமாக்குகின்றன.

அதேவேளை, இந்த மாற்றங்களுக்கு முகம் கொடுக்க முடியாத பழமைவாதிகள் தேங்கிப்போவதும் இயல்பாகிறது. வாழ்நாள் சாதனைக்காக சென்ற ஆண்டில் ‘தாதா சாகிப் பால்கே’ விருது இயக்குநர் பாலச்சந்தருக்குக் கொடுக்கப்பட்டபோது, ‘தற்போதெல்லாம் அதிகம் படங்கள் இயங்காதது ஏன்’ என்ற கேள்வியும் அவர்முன் வைக்கப்பட்டது. அதற்கு அவர், ‘இப்போதெல்லாம் படமெடுக்கவேண்டுமென்றால் மதுரையைப்பற்றிச்சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். எனக்கு அதெல்லாம் வராது’ என்கிற பொருளில் பதிலளித்தார். அவர் சொல்லியது முற்றிலும் உண்மை. ஆனால் மதுரையை மட்டுமல்ல சென்னையையும் கூட அவரால் முழுசாகச் சொல்லி விடமுடியாது. அதன் பன்மைத்தன்மைகளை அவரால் கவனப்படுத்திவிட முடியாது. திரைத்துறையின் தற்போதைய புதுவரவுகள் அதைச் சிறப்பாகவே செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களே இத்தகைய பின்புலங்களிலிருந்து வருபவர்களாக இருப்பது இதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அந்தவகையில் 'அட்டகத்தி' திரைப் படம் இதுவரையில் சொல்லப்படாத புற நகர் கிராமப்புற வாழ்வை தலித்துகளின் பண்பாட்டை காதலின் பரிமாணத்தை ரொம்பவும் இயல்பாக ஆவணப்படுத்தி யிருக்கிறது.

கதைநாயகன் 'தினகரன்' +2 ஆங்கி லத்தேர்வில் தோல்வி அடைந்துவிட்டு டுடோரியல் கல்லூரிக்கு சென்றுகொண்டி ருக்கிறான். அவனோடு மனோ, மாரி, தேவா, மகேந்திரன் என்றொரு இளைஞர் பட்டாளமே சுற்றுகிறது. இவர்களின் ஃபுல்டைம்வொர்க் காதல், காதல், காதல்.... தான். எப்படியேனும் கைவசம் ஒரு காதலியைப் பெற்றுவிடவேண்டும் என்பதுதான் இவர்களின் இலட்சியம். பேருந்தில் வருகிற பள்ளி மாணவி பூர்ணிமாவை சைட் அடிக்க அவளும் சைட் அடிக்கிறாள். பின் காதலைச் சொல் லப்போகும் வேளையில் அண்ணா ப்ளீஸ்னா... பின்னாடிலாம் வராதீங் கண்ணா.... என்று சொல்லிப் 'பாசமல ராகி' விடுகிறாள். தலையிலடித்துக் கொண்டு திரும்பும் நாயகன் திவ்யா, நதியா, அத்தைப் பொண்ணு அமுதா என்று விடாமுயற்சியோடு களம் இறங்கு கிறான். எல்லா இடத்திலும் ஏதேனும் ஒருவகையில் "பல்பு' தான். ச்சீச்சி இந்தப்பழம் புளிக்கும் என்று சொல்லி காதல் கனவுகளை கைவிடுகிறான். +2 வில் தேர்ச்சி பெற்றுவிட்டு அரசுகலைக் கல்லூரியில் பி.ஏ வரலாற்றுத் துறையில் சேருகிறான். அதே கல்லூரியில் பள்ளிப் படிப்பைமுடித்துவிட்டுவந்தபூர்ணிமாவும் சேர்கிறாள்.

தினகரனை அவளே தேடிவந்து பேசு கிறாள். இருவருக்கும் இடையில் நட்பு ஏற்படுகிறது. பூர்ணிமா தன்னைக் காத லிப்பதாக நினைத்து அவளைச் சுற்றிச் சுற்றி வருகிறான். ஆனால் அவள் தான் விரும்பிய காதலனுடன் ஓடிப்போய்த் திருமணம் செய்துகொள்கிறாள். ஒரு கணம் கண்ணீர் மல்கிக் குலுங்கி அழு தாலும் இதை take it easy - ஆக எடுத்து க்கொண்டு தனது பாதையில் மீண்டும் உற்சாகத்தோடு பயணிக்கிறான். எதிர் பாராதவிதமாக ஒரு பெண்ணைச் சந்திக் கிறான். அங்கேயும் காதல் அரும்புகிறது. மனைவியாகிறாள். ஒரு குழந்தைக்குத் தந்தையாகிறான். ஆசிரியனாக வாழ்க்கை நகர்கிறது.

ஒரு சராசரியான யதார்த்த வாழ்வைப் பிரதிபலிக்கும் இந்தக்கதை அடிப்படை யில் இரண்டு முக்கிய அம்சங்களைக் கவனப்படுத்துகிறது. ஒன்று தலித் வாழ் வியலின் கொண்டாட்டக்கூறுகள்; மற் றொன்று காதலின் புனிதம் கட்டு டைக்கப்படுதல். மாட்டுக்கறிச் சோறு, நிலவொளியில் கானாப் பாட்டு, குடித்து விட்டுக் கலாய்க்கும் கணவனை எதார்த் தமாக எடுத்துக் கொள்ளும் மனைவி, கோலியாட்டம், எழவு வீட்டில் இளவட் டங்கள் போடும் குத்தாட்டம் எல்லாமே தமிழ் சினிமாவில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைச் சுட்டுகின்றன. பாலச் சந்தர்களால் முடியாத காரியத்தை ரஞ்சி த்கள் சாதித்துக் காட்டுகிறார்கள்.

மூன்றாம் பிறை, குணா, காதல் கோட்டை, காதலுக்கு மரியாதை எனப் பல வெரைட்டிகளில் வெளிவந்த காதல் காவியங்கள் முன்னிறுத்திய "புனிதக் காதல் ஒருமுறை மட்டுமே அரும்பும் தெய்வீகக் காதல்" போன்ற தத்துவங் களை இந்தப்படம் போட்டு உடைக்கிறது; காலங்காலமாய் கற்பிதம் செய்யப்பட்டு வந்த கலாசாரக் கட்டுப்பெட்டித்தனத்தை போகிற போக்கில் கேலிசெய்கிறது. தினகரன், காதலில் தோல்வி ஏற்பட்டதும் அசால்ட்டாக அடுத்த காதலுக்குத் தாவுவது, இதுக்கெல்லாம் ஃபீல் பண்ண முடியுமாடா?" என்று சொல்லிக் கடந்து போவது, என்பதான திரைக்கதை மாற்றங்களைப் பார்க்கும்போது தமிழ் சி னிமாவின் மீது நம்பிக்கை ஏற்படத்தான் செய்கிறது. "அட்டகத்தியை" தனது தயா ரிப்பில் வெளியிட முன்வந்த ஸ்டுடியோ கிரீன் கே.ஈ.ஞானவேல்ராஜா பாராட்டிற் குரியவர்.

படத்தில் குறிப்பிடவேண்டிய இன் னொரு அம்சம், "கதாநாயகத்தனத்தின் (ஹீரோயிசம்) மரணம்." நமது வறண்டு போன தமிழ் சினிமாவில் ஹீரோ என்பவன் எப்போதுமே வெல்ல முடியாத அதிமனிதன் (super man) தான். ஊரே திரண்டு வந்தாலும் எல்லோரையும் அல்லாக்காய் தூக்கி மல்லாக்கப் போடுப வன். யாராலும் அசைக்க முடியாதவன். எப்போதுமே வெற்றி வாகை சூடுபவன். ஆனால் அட்டகத்தி 'தினகரன்' அப்படி யானவன் அல்லன். குத்துவாங்கி முகம் சிவப்பவன். அடிஉதைபட்டுத் தலைதெறி க்க ஓடுபவன். கானாப் பாடல் பாடி குதூகலிப்பவன். எழவு வீட்டில் குத்தாட்டம் போடுபவன். மொத்தத்தில் அவன் ஒரு ஹீரோதான், ஆனால் 'ஹீரோ' இல்லை.

நடிகர்கள் அத்தனை பேரும் புதுமுகங்கள். ஒவ்வொருவரும் தமது பங்கைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். குடிகாரத் தந்தை வேலு, மனைவி மீனாட்சி, அத்தைப் பெண் அமுதா, பூர்ணிமா, திவ்யா, நதியா, நண்பர்கள் பட்டாளம் எல்லோருடையதும் கச்சி தமான நடிப்பு. கதாநாயகன் "தினகர னாக' வரும் தினேஷின் நடிப்பைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். மிகைப் படுத்தல்களோ ஆர்ப்பாட்டங்களோ இல்லாத தனது இயல்பான நடிப்பின் மூலம் முதல் படத்திலேயே முத்திரை பதித்திருக்கிறார். Casual, formal, லுங்கி, இடுப்புத்துண்டு அத்தனைக்கும் நச் என்று பொருந்தும் உடல்வாகு, நமட்டுச் சிரிப்பு, துறுதுறுக்கும் கண்கள், கற்றை மீசை, செழித்த தாடி... எந்தக் காட்சியிலும்



சலிக்கவில்லை. பூர்ணிமாவின் மீதான காதலில் முதல்முறை தோற்கும்போது, "உனக்கு லவ் ஃபெயிலியர்டா சோகமா தான இருக்கணும்" என்று மனச்சாட்சி உசுப்ப, இல்லாத சோகத்தை இழுத்துவர முயற்சிக்கும் காட்சிகள் நடிப்பின் உச்சம். இருபது, நாற்பது வருடங்களாக நான் கைந்து நாயகர்களையே பார்த்துச் சலித்துப் போன பெண் ரசிகைகளுக்கு தினேஷ் ஒரு நல்வரவு.

இழிபண்பாடு என்பதாகப் புறக்கணிக் கப்பட்டு வந்த தலித் பண்பாட்டுக்கூறு களில் வெகுமக்கள் தமக்கான கொண் டாட்டங்களைக் கண்டடைவதும், அந்தக் கானாப் பாடல் (நடுக்கடலுள் கப்பல எறங்கி தள்ள முடியுமா), எழவு ஆட்டம் எல்லாவற்றிலும் ஒத்ததிர்வதும் இயக்கு நருக்குக் கிடைத்த ஆகப்பெரும்வெற்றி. இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயண னின் பின்னணி இசையும் பாடல்களும் ரசிக்கத்தக்கவை. குறிப்பாக அந்த இரண்டுகானாப்பாடல்கள்: "ஆடிபோனா ஆவணி... நீ ஆள மயக்கும் தாவணி' நடுக்கடலுள கப்பல எறங்கி தள்ள முடி யுமா.. ஒரு தலையா காதலிச்சா வெல்ல முடியுமா. மெல்லிசை பாடல்களும் உருக விடும் ரகம்தான். பின்னணி இசை வெறும் ஒலியாகக் கடந்துவிடாமல் ஒரு மொழியாகி நம்முடன் கலந்துரையா டுவது சிறந்த அனுபவம்.

இளைஞர்களிடையே திணிக்கப்பட் டுள்ள கலாசாரவாதங்களை இந்தப்படம் வெகு எளிதாக கலைத்துப்போட்டிருக் கிறது. கதையின் போக்கு ஒரு வழமை யான சினிமாக் காட்சிகளின் தொகுப்பாக இல்லாமல் திரைக்கதையை விடவும் திரைக்காட்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. மொத்தத்தில் தமிழில் ஒரு மாற்று சினிமாவிற்கான முயற்சியை அட்டகத்தி சிறப்பாகச் செய்திருக்கிறது. அந்தவகையில் வரவேற்கவும் பாராட் டவும் தக்கதெனினும் மனதில்பட்ட சில நெருடல்களையும் சொல்லியாக வேண் டும்.

ஹீரோ சைட் அடிக்கும் எல்லாப் பெண் களும் மூக்கும் முழியும் ஒட்டிய வயிறு மாய் செக்கச் செவேலென்று இருக்கி றார்கள். கறுப்பாய் இருக்கும் ஹீரோவின் அண்ணன் மற்றும் நண்பனுக்குக் கூட செக்கச் செவேலென்ற காதலிகள் தான். நாசமாய்ப்போனகதாநாயகிக்கலாசாரம் ஒரு மாற்று சினிமாவில்கூட உடை படாதா?

குடியைப் பற்றிய பொதுப்புத்தி மனநிலையையே படம் பிரதிபலிக்கிறது. கல்லூரி மாணவர்களின் யதார்த்தத்தைப் படம்பிடித்துள்ள இயக்குநர், அவர்களின் சரக்கடிக்கும் யதார்த்தத்தைக் கவன மாகத் தவிர்த்திருக்கிறார். ஹீரோ, காதல் சோகத்தில் கூட பெட்டிக்கடைக்குப் போய் கூல்டிரிங்க்ஸ் தான் குடிக்கிறார். பேருந்தில் ஹீரோவை ஒரு பெண் இழுத்து இழுத்து உரசும் காட்சியை அப்படி வலிந்து புகுத்தியிருக்க வேண்டாம். என்னதான் கதாநாயகத்தனத்தின் மரணம் நிகழ்த்தப்பட்டாலும் கதாநாயக னுக்காகவே ஒரு முழுநீளக்கதையை இட்டுநிரப்புவது என்னும் மோசடிகளுக்கு அவ்வளவு எளிதில் மரணம் வாய்க்காது போலும்!

இறுதியாக, படம் பார்த்துக் கொண்டி ருக்கும் போது உறுத்திக் கொண்டே இருந்த ஒரு நினைவையும் சொல்லியாக வேண்டும்.. திவ்யா இல்லனா நதியா என்றுகடந்துபோகும்ஆணின்ஹீரோயிச த்தைப் போல் ரமேஷ் இல்லனா சுரேஷ் என்று கடந்துபோகும் பெண்ணின் ஹீரோயினிசம் என்றைக்குத் தமிழ் சினிமாவாகும்? ●

---

பாசத்தில் பாலூட்டுவதாய்
எண்ணி விடாதே!
பார்க்கும் பார்வையில்
தெரியுது திருட்டுத்தனம்
பார்த்து நடந்து கொள்!
பாசத்தைக் காட்டி
வேசத்தைக் கலைக்கும்
மானிடர் போல்
உன்பசி தீர்த்து – பின்
தன் பசி போக்க
உன்னையே புசித்துவிடும்!

எஸ்.எம். பாரூக்,
திக்குவெல்லை.

---

உன்னிடம்
சிக்கியதால்–(என் பசி தீர)
ஊட்டுகிறாய் பால்!
மனிதர்களிடம்
சிக்கியிருந்தால் – (தம் பசி தீர்க்க)
வார்த்திருப்பார் பால் !

சபேஸ், களுவாஞ்சிக்குடி.



இங்கு இரக்கம் இடம் மாறவில்லை
மனிதன் தான்
இன(ட)ம் மாறிவிட்டான்!
உலக சுழற்சியில் மிருகமாய் நீ......
மனிதராய் நாம்...!

எஸ். வைதேகி, நெல்லியடி.

---

மனிதனிடம் இரக்கம்
மலையேறி விட்டதால்
மிருகமாகி விட்டானவனென்று
கூறும் மாமனிதர்களே!
இங்கு பாருங்கள்
மிருகங்கள் காட்டும் இரக்கத்தை
இனியெப்போதும்
மிருகங்களேயென்று
மனிதர்களைத் திட்டி –எம்
உயர் குணத்தை
கேவலப்படுத்தாதீர்கள்!
இனியேனும் எம்மைப் போல்
மிருகமாய் கொஞ்சம்
வாழ்ந்து பாருங்கள்!!

எஸ்.வித்தியார்த்தனி
மோதர, கொழும்பு.


**கடைசிப் பக்கம்**

# இங்கிருந்து எங்கே?

இன்றைய நிலையில் ஒவ்வொரு தனி மனிதரும், சிலரோ பலரோ ஒன்று கூடியுள்ள குழுக்களும் அமைப்புகளும் எங்கிருக்கிறோம் என்பது பற்றிய புரிதல் இல்லாமலே எதையெதையோ செய்த வண்ணமாய் ஓடிக்கொண்டுதான் இருக்கிறோம்; எங்கே போகிறோம் என்று ஒரு எடுகோள் இருந்தாலும், எங்கிருந்து-எப்படிப் பயணிக்கிறோம் என்ற கரிசனையற்ற ஓட்டம் என்பதால், இடையிலேயே எங்குபோவது என்பதையும் மாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.

இந்த நெருக்கடிக்கு இன்று நடந்து கொண்டிருக்கிற பல்கலைக்கழக ஆசிரியர்களது போராட்டமே தலைசிறந்த எடுத்துக்காட்டு. கனக்கப் படித்த அந்தப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களுமே எங்கிருந்து எங்கு நோக்கிப் போராட்டத்தை முன்னெடுக்கிறோம் என்ற புரிதல் இல்லாமல்தான் தொடங்கி இருக்கிறார்கள். தங்களது சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தொடங்கியவர்கள் இன்றுதான் பொதுக் கல்வியையும் கவனம்கொண்டு, கல்விக்குத் தேசிய வருமானத்தில் 6 வீதத்தை ஒதுக்க வேண்டும் என்ற முழக்கத்தை முன்னிறுத்துகிறார்கள். இந்த அடிப்படைக் கோரிக்கை ஆரம்பத்திலேயே அவர்களுக்குள் இருந்திருக்க இடமுண்டாயினும் இதனையே முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற புரிதல் அப்போது இல்லாமல் போயிற்று. தாமுண்டு தம் படாடோபமுண்டு என்ற நினைப்பு முன்னாலே வந்து கண்ணைக் கெடுத்துவிட்டது. மக்கள் பிரச்சினையின் பகுதியாகத் தங்கள் பிரச்சினையை அப்போது காணத்தவறினர்.

அதனை உணர்த்தியது அரசு சார்பாளர்கள்தான்; நானும் பல்கலைக் கழகப் பேராசிரியர், இலட்சக்கணக்கில் சம்பளம் பெறுகிறேன்- இந்தக் கோரிக்கையெல்லாம் தவறு, உண்மையில் பாடசாலை ஆசிரியர்களது சம்பளமே அதிகரிக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் ஊடகங்களில் ஊடாடவிடப்பட்டன. பின்னரே பொதுக் கல்விக் கோரிக்கை முன்னணிக்கு வந்தது. சரி, ஆசிரியர்கள் சம்பளக் கோரிக்கையை முன்வைத்தால் இந்தக்கனவான்



குரல்கள் என்ன பேசும்? எத்தனை நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து ஆசிரியர்கள் போராடியபோதெல்லாம் இவர்கள் எங்கே போனார்கள்? அதனை முறியடிக்க அதற்கு எதிராக எதை நிறுத்தலாம் என்று அரசுக்கு ஆலோசனை தேடிக்கொண்டு இருந்திருப்பார்கள்.

ஒருவர்க்கு எதிராக மற்றவரை நிறுத்திப் பிரித்தாளும் சூழ்ச்சி பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு மட்டும் உரியதல்ல; ஆதிக்கசக்திகள் அனைத்தும் கையாளும் மலினப்பட்ட தந்திரோபாயந்தான். தற்போதைக்கு எமது அக்கறை எங்கிருந்து தொடங்குகிறோம் என்ற புரிதலின்மையால் ஏற்படும் இடர்பாடு பற்றியது என்பதால் அது குறித்து அலசுவோம். இங்கிருக்கிறோம் எனும் புரிதலைத் தனிநபர் கண்டுகொள்ளாதிருப்பது ஆச்சரியப்படத் தக்கதல்ல; மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் போராடுகிறோம் என்று செயற்படுகிற அமைப்புகளேகூட பிரச்சினையின் மையம் எங்கிருக்கிறது என்ற அக்கறையற்று எதையாவது முன் வைத்துப் போராடிக்கொண்டு இருந்தால் போதும் எனக் கருதிக் கருமமாற்றிக் கொண்டு இருப்பதாகவே இன்றைய நிதர்சனம் உள்ளது.

அவற்றின் தலைமை சக்திகள் மாறாத நிலைப்பாடுகளுக்குள் சிக்குப்பட்டுள்ளதும் புதிய மாற்றங்களைக் கண்டறிய இயலாமற் போவதற்குக் காரணமாயாகியுள்ளது. “மக்கள் சக்தியே வரலாற்றின் உந்து சக்தி” என்பவர்களும், அதன் அடிப்படை உண்மையைக் கண்டுகொள்ளாமல் தலைவர்களான தாமே வரலாற்றைப் படைப்பவர்கள் என மயங்கி விடுவதால் தன்முனைப்பு மிகையாகி மக்களிடமிருந்து கற்றுக்கொள்ள மறுக்கிறவர்களாகிறார்கள். இது சிறிய கட்சிகளில் உள்ள நிலைமை மட்டுமல்ல, உலக வரலாற்றுப் போக்கை மாற்றியமைத்த மகத்தான புரட்சிகளுக்குத் தலைமை தாங்கிய தலைவர்கள்கூட நெருக்கடியான சில சந்தர்ப்பங்களில் மக்கள் சக்திக்குமேல் தமது தலைமை ஆற்றல்மீது அதீத நம்பிக்கைகொண்டு செயற்பட்ட அனுபவங்கள் ஏற்கனவே வரலாற்றுத் தடங்களாயுள்ளன. பொதுமைப் புத்துலகம் படைப்பதில் மாபெரும்சாதனைகளைஎட்டியசோசலிச நாடுகளில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு பல்வேறுகாரணங்களோடு தலைமையில் இருந்த இப்போக்கும் அடிப்படைக் காரணமாயிருந்தது. “படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவில்” என்று ஒரு சொல்லடை எம்மத்தியில் உண்டு; அதனை நினைவுபடுத்துவதாகவே, மக்கள் சக்தியே வரலாற்றைப் படைக்கிறது எனச் சொல்லிக்கொண்டு தலைவர்கள் மக்களை அணிதிரட்டி வென்றெடுத்த சில சாதனைகளுக்குத் தலைமை தாங்கியதைத் தமது மாபெரும் பங்களிப்பாய் மயங்கி செயற்படுவதிலும் காண்கிறோம். கூட்டுத் தலைமை மறுக்கப்பட்டு பெரும் சாதனைகளுக்குத் தலைமை தாங்கிய தானே சரியாகச் சிந்தித்துச் செயற்படுவதாக ஒரு தலைவர் எண்ணிக் கருமமாற்றும்போது நாட்டை முன்னேற்றத் தவறி, அவரை வழிபாடு செய்தவாறு மக்கள்மீது ஆதிக்கம் புரிய எத்தனிப்பவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்துகிறவராவார்.

அவ்வாறு அல்லாது பல அல்லற்பாடுகளில் மக்களை ஆட்படுத்துகிற எமது தலைவர்களும் தமது ‘சரியான’ தலைமைப் பாத்திரம் பற்றிப் புலம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்தச் சோசலிச நாடுகளின் தலைவர்களாவது மகத்தான சாதனைகளோடு

*(39ஆம் பக்கம் பார்க்க...)*

MOST FAVOURITE SRI LANKAN WEBSITE BEST WEB 2010

'வெண்கல' விருது வென்ற யாழ் மண்
இணையத்தளத்திற்கு சிறு விளம்பரதாரர்களை
அன்புடன் வரவேற்கிறோம்!

அனைத்து சிறு விளம்பரங்களும் முற்றிலும் இலவசம்!

யாழ் மண்
Yarl Mann Connect with Jaffna

www.yarlmann.lk



மேலதிக தகவல்களுக்கு : +94-773-186-987




Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.